# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 052 வள்ளுவர் ஆண்டு: 2046 | தை 03, சனிக்கிழமை 17.01.2015


**வானிலை**
சேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## வடக்குக்கான பயணத் தடை நீக்கம்

கொழும்பு, ஜன.17
வடபகுதிக்கு வரும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பக்.25

## குடாவில் கட்டுமீறியது வாள்வெட்டு

குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. கடந்த 14 நாள்களில் 6 இடங்களில் வாள் வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்துள்ளார். பக்.04

## மன்னார் எண்ணெய் விரைவில் பயன்பாட்டுக்கு!

கொழும்பு, ஜன. 17
மன்னாரில் உள்ள எண்ணெய் வளத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று புதிய அரசின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சராக கடமைகளை நேற்று ஆரம்பித்த சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
புதிய அரசின், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சராகப் கடந்த திங்கட் பக்.26

## பள்ளிவாசலுள் இளைஞர் குத்திக் கொலை

கொழும்பு, ஜன. 17
பள்ளிவாசலுக்குள் வைத்து இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொழும்பு, வாழைத்தோட்ட பொலிஸ் பிரிவு புதுக்கடை, அப்துல் ஹமீத் வீதியில் உள்ள பள்ளிவாசலிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதான மொஹம்மட் ரவூப் பக்.26

## மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர் மக்கள்

### போராட்டத்தை அடுத்து மணல் அகழத் தடை விதித்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜன.17
சட்டவிரோத மண் அகழ்வில் மகேஸ்வரி நிதியம் ஈடுபடுகின்றது என்று குற்றஞ்சாட்டிய வடமராட்சி கிழக்கு மக்கள், அதற்கு எதிராக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். மக்களின் போராட்டத்தை அடுத்து வடமராட்சி கிழக்கில் மகேஸ்வரி நிதியம் மண் அகழ்வில் ஈடுபடுவதற்கு பொலிஸார் தடை விதித்தனர். கவனவீர்ப்பு போராட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், குறித்த நிறுவனத்தைச் சேர்ந்தோருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது. பொலிஸார் தலையிட்டு, இந்தப் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படும் வரையில் மணல் அகழ்வதற்குத் தடை விதித்ததுடன், மீறி அகழ்வில் ஈடுபட்டால் வாகனங்கள் பறிக்கப்படும் என்றும் எச்சரித்தனர். பக்.02



# பதுக்கிய பணம் சிக்கியது

### மஹிந்தவின் கட்டுப்பாட்டிலிருந்த அலரி மாளிகையிலிருந்து



யாழ்ப்பாணம், ஜனவரி 17
மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் அவரது கட்டுப்பாட்டில் இருந்த அலரி மாளிகையில் இருந்து பெருந்தொகைப் பணமும், நகைகளும் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அலரி மாளிகைக்குள் புதிது புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டமையும் தெரியவந்துள்ளது.
புதிய அரசின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பக்.26

## மகேஸ்வரி நிதியத்தால் இழந்த பணத்தை பெற நடவடிக்கை

### சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17
மகேஸ்வரி நிதியம் மூலம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்டவிரோதமாகப் பெற்றுக் கொண்ட பணத்தை மீள மக்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
மகேஸ்வரி நிதியத் பக்.26

## வாய் திறந்திருந்தால் சுடப்பட்டிருப்போம்

யாழ்ப்பாணம், ஜன. 17
'நாங்கள் இதற்கு முதல் வாய் திறந்திருந்தால் நாங்களும் சுடப்பட்டிருப்போம்' என்று மகேஸ்வரி நிதியத்தின் பிரதிநிதிகளிடம் பொதுமக்கள் காட்டமாகத் தெரிவித்தனர்.
மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக நாகர்கோவிலில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது மக்கள் பிரதிநிதிகள், பக்.25

## வடக்குத் தொழிற்சாலைகளை இயக்குவதற்கு ஆவன செய்க

### யாழ்.வணிகர்கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.17
வடபகுதியில் இயங்காத நிலையில் உள்ள தொழிற்சாலைகளை மீள இயங்குவதன் ஊடாக, வடபகுதியின் பொருளாதாரத்தை உயர்த்தி மக்களின் வாழ்கை மேம்பட புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது யாழ். வணிகர் கழகம்.
புதிய அரசியல் மாற்றம் குறித்து வணிகர்கழகத்தின் எதிர்பார்ப்பு தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று யாழ். வணிகர்கழக மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த வணிகர்கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்தை ஏற்று பக்.25

## விமான நிலையம், துறைமுகத்தை மீள இயக்குங்கள்

யாழ்ப்பாணம்.ஜன.17
இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வர்த்தக ரீதியான தொடர்பை மேலும் பலப்படுத்துவதற்கு காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் என்பவற்றை இயக்குவதற்கு இரு நாட்டு அரசுகளும் பக்.26

## அலரி மாளிகை ரணில் வசம்

கொழும்பு, ஜன. 17
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்தப்பட்டு வந்த அலரி மாளிகையில், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கடமைகளை நேற்று ஆரம்பித்தார். பக்.26

## தேசிய நிறைவேற்றுச் சபை நியமனம் ஊழல் விசாரணை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 17
நல்லாட்சியை முன்னெடுக்கும் நோக்குடன் தேசிய நிறைவேற்றுச் சபை ஒன்றை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க, இரா.சம்பந்தன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தலைவர்கள் இந்தச் சபையின் உறுப்பினர்களாக உள்ளனர். நேற்று முதல்தடவையாகக் கூடிய இந்தக் குழு, கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் விசாரணைகளை பக்.25

## மஹிந்தவின் வசமிருந்த இறுதி·அதிகாரமும் பறிப்பு

### சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானார் மைத்திரிபால

கொழும்பு, ஜன. 17
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.
முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் பக்.25


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 6 நாட்களில்
JITF 2015

செய்திகள்

# மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக நேற்று கிளர்ந்தெழுந்தனர் மக்கள்

## போராட்டத்தை அடுத்து மணல் அகழ உடன் தடை விதித்தனர் பொலிஸார்

ப.1 விரிவு





யாழ்ப்பாணம், ஜன. 17

சட்டவிரோதமாக மணல் அகழ்வில் மகேஸ்வரி நிதியம் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டிய வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்று அதற்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். போராட்டத்தை அடுத்து, மகேஸ்வரி நிதியம் வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

அதனையும் மீறிச் செயற்பட்டால் உடனடியாக வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நீண்டகாலமாக மணல் அகழ்வில் மகேஸ்வரி நிதியம் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிதியம், யாழ்ப்பாணத்திலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமானது.

நாகர்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் குறித்த நிதியம் மணல் அகழ்வில் ஈடுபடுவதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். இதனால் கடல் நீர் உட்புகும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதனால் இந்த நிதியத்தின் சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரி, வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

நாகர்கோவில் சந்தியிலுள்ள குறித்த நிதியத்தின் விநியோக நிலையத்தை நேற்றுக் காலை 7 மணிக்கு முற்றுகையிட்ட பொதுமக்கள் அங்கிருந்து மணல் ஏற்றிய உழவு இயந்திரங்களை எடுத்துச் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். காலை 9 மணிவரையில் இந்த முற்றுகைப் போராட்டம் இடம்பெற்றது.

பொதுமக்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே. சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், இ.ஆனால்ட் மற்றும் பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் பூ.சஞ்சீவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வலி.தென் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் குடத்தனையில் உள்ள மருதங்கேணிப் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ம.திருலிங்கநாதனுடன் சந்திப்பு நடத்தினர். இதன்போது பிரதேச செயலாளர், மகேஸ்வரி நிதியத்தின் மணல் அகழ்வுக்குக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குப்பின்னர் அனுமதிவழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் மீளவும் மகேஸ்வரி நிதியத்தின் விநியோக இடத்துக்கு வந்தனர். அங்கு மகேஸ்வரி நிதியத்தின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டு ரஜீவ் என்பவர் வந்தார். அவர், இது தனது வேலை செய்யும் இடம் என்றும், இங்கு ஒருவரும் வர முடியாது என்றும் சொல்லிக் கொண்டுஉழவுஇயந்திரங்களை எடுக்குமாறு தனது பணியாளர்களுப் பணித்தார். மக்களின் எதிர்ப்பையும் மீறி உழவு இயந்திரங்களை எடுக்குமாறு அவர் கூறினார்.

ஆனாலும் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் அதற்கு இம்மியளவும் இடம் கொடுக்கவில்லை. இதனால் தனது முயற்சியில் தோல்வியடைந்த ரஜீவ் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்களுடன் சீறிச்சினந்தார். தன்னிடம் அனுமதிப் பத்திரம் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டு கையில் எதனையோ வைத்துக் காண்பித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் அதனை மக்களுக்குக் காட்டவில்லை.

வாக்குவாதம் வளர்ந்தது. ஒரு கட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் மதிக்காது, அநாகரிகமான வார்த்தைகளால் திட்டினார் ரஜீவ். அத்துடன் மக்கள் பிரதிநிதிகளைத் தாக்குவதற்கும் அவர் எத்தனித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பொலிஸார் வந்து சேர்ந்தனர். அவர்கள் பொதுமக்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் சமாதானப்படுத்தினர். பொலிஸாரிடம், ரஜீவ் என்ற நபர் தான் கையில் வைத்திருந்த அனுமதிப் பத்திரத்தைக் காண்பித்தார். இதன்போது உதவிப் பொலிஸ் பரிசோதகர் லலித் பெத்த, இது முறையற்ற ரீதியில் எடுக்கப்பட்டதென்றே பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்று குறிப்பிட்டார். ரஜீவ் என்பவர் உடனடியாக கைத்தொலைபேசியில் யாருக்கோ தொடர்பை ஏற்படுத்தி, பேசுங்கள் என்று பொலிஸாரிடம் கைத்தொலைபேசியைக் கொடுக்க முற்பட்டபோது, பொலிஸார் அதனை வாங்க மறுத்துவிட்டனர். எமக்கு எழுத்து மூலக் கடிதம் தேவை என்று தெரிவித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பொலிஸார், இந்தப் பிரச்சினையில் அரச அதிபர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுத் தீர்வு காணப்படும் வரை, மணல் அகழ்வில் மகேஸ்வரி நிதியம் ஈடுபட முடியாது. அவ்வாறு மீறி ஈடுபட்டால், வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவித்தனர்.

இதன்போது, கொண்டு செல்லத் தயாராக இருந்த மணல் ஏற்றிய உழவு இயந்திரங்களிலிருந்த மணலை மீளவும் பறித்த பொலிஸார், வாகனங்களை உடனடியாகவே வெளியேற்றி விட்டுப் புறப்பட்டனர். (த-5-109)

## மஹிந்த பதுக்கி வைத்திருந்த பொருள்கள் கொழும்பில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்தவினால் அன்பளிப்பாக வழங்கப்படவிருந்த பெருமளவு பொருள்கள் இறுதி நேரத்தில் வழங்கப்படவில்லை. அவை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்தநிலையில் அவை நேற்று மீட்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின்போது, அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு பொருள்களை மக்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு திட்டமிட்டிருந்தார். தனது கையெழுத்துடன் கூடிய கைக் கடிகாரம், கைத்தொலைபேசி, அவரது படம் பொறிக்கப்பட்ட தேநீர்க் கோப்பை, பீங்கான்கள், கணினிகள் என்பன இவ்வாறு விநியோகிக்கப்பட இருந்தன.

இருப்பினும் தேர்தல்கள் ஆணையாளரின் நடவடிக்கையினால் அவ்வாறு வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. இந்தப் பொருள்கள் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவற்றை நேற்றுப் பொலிஸார் மீட்டுச் சீல் வைத்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி தங்கொட்டுவையில் அமைந்துள்ள போசிலன் நிறுவனத்திடமிருந்து இந்த மூன்று கொள்கலன்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கான உரிமையாளர்கள் என்று இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## தவராசாவின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 17

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரான ஈ.பி.டி.பியின் தவராசா மற்றும் அங்கஜன் ஆகியோருக்குத் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

தவராசா மற்றும் அங்கஜனுக்கு யாழ்.பொலிஸ் பிரிவினால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால் தாம் அவ்வாறு வழங்கிய பொலிஸ் பாதுகாப்புக்களை மீளப் பெற்றுப் பொலிஸாரையும் மீள அழைத்து விட்டோம். அங்கஜனுக்கு பாதுகாப்பு அமைச்சு மூலம் 4 பேர் கொண்ட பொலிஸ் பாதுகாப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த-4)

## 2 பாடசாலை கிணறுகளில் கழிவு ஓயில்

யாழ்ப்பாணம், ஜன. 17

கழிவுஓயில் கிணறுகளில் அதிகரித்து வரும் நிலையில் தெல்லிப்பழையில் இரண்டு பாடசாலைகளில் உள்ள கிணற்று நீரில் ஓயில்கலந்திருப்பது தெரியவந்து அது தொடர்பில் நீதிமன்றுக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள 12 பாடசாலைகளின் கிணறுகளில் ஏற்கனவே ஓயில் கலந்துள்ளது. தெல்லிப்பழை பிரிவில் ஏற்கனவே 4 பாடசாலைகளது கிணறுகளில் ஓயில் கலந்திருப்பது தெரியவந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மேலும் இரண்டு பாடசாலைகளின் கிணறுகளில் ஓயில் கலந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இரண்டு வைத்தியசாலைகளில் உள்ள இரண்டு கிணறுகளில் மாத்திரம் இதுவரை ஓயில் கலந்திருப்பது தெரியவந்துள்ளது என்று சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)




## இன்றைய பேஸ்புக் தத்துவம்

தற்கொலை, கொலை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? உங்கள் முகத்தை நீங்கள் கண்ணாடியில் பார்த்தால் அது தற்கொலை. உங்கள் படத்தை என்னிடம் கொடுத்துப் பார்க்கச் சொல்வது கொலை.

நேரத்தைச் சேமிக்க வந்ததாக நினைக்கும் கைபேசியும் இணையமும்தான் அதிக நேரத்தை தின்கின்றன!




## நயன்தாராவுக்கு ஏன் இந்த முடிவு?



காதல் தோல்வியடைந்தவர்கள் நிம்மதியைத் தேடி ஆன்மிகத்துக்கும் இன்னும் சிலர் தேவதாஸ் பாணியில் போத்திலுக்கும் தாவி விடுகின்றனர்.

சிம்பு, பிரபுதேவா என்று இருவரிடம் காதல் தோல்வியில் துவண்டுபோனவர் நயன்தாரா. அவர் தேர்வு செய்திருக்கும் பாதை சிலரை அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது. இனி காதலும் வேண்டாம், கல்யாணமும் வேண்டாம், துறவறம் பூண்டுவிடலாம் என்று அவர் எண்ணி இருப்பதாக கூறப்படுகிறது.

அதற்கு முன்னோட்டமாக அவர் சன்னியாசிகளுடன் அமர்ந்து அமைதி தேடுகிறாராம். கடந்த ஆண்டு இமயமலை சென்ற அவர் அங்கிருந்த சாமியார் களுடன் மனம்விட்டும் பேசி ஆறுதல் தேடினார்.

மனச் சஞ்சலத்தில் இருக்கும் நயன், சில நடிகைகள் எடுத்ததுபோல் துறவறம் பூணும் முடிவை எடுக்கும் வாய்ப்பு உள்ளதாக பேச்சு உள்ளது. தற்போது பட எண்ணிகையை அவர் வெகுவாக குறைக்க ஆரம் பித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## நாயின் சோகக் கதை

7 வருடங்களாக, 14 ஆயிரம் பேரின் வீட்டில் வளர்ந்த நாயொன்றின் கதை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இங்கிலாந்தின் வடகிழக்கில் உள்ள தலைநகரத்தில், தெரு நாய்களை வளர்ப்பதற்கான அறக் கட்டளையொன்று காணப்படுகின்றது. இந்த அறக்கட்டளையில், ஜெட்ஸ் என்று அழைக்கப் படும் நாயொன்றும் வளர்க்கப்பட்டது.

இந்த அறக்கட்டளையானது நாய்களை விற் பனை செய்தும் வந்தது. இந்நிலையில் ஒருநாள் ஜெட்ஸும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஜெட்ஸை வாங்கிய நபர், ஒரு சில நாள்களில் அதனை மீண்டும் அறக்கட்டளைக்கே கொண்டுவந்து விட்டுவிட்டார். இவ்வாறு ஜெட்ஸை வாங்கிச் செல்பவர்கள், அவர்களது சூழ்நிலை மாற்றத்துக்கேற்ப, ஜெட்ஸை வளர்க்க முடியாது மீண்டும் அறக்கட்டளைக்கே கொண்டுவந்து விட்டுவிடுகின்றனர். இந்நிலையில், சுமார் 7 வருடங்களாக 14 ஆயிரம் பேர் ஜெட்ஸை வளர்த்து வந்துள்ளனர்.

தற்போது மீளவும் அறக்கட்டளைக்கு வந்துள்ளது ஜெட்ஸ்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாகப் பேசுவது நல்லது.

**இடபம்:** உறவினர்கள், குடும்ப நண்பர்களிடம் முக்கிய வியங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றி பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. வாகனத்தை ஓட்டும் போது கவனம் தேவை.

**மிதுனம்:** எடுத்த முடிவை செயற்படுத்தும் முன் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசிப்பது நல்லது. எந்த ஒரு காரியத்திலும் அவசர முடிவு எடுக்கத் தூண்டும்.

**கடகம்:** வீண் அலைச்சலுக்கு பிறகே எந்த ஒரு காரியமும் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப் பவர்கள் மேலதிகாரி சொல்லிய ஒரு வேலையை முடிக்க அலைந்து திரிய வேண்டி இருக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தில் விருந்தினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம். வெளிவட்டார பழக்க வழக்கங்களை குறைத்துக் கொள்வது நல்லது.

**கன்னி:** வீண் அலைச்சலைத் தவிர்ப்பது முன் னேற்றத்திற்கு உதவும். திட்டமிட்டபடி காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும்.

**துலாம்:** வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிச் சென்று விடுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது. மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும்.

**விருச்சிகம்:** தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்குபின் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகச் செயற்பட்டு பாராட்டுப் பெறுவார்கள்.

**தனுசு:** உங்கள் வாழ்வுக்கு பயன்படாத வகையில் சிலர் பேசுவதைக் கவனிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டியும், அதனால் மனதில் பதற்றமும் ஏற்படலாம்.

**மகரம்:** குடும்பத்தில் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்களின் நலனுக்காக பாடுபடுவீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதில் துணிச்சல் ஏற்படும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும்.

**கும்பம்:** முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளை கண்டால் ஒதுங் கிச் சென்று விடுவது நல்லது. உத்தியோகத்தில் முன் னேற்றம் காணகூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**மீனம்:** தடை, தாமதம் உண்டாகும். புதிய முயற் சிகளை தள்ளிப் போடுவது நல்லது. எதிர்பார்த்த சில தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

# செய்திகள்

## இளைஞரை இராணுவம் சுடவில்லை

யாழ்ப்பாணம், ஜன 17
நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற கலவரத்தின்போது இளைஞர் மீது இராணுவத்தினர் சூடு நட்த்தவில்லை என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு பி.விமலசேன நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாவாந்துறை கலவரத்தின்போது, இராணுவம் இளைஞர் மீது சூடு நடத்தியுள்ளது. இவ்வாறு சுடுவதற்கு அனுமதி உள்ளதா என ஊடகவியலாளர்கள் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த அவர்,

கடந்த 2 ஆம் திகதி நாவாந்துறையில் இரு பிரிவினருக்கு இடையில் கலவரம் இடம்பெற்றது. இரு தரப்பினரும் மோட்டார் குண்டுகள் வீசிக் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதன்போது பொலிஸார் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் எந்தவித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை. அத்துடன் கலகம் அடக்கும்போது அங்கு குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் இளைஞர் மீது சுட்டதாகக்காயப்பட்ட இளைஞர் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை.யார் சுட்டதென்று தெரியாதென இளைஞர் கூறியுள்ளார்–என்று குறிப்பிட்டார். (த–106)

## தென்மராட்சியில் 38பேருக்குடெங்கு

தென்மராட்சி,ஜன.17
தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குவினால் பீடிக்கப்படுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் வரை 38பேர் டெங்கு வினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகச் சாவகச்சேரி சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த–9)

# கட்டு மீறியது குடாநாட்டில் வாள்வெட்டு

### 14 நாள்களில் 6 இடங்களில் வெட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஜன 17
யாழ்.குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. அதில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் சம்பவ இடங்களும் கூட அதிகரித்துள்ளன. யாழ்.குடாநாட்டில் புது வருடம் பிறந்து கடந்த 14 ஆம் திகதி வரை பரவலாக 6 இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் வழங்கிய தரவுகளிலிருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கோப்பாய் மத்தியில் கடந்த 5 ஆம் திகதி ஒருவர்மீதுவாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.நாவற்குழியைச் சேர்ந்த ஒருவர் மீது கடந்த 2 ஆம் திகதி வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதே இடத்தில் மறுநாளும் வாள்வெட்டு நடத்தப்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளார். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அளவெட்டி தெற்கில் ஒருவர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். வெட்டியவர்கள் தொடர்பில் எவரும் கைதாகவில்லை. தெல்லிப்பழையில் வைத்து மானிப்பாய் பிரதேச சபை வீதியைச் சேர்ந்த ஒருவர் வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றுக்கு வழக்குக்குச் சென்றுவிட்டுத் திரும்பியவர் மீது நீதிமன்றுக்கு அருகில் வைத்து வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களே வாள் வெட்டு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனுடன் தொடர்புடையவர்களும் கைது செய்யப்படவில்லை. யாழ்.வேம்படி வீதியில் வைத்து போதகர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவருக்கு ஏற்பட்ட காயம் வெட்டுக் காயம் என்று தெரிவிக்கப்படுகிறது. அதனுடன் தொடர்புடையவர்களும் கைது செய்யப்படவில்லை.

இவ்வாறு வாள்வெட்டுச் சம்பவங்கள்குறைவின்றித்தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குடாநாட்டில் கடந்த 2013 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கத்தொடங்கி கடந்த வருடம் பல இடங்களில் பலர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர். சிலர் உயிரிழந்தும் உள்ளனர். புது வருடம் தொடங்கி 14 நாள்களுக்குள்ளேயே இத்தனை சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இது தொடர்ச்சியாக இடம்பெறுமா என்று பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கும் நிலை யில் அது தொடர்பில் விசா ரணை மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (த–4)



பாப்பரசர் மடுத் திருத்தலத்துக்கு வருகைதந்தபோது அங்கு அவருடைய கடைக் கண் பார்வைக்காக நடு வெயிலில் காத்திருந்து அன்பைப் பரிமாறும் எம் உறவுகள். (த–21)

## சித்தப்பாவை கத்தியால் குத்தினார் பெறாமகன்

தென்மராட்சி, ஜன.17
தைப்பொங்கல் தினத்தன்று இரு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இடம்பெற்ற சினேகபூர்வக் கரப்பந்தாட்டப் போட்டியில் குழப்பத்தை விளைவிக்க முயன்றவேளை வீட்டுக்கு அழைத்துச் சென்ற சித்தப்பாவை கத்தியால் குத்தினார் பெறாமகன். அத்துடன் மற்றொரு சித்தப்பாவின் வீட்டையும் தீயிட்டு எரித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கெற்பேலி மேற்கில் இடம்பெற்றது.

வயிறு மற்றும் தோள் பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான சின்னத்துரை சிவசுப்பிரமணியம் (வயது–36) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

தைப்பொங்கலையிட்டு கெற்பேலி விளையாட்டுக்கழகத்துக்கும் சங்கத்தானை விளையாட்டுக்கழகத்துக்குமான சினேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. பெருந்திரளான மக்கள் இதனைப் பார்வையிட்டனர்.

போட்டியை ரசித்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் மத்தியில் மதுபோதையில் குழப்பம் விளைவிக்கும் போக்கில் செயற்பட்ட பெறாமகனை அவரது சித்தப்பா கையில் பிடித்து வெளியேஅழைத்துவந்துள்ளார்.அவ்வேளை இடுப்பில்மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சித்தப்பாவின் வயிற்றிலும் தோளிலும் குத்தியுள்ளார் பெறாமகன். இதனைக் கண்ட அங்கு நின்றவர்கள் காயமடைந்தவரைச் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதித்தனர். கத்தியால் குத்தியவரைக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். பொலிஸாரால் இரவு விடுவிக்கப்பட்ட இவர் அப் பகுதியில் உள்ள மற்றொரு சித்தப்பாவின் வீட்டுக்கு தீ வைத்துவிட்டுத் தப்பியோடியுள்ளார். வீட்டுக்காரர் சிறிது தூரத்தில் உள்ள சகோதரியின் வீட்டுக்குச் சென்றதால் தகவல் கிடைத்து அங்கிருந்து வருவதற்குள் வீடு முழுவதும் எரிந்து சாம்பரானது. வீட்டுக்குள்ளிருந்த ஒரு லட்சம் ரூபா பணம் உட்பட அனைத்துப் பொருள்களும் தீயில் எரிந்து சாம்பராகியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–9)

# தேர்தலின்போது யாழில் இப்படியும் நிதி மோசடி

யாழ்ப்பாணம், ஜன 17
ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்.நகர வர்த்தகர்களிடமிருந்துதனிநபர் ஒருவர்பெருந்தொகைப் பணத்தைச் சுருட்டியுள்ள சம்பவம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இல்லாத கட்சி ஒன்றின் பெயரைச்சொல்லிபணத்தைக்கோரிய அந்த நபருக்கு, யாழ். வர்த்தகர்கள் பலரும் தாராளமாகப் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைச் சாட்டாக வைத்துப் பணம் கறக்கும் முயற்சியில் ஆசாமி ஒருவர் இறங்கியுள்ளார். அவர் சிறிலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் என்ற கட்சியைச் சேர்ந்தவர் என்று தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அங்கம் வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரை குறித்த ஆசாமி பயன்படுத்தியுள்ளார்.

இதனால் யாழ்.நகர் வர்த்தகர்கள் பலரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அங்கம்தான் சிறிலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியம் என்று கருதியுள்ளனர். எனவே தமக்கு ஏன் வீண் வம்பு என்று கருதி– அச்சத்தின் காரணத்தினால் குறித்த ஆசாமிக்கு லட்சக் கணக்கான பணத்தை வழங்கியுள்ளனர். குறித்த ஆசாமியும், தேர்தல் செலவுகளுக்காக என்று தெரிவித்தே பணத்தைக் கறந்துள்ளார்.

என்.அரவிந்தன், உதவித் தலைவர், கலைவேம்படி, சுழிபுரம். தொலைபேசி இலக்கம் 0245611245, 0789404444, 0772785189 என்பதையும் குறிப்பிட்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வர்த்தகர்களிடம் குறித்த ஆசாமி வழங்கியுள்ளார். அத்துடன் தனது தனிப்பட்ட பெயருக்கே காசை வங்கியில் வைப்பிலிடும்படி பணித்துள்ளார்.

யாழ்.நகரின் பல வர்த்தகர்கள் இவ்வாறு வங்கியில் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். தற்போது அவ்வாறு ஒரு கட்சியில்லை என்று தெரிந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை, வர்த்தகர் ஒருவர் யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன், எனக்கு முறைப்பாடு செய்த நபர் தான் 20 ஆயிரம் ரூபாயை வங்கியில் காசோலையாக வைப்பிலிட்டதாகவும் பின்னர் சந்தேகம் வந்தமையினால், அந்தக் காசோலையை வங்கி ஊடாக ரத்துச் செய்ததாகவும் தெரிவித் தார். ஏனைய வர்த்தகர்கள் இவ்வாறு வங்கியில் வைப்பிலிட்டமையையும் அவர் எனக்குத் தெரியப்படுத்தினார்.

நடவடிக்கை மேற் கொள்ளுமாறு முறைப்பாடு செய்தார். இருப்பினும் எனது அதிகாரம், கடந்த சனிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.

நான் இப்போது உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மாத்திரமே. எனவே பொலிஸில் இது தொடர்பாக முறைப்பாடு செய்யுமாறு பணித்துள்ளேன்–என்றார். (த–5)

# பதவி உயர்வு கிடைத்தும் பதவியேற்க முடியாத நிலை

## பதிலீட்டு அதிகாரிகள் நியமிக்கப்படாமையால்

யாழ்ப்பாணம்,ஜன.17

வடக்குமாகாணசுகாதாரதிணைக்கள உயர் அதிகாரிகளுக்கு இடமாற்றம் மற்றும் பதவியுயர்வு வழங்கப்பட்டபோதிலும் இவர்கள் பணியாற்றிய இடத்துக்கு பதிலீடாக அதிகாரிகள் நியமிக்கப்படாததால் புதிய பதவிகளை ஏற்க முடியாத நிலையில் தொடர்ந்தும் அதே பதவியில் பணியாற்றி வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் இ.கேதீஸ்வரன் வட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்ட போதிலும், மாற்றீடு அதிகாரி இன்னமும் நியமிக்கப்படாததால் தமது கடமைகளைக் கையளித்து விட்டுச் செல்ல முடியாமல் தொடர்ந்தும் அதே பதவியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளுக்கு ஏற்பட்ட வெற்றிடங்களுக்குச் சுகாதார அமைச்சினால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் வடமாகாணத்திலிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

### ஆலயத்துக்கு சென்ற பெண்ணை தீண்டியது பாம்பு

தைப்பொங்கலை முன்னிட்டு ஆலயத்துக்குச் சென்ற பெண், பாம்பு தீண்டியதனாலும்,ஆலயத்தில் பொங்கலில் ஈடுபட்ட ஆண் கொதி நீர் ஊற்றப்பட்ட நிலையிலும் சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் தெற்கில் வசிக்கும் அகிலன் பத்மகலா (வயது-33) என்ற குடும்பப் பெண் தனங்களப்பில் உள்ள தனது வீட்டில் பொங்கலை முடித்துக்கொண்டு அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்ற வேளை வழியில் காணப்பட்ட பூக்களைப் பிடுங்கிய போது பாம்பினால் கடியுண்டார். ஆலயத்தில் பொங்கலில் ஈடுபட்ட மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த சிவசம்பு சிவயோகதாஸன் (வயது-49) என்பவர் கொதி நீர் ஊற்றிக் காயமடைந்தார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்த இவருவரும்சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

### குடும்பஸ்தரை வழிமறித்து தாக்கியது கும்பல்

வீதியில் சென்ற குடும்பஸ்தரை வழிமறித்துத் தாக்கியது கும்பல். இந்தச் சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இரவு கைதடி மத்தியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராமன் மயிலன் (வயது-58) என்பவரே காயமடைந்தார். காயங்களுக்கு இலக்கான குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)




நேற்று முன்தினம் கிளிநொச்சி மலையாளபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 1008 பானைகள் வைத்துத் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொண்டனர். (த)

### எம்.ஜி. ஆரின் சிலை மூடப்பட்ட நிலையில்

தமிழக முன்னாள் முதலமைச்சரும், புரட்சி நடிகருமான எம்.ஜி. ஆரின் உருவச் சிலை நிதியின்மையால் மூடிக்கட்டியபடி கடந்த ஒருவருடமாகவைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசிக்கும் இ.சண்முகநாதன் என்ற எம்.ஜி.ஆரின் ரசிகர் தனது சொந்த முயற்சியில் எம்.ஜி. ஆரின் உருவச் சிலையை அந்தப் பகுதியில் உள்ள உதயசூரியன் சனசமூக நிலையத்துக்கு முன்பாக நிறுவிய போதிலும் போதியநிதியின்மையால்வேலை பூர்த்தி செய்யப்படாமலும், திறப்பு விழா செய்ய முடியாத நிலையிலும் அது மூடிக்கட்டி வைக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர் இறந்த பின்னர் உதயசூரியன் கிராமத்தைச் சேர்ந்த ரசிகர்களால் உருவச் சிலை நிறுவப்பட்டிருந்தது. கடந்த 2000 ஆம் ஆண்டு போர் வேளை அது சேதமாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் சிலை யைப் புனரமைக்க கிராம மக்கள் முன்வராததால் சண்முகநாதன் தனித்துநின்று புதிதாகச் சிலையை நிறுவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நெல் கொள்வனவை ஆரம்பிக்கக் கோரிக்கை



கிளிநொச்சி, ஜன.17

காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நெல் சந்தைப்படுத்தல் சபையினரை நெல் கொள்வனவை மேற்கொள்ளுமாறு நெற் செய்கையாளர்கள் கேட்டுள்ளனர்.

காலபோக நெற்செய்கை இம்முறை அமோக விளைச்சல் கண்டுள்ளதை அடுத்து ஒரு மூடை நெல்லை (75கிலோ) தனியார் 2ஆயிரத்து 200 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்றனர்.

நெல் உற்பத்திக்கான செலவு இம்முறை அதிகரித்துள்ளதால் நெற்செய்கையாளர்கள் தமக்கு ஏற்பட்ட செலவுகளைக் கருத்தில் கொண்டு தனியாருக்கு நெல்லை வழங்கப் பின்னடித்து வருகின்றனர்.

நெல் அறுவடை ஆரம்பத்தில் 75 கிலோ கொண்ட மூடை 2ஆயிரத்து 200 ரூபாவாக கொள்வனவு செய்யப்படினும் நாள் செல்லச்செல்லவிலையில்வீழ்ச்சி ஏற்படலாமென நெற் செய்கையாளர்கள் கருதுகின் றனர்.

இந்த நிலையில் நெல் சந்தைப் படுத்தும் சபையினர் நெற்செய்கையாளர்களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் கேட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பட்டம் விட்டோரால் நெற்பயிர்கள் நாசம்

கரணவாய்,ஜன. 17

பட்டம் ஏற்றுவோரால் துவாளி, வல்லை உட்பட்ட பகுதிகளிலுள்ள பெருமளவான நெற்பயிர்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தைத்திருநாளான நேற்று முன் தினம் வடமராட்சிப் பகுதியில் பட்டம் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறியவர் முதல் பெரியவர்கள் வரை தம்மால் உருவாக்கப்பட்ட பட்டங்களைக் காற்று அதிகம் வீசும் வல்லைவெளி, துவாளி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கொண்டு சென்று ஏற்றினர். இதில் உடுப்பிட்டி, தொண்டமானாறு, இமையாணன் மற்றும் கரணவாய் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் மிக உயரமாகக் கட்டப்பட்ட வகை வகையான பட்டங்களைவல்லை,துவாளிபோன்றபகுதிகளிலஏற்றினார். போதிய காற்று வீசாமையாலும், பாரம் காரணமாகவும் வானில் பறக்க முடியாது பட்டங்கள் வயலில் விளைந்திருந்த நெற்பயிர்கள் மீது விழுந்தன.

அது மட்டுமல்லாது பட்டத்தை ஏற்றுபவர்கள் நெற்பயிர்களூடாக அவற்றை இழுத்துக் கொண்டு ஓடியதனாலும் பெருமளவான நெற்பயிர்கள் கால்களுக்கிடையில் அகப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் நெல்லை விதைத்து அதில் கதிர்கள் வந்த நிலையில் பட்டங்களை வானில் பறக்க விடுவோர் மேற்கொள்ளும் செயற்பாடுகளால் தமது பயிர்கள் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன எனவும், இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறையிடப் போவதாகவும் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர் ஒருவர் தெரிவித்தார். (த-108)

### பச்சைமிளகாய் திருட்டு கைதடியில் அதிகரிப்பு

கைதடி, ஜன.17

கைதடிப் பகுதியிலுள்ள பல தோட்டங்களில் அண்மைக் காலமாக பச்சை மிளகாய் திருடும் திருடர்களின் தொல்லை அதிகரித்துப்பதாக விவசாயிகள் பலராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

மேற்படி பகுதிகளிலுள்ள தோட்டங்களுக்கு இரவுவேளை செல்லும் திருட்டுக் கும்பல் மிளகாயைப் பழுக்க விடாமல் பிடுங்கிச் செல்வதாகவும், இதனால் சிலவேளைகளில் மிளகாய்க் கன்றுகளும் சேதமடைந்து விடுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை– கடந்த வாரம் கைதடி கிழக்கிலுள்ள தோட்டம் ஒன்றில் திருடும் நோக்கோடு இரவுவேளை ஆலயம் ஒன்றில் அருகே பதுங்கிய மூவர் ஆள்களைக் கண்டதும் தப்பியோடியதாகக் கூறப்பட்டது. (த-288)

## துருப்பிடித்து ஆபத்தான நிலையில் பண்ணைப் பாலம்



யாழ்ப்பாணம், ஜன. 17

தீவுப்பகுதிக்கான நுழைவாயிலில் அமைந்துள்ள பண்ணைப் பாலம் துருப் பிடித்து ஆபத்தான நிலையிலும் அதன் இறுக்க பிணைப்புக்கள் கழன்ற நிலையிலும் காணப்படுகின்றது.

தற்போது பண்ணை வீதி அகலிக்கப்பட்டுவரும் நிலையில் இந்தப் பாலமும் மீள புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

தற்போதைய இரும்புப் பாலத்தை அகற்றி மேம்பாலம் அமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்நிலையில் மக்கள் போக்குவரத்துக்காக தற்காலிக பாலம் அமைக்கும் பணிகளும் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. (வ–17)

# குருந்தூர்க் குளத்தை புனரமைத்துத் தருக

## குமுழமுனை மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.17

தொள்ளாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட அளவு பாசனவசதி பெறவல்ல, பழந்தமிழர் நாகர் குல மன்னன் நாகராசன் நிர்மாணித்த குருந்தூர்க் குளத்தை புனரமைத்துத் தருமாறு குமுழமுனை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொன்மை வாய்ந்த தமிழர் அடையாளமாக விளங்கிவரும் இக்குளத்தின் குளக்கட்டுப் பாதையும் பல வருடகாலமாக சீர்செய்யப்படாது உள்ளதோடு ஓடுகின்ற நீரை மறிக்கவல்ல குளக்கட்டும் இன்றி ஒவ்வொரு ஆண்டும் பாய்ந்துவரும் நீர் வீணாகிச்செல்கிறது என்று அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

குமுழமுனை மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த முதலாம் திகதி அங்கு சென்ற வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் குறித்த குளத்தின் புனரமைப்பு தொடர்பான மக்களது கோரிக்கையை கேட்டறிந்ததோடு மேற்படி குளத்தையும் பார்வை யிட்டார்.

கைவிடப்பட்ட நிலையில் இருந்த குளக்கட்டுப்பாதை வழியாக அரைமணிநேரத்துக்குமேலாக நடந்து சென்று புனரமைக்கப் படவேண்டிய இடங்களைப் பார்வையிட்டதோடு குறிப்பிட்ட இடங்களில் நின்று அக்குளம் தொடர்பான கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

குருந்தூர்க் குளத்தின் வரலாறு இயக்கர் நாகர் காலப்பகுதியைக் கொண்டிருப்பதாகவும், நாகர் குல மன்னன் நாகராசன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அந்தக் குளம் பின்னர் பிரிட்டிஷ் அரசின் காலப் பகுதியில் சிற்சில புனருத்தாரண வேலைகள் அங்கு நடைபெற்றதாகவும் குமுழமுனை மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஏறத்தாழ தொள்ளாயிரத்து ஐம்பது ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் விவசாயம் செய்யக் கூடிய அளவுக்கு தண்ணீரைத் தேக்கி வைக்கக் கூடிய இந்தக் குளம், 1948 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் எதுவித திருத்த, புனருத்தாரண வேலைகளுக்கும் உட்படுத்தப் படாததால் தற்போது ஒரு ஏக்கர் நிலமும் விவசாயத்துக்குப் பயன்படுத்த இயலாத விதத்தில் வழிந்தோடுகின்ற நீரும் நாயாறு கடல் நீரேரியுடன் கலப்பதாக வும்கவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பில் வட மாகாண சபைஉறுப்பினர்து.ரவிகரன்கருத்துத் தெரிவிக்கையில்;

குறித்த பிரதேசம் நீண்ட காலமாக தமிழர் அடையாளங்களை பறைசாற்றும் பூமி. ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க அளவு விளைச்சலைத் தந்து தாயகத்தின் பசியைப் போக்கிய பூமி. இக்குளம் புனரமைக் கப்பட்டு அதன் மூலம் தொள்ளாயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் மேலதிக விவசாயம் செய்யும்போது தாயகத்தின் தன்னிறை வான விளைச்சலை நோக்கிய எமது பயணமும்மேலும் வலுப்பெறும்.

இக்குளத்தைப் புனரமைப்பு செய்வது தொடர்பிலான கோரிக்கையை மாகாண விவசாய அமைச்சரிடம் முன்வைக்க இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (வ)

## தமிழ் மக்களின் நலனுக்காக புதிய அரசு செயற்பட வேண்டும்

### வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்.ஜன.17

கடந்த காலங்களில் தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் செயற்பட்ட அரசியல் பலத்தை மக்கள் தமது வாக்குகளால் முறியடித்து வெற்றி பெற்றுள்ளனர். இதனை ஏற்றுக் கொண்டுள்ள புதிய அரசு முனைப்புடன் தமிழ் மக்களின் நலனுக்காகச் செயற்பட வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

"நடைபெற்று முடிந்துள்ள தேர்தலில் தமிழ் மக்களின் ஒத்துழைப்புடன் புதிய அரசை உருவாக்க முடிந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று தமிழ் மக்கள் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

கடந்த கால வரலாறு, கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்கள் எமக்கு மிகுந்த படிப்பினைகளைத் தந்துள்ளன. இந்தத் தேர்தல் தொடர்பில் பல்வேறுபட்ட நியாயங்கள் மற்றும் கருத்துக்கள் காணப்பட்டபோதும் எமது இனத்தின் இருப்புக்கு கடந்த அரசுகள் ஏற்படுத்திய இடையூறுகளால் எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இந்நிலையில் எமது வாக்கை நாம் ஒன்று சேர்ந்து பதிவதன் ஊடாக எமது இனத்தினுடையஅபிலாசைகளை வெளிக்கொண்டு வர முடியும்.-திட்டமிட்ட வகையில் கடந்த காலங்களில் எம்மிடம்காணப்பட்டபலவகையான பலங்களும் அழிக்கப்பட்டு விட்ட நிலை யில் இன்று நாம் வாழ்கின்றோம். இன்று எம்மிடம் உள்ள எதிரியைத் தாக்கக்கூடிய ஆயுதம் வாக்குரிமை என்பது மட்டுமே. இந்த நிலையில் நாம் வாக்களித் ததன் ஊடாக எதிரிக்கும் துரோகிக்கும் நல்ல பல செய்திகள் சென்றடைந்துள்ளன. இந்த நிலையில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவின் வழி நின்று வாக்களித்ததன் ஊடாக உரிமைப் போராட்டத்தின் புதிய பாதையில் பயணிப்பதற்கு ஒன்றிணைவோம் என்று தெரிவித்துள்ளார். (வ–14)



யாழ். கோட்டையை சுற்றியுள்ள பாதுகாப்பு அகழியை ஆழமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அகழியில் தேங்கிய சேற்றை அகற்றி கடல் நீருடன் அகழியை சேர்க்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. (வ–17)

## யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்பற்ற நிலையில் 1300 கிணறுகள்

மானிப்பாய், ஜன.17

யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பற்ற நிலையில் 1300 கிணறுகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவை, போதுமான உட்கட்டுமானங்கள், பாதுபாப்பு வேலிகள் இன்றி உள்ளதுடன் கிணறுகள் அமைந்துள்ளமை தொடர்பானமுன்னெச்சரிக்கைச் சமிக்ஞைகள் இன்றியும் கிணறுகள் காணப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பின் கீழ்வரும் பாதுகாப்பற்ற இவ்வாறான சகல கிணறுகளையும் பாதுகாத்து வேலிகள் அமைக்கவும், உட்கட்டுமானங்களை முன்னெடுக்கவும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளாக பாதுகாப்பற்ற கிணறுகளின் விவரம் திரட்டப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை அதற்கான புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

தற்போது சிறு குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் என பலரும்பாதுகாப்பற்ற இத்தகைய கிணறுகளில் தவறி வீழ்வதால் இறப்புகள் சம்பவிப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வடக்கு மாகாண முதலமைச்சரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ–50)

## விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் 2 ஆவது ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பும்

யாழ்ப்பாணம்.ஜன.17

யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் 2 ஆவது ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் அண்மையில் கொக்குவிலில் அமைந்துள்ள குறித்த பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

பாடசாலையின் பொறுப்பாளர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சிறப்பு



விருந்தினர்களாக வட மாகாண சபை தவிசாளர் சி.வீ.கே. சிவஞானம், யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா ஆகியோரும் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமாரும் கலந்து கொண்டனர்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மற்றும்சுவாமி பெரியார்களின் ஆசியுரையுடன் கட்டடத் திறப்புவிழாவைத்தொடர்ந்துகலை நிகழ்வுகளும்இடம்பெற்றன. (வ–14)

ROTARY CLUB OF JAFFNA
Chartered on 1941

# Rotary Club of Jaffna

District Event - RID 3220

ROTARY INTERNATIONAL

## மாபெரும் தைப்பொங்கல் திருவிழா 2015
## Thaipongal Carnival '15

பிரதம விருந்தினர்:

Gowri Rajan
District Governor
(2014- 15-RID 3220)

சிறப்பு விருந்தினர்:

Mr.A. Natarajan
Consul General of Indian Deputy High Commission
Jaffna




விருந்தினர்களை வரவேற்கும் முகமாக பாரம்பரிய இசை வாத்தியங்கள் முழங்க வரவேற்பு நிகழ்வானது ஆரம்பமாகும்

நிகழ்வின் முக்கிய அம்சமாகிய பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகும்

- பொங்கல் பொங்குதல்
- பொங்கல் போட்டி

இதனைத் தொடர்ந்து நமது பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் கலைக்கலாச்சார நிகழ்வுகளாகிய

- கரகாட்டம்
- மயிலாட்டம்
- ஒயிலாட்டம்
- பொய்க்கால் குதிரை
- காவடி
- சிலம்பாட்டம் என்பன இடம்பெறும்.



இத்துடன் கலாச்சார விளையாட்டுக்களாகிய

- தலையணை சண்டை
- உறி அடித்தல்
- ஓலை பின்னுதல்
- கயிறு இழுத்தல் இடம்பெற்று இவ் நிகழ்வுகள் நிறைவுறும்.

இடம் : திறந்த வெளியரங்கு
யாழ்ப்பாணம்
(யாழ்நூல்நிலையம் அருகாமை)

காலம் – இன்று 10.00 am



# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு வாழ் எம்மக்களுக்கு புத்தூக்கம் தரவல்ல புதிய ஏற்பாடு

வடக்கு மாகாண சபைக்கு புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவிவகார அமைச்சின் செயலாளராக முன்னர் பணியாற்றிய எச். எம். ஜி.எஸ். பளிஹக்காரவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கின் புதிய ஆளுநராக நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

அப்பாடா, வடக்கு வாழ் மக்களின் நலன்கருதி புதிய அரசு செய்த, மிகவும் வரவேற்கவல்ல, இந்த மாற்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பத்தெட்டு ஆண்டுகள் சிவில் மற்றும் இராஜதந்திர சேவைகளில் பணிபுரிந்ததோடு, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பிரதிநிதியாகவும் பணியாற்றிய அனுபவமும் ஆளுமையும் கொண்டவர் பளிஹக்கார.

அத்தகைய தகைமைகள் கொண்ட மூத்த அதிகாரியை, எமது மாகாண ஆளுநராக நியமித்திருப்பது வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்கு உரியதுமாகும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசினால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவ உயர் அதிகாரி ஜி.ஏ. சந்திரசிறியின் பதவிக்கு, புதியவர் நியமிக்கப்பட்டமையை, வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வாழும் மக்களும், நாடாளுமன்ற உள்ளூராட்சி மன்றங்களின் தொண்ணூறு சதவீதமான உறுப்பினர்களும் வரவேற்பர், மகிழ்ச்சி கொள்வர் என்பதில் ஐயமில்லை.

வடக்கு மாகாணசபை இயங்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே - கடந்த 14 மாதங்களாகவே - இங்கு பதவி வகித்து வந்த ஆளுநரை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை, மக்களிடம் இருந்து வலுத்து வந்தது.

ஆனால், ஆட்சியில் இருந்த முந்திய அரச தலைவரோ, அவரது உள்ளூராட்சி அமைச்சரோ அதனைத் தமது காதுகளில் போட்டுக்கொள்ளவும் தயாராக இருந்ததில்லை.

எப்படியோ, புதிய ஜனாதிபதி வடக்கு வாழ் மக்களின் மனங்களை நன்கு புரிந்து கொண்டு, உகந்த மாற்றம் ஒன்றைச் செய்திருப்பது நல்ல ஆரம்பம் எனக் கருதலாம்; வரவேற்கலாம்.

இன்னொரு கோணத்தில் நோக்கும்போது, வடக்கின் புதிய ஆளுநராக பளிஹக்கார நியமிக்கப்பட்டிருப்பது, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நுழைவாசலாக அமையக் கூடும்.

வடக்கில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட, நிறுவப்பட்ட மாகாண சபையும் அதன் முதலமைச்சரும், அமைச்சர்களும், உறுப்பினர்களும், முன்னர் பதவியில் இருந்த ஆளுநரால் கண்டு கொள்ளப்படாத போக்கே தொடர்ந்தது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்துவதற்கும் , புதிய ஆளுநர் உந்து சக்தியாக அமையக்கூடும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்களைக் கண்டு கொள்ளாத, ஏனோதானோ என்ற போக்கே, இதுவரை வடக்கில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு புறத்தில் நோக்கினால், மாகாண சபையின் உயர் அதிகாரிகளில் மிகப் பலரும் , பதவியில் இருந்த ஆளுநரின் கைப்பொம்மைகளாகவே செயற்பட்டு வந்தனர் என்பது வெள்ளிடைமலை. வாக்காளர் பெருமக்கள் இது குறித்து எதுவும் செய்ய இயலாத நிலையில், எந்த வகை மாற்றத்துக்குமான அறிகுறி தானும் தென்படட்டதில்லை.

புதிய (கொழும்பு) அரசாங்கத்தின் செயற்பாடுகளில், வடக்கு, கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களின் இதுவரையான அரசு சார்ந்த இடர்களை நீங்குவதற்கான அதி உச்சச் செயற்பாடுகள் தேவை.

இன்றே செய்க, அதனை நன்றே செய்க என்ற வாக்குக்கு இணங்க, புதிய அரசின் செயற்பாடுகள் முகிழ்த்து மலர வேண்டும். அதன் முதலாவது செயல் வினையாக, வடமாகாண ஆளுநர் பதவியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் அமையட்டும்.

நன்றும் தீதும் பிறர்தர வருவதில்லை. அதனை நாமே தேடிக்கொள்கிறோம் என்பதனையும் வடக்கு வாழ் மக்கள் மறந்து விடலாகாது. இருண்டயுகம் நீங்கி, ஒளிமயமான காலம் ஓங்கி உழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு மக்களுக்கும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்குமே உண்டு. அதனை இரு சாராரும், ஒரு கணமும் மறந்து விடலாகாது.




# ஜனாதிபதியின் இந்தியப் பயணம் புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்

ராஜராஜன்

மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட மைத்திரிபால சிறிசேன தமது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது அண்டை நாடான இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதில் இலங்கை ஜனாதிபதி கொண்டுள்ள பெரு விருப்பத்தை அவரது இந்தியப் பயணம் எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து இலங்கை வரவுள்ளதாகவும் தெரியவருகின்றது.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் அவரது அரசு அதிக நெருக்கத்தைக் கொண்டிருந்தது. இலங்கையின் உட்கட்டமைப்புப் பணிகளுக்கு சீன அரசு பெருமளவு நிதியைக் கடனடிப்படையில் வழங்கியது. இலங்கை கேட்கும் போதெல்லாம் தேவையான நிதியை வழங்குவதில் சீன அரசு ஒருபோதுமே பின்னின்றதில்லை. அத்துடன் பெருந்தொகையான சீனத் தொழிலாளர்களும் உயரதிகாரிகளும் ஆண்டுக் கணக்கில் இலங்கையில் தங்கி நின்று பணியாற்றும் நிலையும் உருவானது. இந்தியாவும் இலங்கைக்கு உதவுவதில் பின்னிற்கவில்லை. ஆனால் இந்த உதவிகள் கடன் அடிப்படையில் அமையாது மனிதாபிமான உதவிகள்

> “ மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் கட்சிப் பொறுப்பில் இருந்திருந்தால் சீனாவிடம் பெற்றுக்கொண்ட பெருந் தொகையான கடன்களுக்காக இந்த நாட்டையே தாரைவார்த்துக் கொடுக்க வேண்டிய நிலையொன்று உருவாகியிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளன. ஆனால் என்னதான் இந்தியாவின் உதவிகள் கிடைத்தாலும் முன்னாள் அரசுத்தலைவர் சீனாவின் பக்கமே அதிகளவில் சார்ந்து காணப்பட்டார். அதேவேளையில் இந்தியாவைச் சமாளித்து நிற்கும் போக்கும் காணப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் கட்சிப் பொறுப்பில் இருந்திருந்தால் சீனாவிடம் பெற்றுக்கொண்ட பெருந்தொகையான கடன்களுக்காக இந்த நாட்டையே தாரைவார்த்துக் கொடுக்க வேண்டிய நிலையொன்று உருவாகியிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டது. சீனா மௌனமாக இருந்து காரியங்களை ஆற்றுவதில் சிறந்து விளங்குகின்றது.

உதவி கேட்டு வரும் நாடுகளுக்கு உதவுவதும், பின்னர் அந்த நாடுகளைத் தனது பிடிக்குள் வளைத்துப் போடுவதும் சீனாவுக்குக் கைவந்த கலையாகும். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெறுவாரென எண்ணியிருந்த சீனா இறுதியில் ஏமாற்றத்துக்குள்ளாகியது. அதேசமயம் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை இந்தியா மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவருகின்றது. அந்த அடிப்படையிலேயே இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணமும் அமைந்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் சீனா வியூகம் வகுத்து வருகின்றமை இந்தியாவுக்குத் தலையிடியைக் கொடுத்து வருகின்றது. தனது எல்லைக்கு அருகில் பாகிஸ்தான் என்ற பெரும் எதிரியை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வினாடியும் எச்சரிக்கை நிலையில் இருந்து வரும் இந்தியா, சீன வல்லரசின் நடவடிக்கைகளையும் கவலையுடன் கண்காணித்து வருகின்றது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சீனா, பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வருவதையும் இந்தியா விரும்பவில்லை. ஆனால் சீனா – பாகிஸ்தான் உறவு நெருக்கமாகவே காணப்படுகின்றது. இதனால் கலக்கமடைந்திருக்கும் இந்தியா ஏனைய தெற்காசிய நாடுகளையாவது தனது பிடிக்குள் வைத்திருப்பதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றது. இந்த நிலையில் கேள்விக்குறியாக மாறியிருந்த இலங்கை, புதிய ஜனாதிபதியின் வருகையுடன் இந்தியாவுக்குச் சார்பாக நடந்து கொள்ளும் நிலை அதிகமாகக் க்காணப்படுகின் றது.

எதிர்காலத்தில் இந்திய முதலீடுகளும், உதவிகளும் இலங்கையில் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உருவாகுமென எதிர்பார்க்கலாம். அத்துடன் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியில் இலங்கையில் வாழும் தமிழர்கள் முக்கிய பங்காற்றியமையும் இந்தியாவுக்கு புதிய ஜனாதிபதியிடம் ஒரு நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இவையெல்லாவற்றையும் நோக்கும்போது இந்திய – இலங்கை உறவில் புதியதொரு அத்தியாயம் உருவாகுமென எதிர்பார்க்க முடிகின்றது.

# குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்

## தகுதி,தராதரம் பார்க்கத் தேவையில்லை
## தற்போதும் ஷிராணியே பிரதம நீதியரசர்

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர், சட்டத்தரணி உபுல் ஜயசூரியா 'மவ்பிம' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகின்றது. தமிழில்:வீ.எஸ்.ரீ**



கே:ஷிராணி பண்டாரநாயக்காவை மீண்டும் பிரதம நீதியரசர் பதவியில் அமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக வெளிவரும் செய்தி உண்மைதானா?

ப:ஷிராணி பண்டாரநாயக்கா இரண்டு காரணங்களின் அடிப்படையில் சட்டப்படி அந்தப் பதவியினின்றும் விலக்கப்படவில்லை என்றே நாம் எப்போதும் கூறி வந்துள்ளோம். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. விசாரணை தொடர்ந்த வேளையில், ஷிராணி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அந்த நடவடிக்கைக்கான தடை உத்தரவொன்றைக் கோரினார். உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தடை உத்தரவு வழங்கப்பட்டு அந்த நாடாளுமன்றத்தெரிவுக்குழுவின்அறிக்கை செயலற்றதாக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதியொருவரை அவரது பதவியிலிருந்து விலக்க வேண்டுமானால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும், அதன் தீர்மானமும் பெறுமதி கொண்டவை. அத்துடன் இரண்டாவது காரணமாக அமைவது அந்தத் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அது குறித்த நாடாளுமன்றப் பிரேரணை நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும். குறித்த நீதியரசரை அவரது பதவியிலிருந்து விலக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொள்ளவேண்டும். அது நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் ஷிராணி விடயத்தில் அத்தகையதொருபிரேரணைநாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அரசமைப்பின் 107(2) ஆவது பிரிவின் கீழ் அத்தகைய பிரேரணை நிறைவேற்றப்படாது நீதியரசரொருவரைப் பதவியிலிருந்து நீக்கும் சட்டபூர்வ அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது.இதனையே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எப்போதும் கூறி வருகிறது.

கே:அப்படியானால் ஷிராணி பண்டாரநாயக்க பதவியினின்றும் நீக்கப்படவில்லையா?

ப:மேற்குறித்த அம்சங்களின் அடிப்படையில் ஷிராணி அவரது பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. இதனாலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவரின் பதவியேற்புக்கு அவருக்கு அழைப்பு விடுத்திருந்தோம்.

கே:அப்படியானால் ஷிராணி தான் தற்போதும் சட்டப்படியான பிரதம நீதியரசரா?

ப:ஆம்,அவர் இதுவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அவர் தமது அந்தப் பதவியில் மீண்டும் செயற்பட வேண்டியது மட்டுமே தற்போது அவசியமாகியுள்ளது.

கே:இந்த விடயத்தில் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் தவறான விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சாதாரண பொதுமக்கள் கூட கருதுகிறார்கள் அல்லவா?

ப:அவரை மீண்டும் அந்தப் பதவியில் செயற்பட வைப்பதல்ல தற்போதைய பிரச்சினை. அவர் அந்தப் பதவியில் செயற்படுவதற்கு உள்ள தடைகளை நீக்குவது மட்டுமே தற்போதுள்ள பிரச்சினை.

கே:ஜனாதிபதியாகத் தெரிவாகும் ஒருவர் எவரது முன்னிலையில் தமது பதவிப் பிரமாணத்தைமேற்கொள்ளவேண்டும்.

ப:ஜனாதிபதி,உயர் நீதிமன்ற நீதியரசரொருவரது முன்னிலையில் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வது மட்டுமே போதுமானது.

கே:– இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இத்தகைய நிலைக்கான முக்கிய காரணம் என்ன?

ப:– நீதித்துறை வீழ்ச்சி கண்டுள்ளது. லஞ்சம், ஊழல் தலைதூக்கி அரசசேவையே நலிவு கண்டுள்ளது. கல்வித் துறை உட்பட்ட பல்கலைக்கழக நடைமுறைகள் பின்னடைவு கண்டுள்ளன. சட்டப்படி செயற்பட இயலாதவாறு பொலிஸ் துறை அரசியல்தலையீடுகளால்மழுங்கடிக்கப்பட்டுள்ளது. இவையே இதற்கான முக்கிய காரணங்கள். அதேபோன்று வெளிநாட்டு இராஜதந்திரத்துறை பொருத்தமானவர்களால் அல்லாது அரசியல் வாதிகளது உறவினர்களால் நிரப்பப்பட்டிருப்பதால் திறனற்றுப் போயுள்ளது. நீதித்துறையின் சுயாதீன இயக்கம் வீழ்ச்சி கண்டுள்ளது. இவை காரணமாகவே கடந்த காலத்தில் நாட்டில் அத்தகையதொரு நலிவு நிலை உருவாக நேர்ந்தது.

கே:அப்படியானால் எதற்காக ஜனாதிபதியாகத் தெரிவாகும் ஒருவர் பிரதம நீதியரசரின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். அது வழக்கமான தொன்று என்ற அடிப்படையிலா?

ப:சட்டப்படி தெரிவான பிரதம நீதியரசரொருவர் இருப்பாரானால் ஜனாதிபதியொருவர் அவரது முன்னிலையில் பதவிப் பிரமாணம் மேற்கொள்வதே வழமை. தற்போது அவ்விதம் இல்லாமையாலேயே ஜனாதிபதி மைத்திரிபால உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசரொருவர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் மேற்கொண்டார்.

கே:தற்போது ஷிராணியை பிரதம நீதியரசராக செயற்பட வைக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆர்வம் காட்டிச் செயற்படுகிறதல்லவா?

ப:புதிய ஜனாதிபதி மைத்திரிபால, ஷிராணி விடயத்தில் எமது சங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள விடுத்த அழைப்பையேற்று நாம் எமது கருத்தை, எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம். ஷிராணி பதவியிலிருந்து சட்டப்படி நீக்கப்படவில்லை எனத் தெரிவித்தோம். எமது கருத்துக்கு மதிப்பளித்து, பொருத்தமான சட்ட வரம்புக்கு உட்பட்டு இந்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் எமக்குத் தெரிவித்துள்ளார்.

கே:– மேற்குறிப்பிட்ட நிலைக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் புதிய நிர்வாகத்தின் கீழ் எவ்வாறு செயற்படவுள்ளது?

ப:– நாம் புதிய அரசுக்கு ஆலோசனை மட்டும் கூறுவதுடன் நிறுத்திக்கொள்ளாது, இத்தகைய தவறுகளை மேற்கொண்ட தரப்பினருக்கு எதிராகத் தராதரம் எவற்றையும் கருத்தில் கொள்ளாது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்துகிறோம்.

கே:– இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கமைய முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள இயலுமா?

ப:– ஒருவர் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் வேளையில் மட்டுமே அவருக்கு அந்தப் பதவிக்குரிய அதிகாரம் உண்டு. அவர் ஜனாதிபதிப் பதவியை இழந்த பின்னர், அவர் பதவியில் இருந்தவேளையில் மேற்கொண்ட குற்றங்கள் மற்றும் சட்டத்தை மீறி செயற்பட்டிருப்பின் அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து சட்டத்துக்கமைய செயற்படுவதற்கு எந்த விதத் தடையும் கிடையாது.

கே:– உங்களைப் போன்று, நாட்டின் பெரும்பாலான மக்களும் எதிர்பார்க்கும் நல்லாட்சியை இந்தப் புதிய அரசால் ஏற்படுத்த இயலுமென நம்புகிறீர்களா?

ப:– நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய நியாயமாகச் செயற்படுமாறேநாம் பொலிஸ் துறையினரையும் தேர்தல்கள் ஆணையாளரையும் கேட்டுக் கொண்டோம். நாட்டில் சமாதானமும், நல்லிணக்கமும், நியாயமும் நிலைத்தநிலையை ஏற்படுத்தும் நோக்குடனேயே நாம் செயற்பட்டோம். அதில் வெற்றியும் கண்டுள்ளோம். எமது இந்தப் பயணத்தில் ஏற்பட்ட குறுக்கீடுகளை வென்றெடுத்துச் செயற்படமுனையும் புதிய அரசைப் பலப்படுத்துவதே எமது தற்போதைய நோக்கம்.

கே:– உங்களது அந்த நோக்கத்தை வென்றெடுக்க நீங்கள் எவ்வித பங்களிப்பை வழங்கவுள்ளீர்கள்.

ப:– தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தால் லஞ்சம், ஊழல் ஆணைக்குழு முன் உள்ள குற்றம் சாட்டப்பட்டோருக்கு எதிரான வழக்கு அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. அவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டுமென நாம் கோருகிறோம். அதுவுமன்றி கே.பி, கருணா, தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் போன்றோருக்கு எதிராக அரசு வழக்குத் தாக்கல் செய்யவேண்டுமென்பதை நாம் விசேடமாக வலியுறுத்துகிறோம்.

கே:– கடந்த அரசில் இணைந்து செயற்பட்டோர் பலர் தற்போதைய அரசிலும் அங்கம் வகிக்கின்றனரல்லவா? அவர்களுக்கெதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தாங்கள் கடுமையாக அழுத்தம் கொடுக்கின்றீர்களா?

ப:– நாம் அதில் மிக உறுதியாக இருக்கிறோம். எவர் எங்கு இருக்கிறார் என்பது முக்கியமல்ல. ஒருவர் கொலைக் குற்றச்சாட்டுக்கு உட்பட்டிருந்தால் அவருக்குத் தண்டனை வழங்கியே ஆகவேண்டும். அதே போன்று இடம்பெற்ற தேர்தலின் போது வன்முறைச் சம்பவங்களில் தொடர்புபட்டிருந்தோருக்கும் கடும் தண்டனை வழங்கப்படவேண்டுமென நாம் அரசை வலியுறுத்துகிறோம். அத்தகைய குற்றச்சாட்டுக்குஉட்பட்டிருப்போருக்கு எதிராக கட்சிபேதம், தராதரம் பாராது தண்டனை வழங்கப்படவேண்டும்.

சட்டத்துக்கு அத்தகைய பேதங்கள் கிடையா. அதேபோன்று தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தை பிரகடனப்படுத்தி நாட்டில் இராணுவ ஆட்சியொன்றை மேற்கொள்ள ஒரு தரப்பினர் முயன்றதாக வெளிவந்த செய்தி குறித்தும் பொலிஸார் பாரபட்சமின்றி விசாரணை மேற்கொள்ள வேண்டுமென நாம் வற்புறுத்துகின்றோம்.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### மருந்துக்கு அலையும் நோயாளர்கள்

மருந்துகள் கிடைப்பதில்லை. எனது கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகி விட்டது. 5மாதங்களாக "GLI CLAZIDE TABLETS BP 40 mg" வழங்கப்படவில்லை. ஆறாவது தடவையும் இந்த வில்லையுடன் ""LOSARTON 50 mg" என்ற வில்லையும் வழங்கப்படவில்லை. மீண்டும் 02.01.2015 இல் கிளினிக்குக்குச் சென்ற போது மேற்குறிப்பிட்ட இரு மருந்துகளுடன் "" MET FORMIN 500 mg", ASPIRIN 150mg என்ற மருந்துகளுமாக மொத்தம் நான்கு மருந்துகள் வழங்கப்படவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து மருத்துவரைச் சந்தித்து மருந்தெடுக்க வரிசையில் நின்றும், போக்குவரத்துக்காகப் பணத்தைச் செலவிட்டும் நான்கு மருந்துகள் இல்லையென்றால் எங்களது துயரத்தை யார் அறிவார்கள்? முன்னதாகவே இந்த மருந்துகளில்லையென்று தெரிய வந்தால் எமது நேரத்தை வீணாக்காது, போக்குவரத்துச் செலவுக்காகச் செலவிட்ட பணத்திலேயே அந்த மருந்தை நாங்கள் வாங்கியிருக்கலாமே. கிளினிக் மருந்தகத்தில் மருந்து விநியோகிப்பவரைக் கேட்டால், அந்த மருந்துகள் இலங்கை முழுவதுமே தட்டுப்பாடு எனக் கூறுகின்றார். இது குறித்து வெளி மாவட்டங்களிலும் இங்குள்ள மருந்துக் கடைகளிலும் விசாரித்தபோது இந்த மருந்துகள் தாராளமாக இருப்பிலிருப்பதாகக் கூறினார்கள். அரச மருந்துக் கூட்டுத்தாபனத்திலும் (ஒசுசல) தாராளமாக இருக்கின்றன. இப்படியிருக்கின்றபோது மருந்து வழங்குபவரின் பதில் நகைப்புக்குரியதாக இருக்கின்றது.


அன்றைய தினம் 02.1.2015ஆம் திகதி மருந்தகத்தில் கடைசி நோயாளியாக மாலை 5.30 மணிக்கு மருந்து எடுத்தேன். நான்கு மருந்துகளில்லையென்பதால், வைத்தியரின் அறைக்குச் சென்றேன். வைத்தியரின் அறை பூட்டப்பட்டிருந்தது. இல்லாத மருந்துகளைக் குறித்து சிட்டை ஒன்றை மருத்துவரிடம் வாங்குவதற்காகச் சென்றேன். வைத்தியரின் சிட்டை இருந்தால் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் மூத்த பிரசைகளுக்கு 5 வீத கழிவுடன் மருந்துகளை வழங்குவார்கள். மறுநாள்காலை 8 ஆம் விடுதிக்குச் சென்று மருத்துவரிடம் சிட்டை பெற்று 5வீதக் கழிவுடன் மருந்துகளை வாங்கினேன். மருந்தகத்தில் மருந்து வழங்குபவர் இல்லாத மருந்துகளை கிளினிக்கிலுள்ள வைத்தியர்களுக்கு நாளாந்தம் அறிவித்தால், அவர்கள் இல்லாத மருந்துகளுக்கு மாற்றாக வேறு ஏதேனும் மருந்தை வழங்கலாம். அன்றேல் அரச மருந்துக் கூட் டுத்தாபனத்தில் 5வீதக் கழிவுடன் மருந்துகளை வாங்குவதற்கு மருந்துச் சிட்டை வழங்கலாமே.

போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு மருந்துகளை தருவிப்பதில் பல சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் வயோதிப நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருந்து வைத்தியரைச் சந்திப்பதையும் அவர்கள் நீண்ட நேரம் வரிசையில் நின்று மருந்து பெறுகின்ற கஷ்டங்க ளையும் அவரால் நீக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயம் குறித்து நானும் என்னைப் போன்ற ஏனைய வயோதிப நோயாளர்களும் பயன்பெறும் வகையில் ஆவன செய்யுமாறு போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரையும் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*இ.இராஜேந்திரா.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## பதவிக்காகவா ? பணத்துக்காகவா?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கை வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்திச் சென்றிருந்தது. கடந்த காலங்களில் தேர்தல்களின் போது கட்சித் தாவல்கள் இடம்பெற்றிருந்தாலும், இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் நிகழ்ந்ததைப் போன்ற கட்சித் தாவல்கள் எப்போதும் இடம்பெற்றிருக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவே கட்சி தாவிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் கட்சி தாவும் படலம் ஆரம்பமானது. மைத்திரிபால சிறிசேனவும் அவருடன் இணைந்து 4 பேருமாக முதலில் எதிர்க்கட்சிக்கு தாவியிருந்தனர். அத்துடன் கட்சி தாவும் படலம் ஆரம்பமாகியிருந்தது. ஆரம்பத்தில் கட்சி தாவியவர்கள், மஹிந்தவின் குடும்ப ஆட்சி – ஊழலை முன்னிறுத்தியே கட்சியிலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்தனர்.

அவ்வாறு அவர்கள் தெரிவித்து வெளியேறியதில் நியாயம் இருக்கத்தான் செய்தது. உண்மையும் அதுவே. மஹிந்தவை எதிர்த்து ஒருவர் நிற்க முடியுமா என்ற அன்றைய சூழ்நிலையிலும், அவரைத் துணிந்து எதிர்த்துக் கொண்டு கட்சி தாவியவர்கள்தான் மைத்திரிபாலவும் அவருடன் இணைந்தவர்களும். ஒரு கட்டத்தில் மஹிந்தவுக்குப் பிரதான தூணாக இருந்த ஹெல உறுமயவுமே வெளியேறியிருந்தது.

பூனைக்கு மணி கட்டுவது யார் என்றிருந்த நிலையில் அந்த மணி கட்டப்பட்டாகி விட்டது. இனி வெளியேற வேண்டியவர்கள் எல்லோரும் வெளியேறலாம் என்று ஹெல உறுமயவின் சம்பிக்க குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வரையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் எதிரணியுடன் இணைந்து கொண்டிருந்தனர்.

இவர்கள், ஜனாதிபதியாக வருவது யார் என்று தெரியாத நிலையிலும் எதிரணியுடன் இணைந்தனர். மஹிந்த ஜனாதிபதியானால் தமது நிலை பரிதாபத்துக்குரியது என்று தெரிந்தும் எதிரணியுடன் இணைந்து மைத்திரிபாலவின் வெற்றிக்காக பாடுபட்டனர்.

இறுதியில் ஜனாதிபதியாக மைத்திரிபால வெற்றி பெற்றார். மைத்திரிபால வெற்றி பெற்ற பின்னர் தற்போதும் கட்சி தாவல் படலங்கள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. மஹிந்தவுடன் நெருக்கமாக இறுதி வரை இருந்த பலர் தற்போது எதிரணிப் பக்கத்துக்குத் தாவத் தொடங்கியிருக்கின்றனர்.

இவர்கள் என்ன காரணத்துக்காக தற்போது கட்சி தாவுகின்றார்கள். மக்களுக்கு சேவை செய்ய கட்சி தாவுவதாக ஏமாற்றுக் கதைகளைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றனர்.

பல்இளித்தாவது புதிய ஜனாதிபதியிடம் எப்படியாவது அமைச்சுப் பதவியைப் பெற்று விட வேண்டுமென்றே, தற்போது கட்சி தாவுகின்றவர்கள் நினைக்கின்றனர். அவர்களுக்கு மக்கள் முக்கியமல்ல. தமது பதவிகளும் அதிகாரங்களும்தான் முக்கியம்.

மக்கள் முக்கியம் என்று நினைத்திருந்தால், தேர்தலுக்கு முன்னரே கட்சி மாறியிருக்கலாம். கடைசி வரையில் மஹிந்தவுடன் கூட இருந்து, பொது எதிரணி தெற்கில் ஒன்றைப் பேசுகின்றது, வடக்கில் ஒன்றைச் சொல்லுகின்றது அவர்களுக்கா வாக்களிக்கப் போகின்றீர்கள் என்று கத்திய டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பலர், அமைச்சுப் பதவிக்காக ஏங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்கள் பதவி பெறுவது மக்கள் சேவைக்காக அல்ல. மாறாக அதிகாரங்களைக் கொண்டு அதிகாரிகளையும் மக்களையும் ஆட்டிப் படைப்பதற்காகவே. இப்படிப்பட்டவர்களை மக்கள் பலமுறை நிராகரித்தாலும், அவர்கள் குணங்கள்தான் இன்னும் மாறவில்லை.

சூடு கண்ட பூனை அடுப்பங் கரை நாடாது என்று சொல்லுவார்கள். இந்தப் பூனைகள் சூடு சுரணை யற்றதுகள் போலும்.

பத்தி எழுத்து

# சிறுவர்







## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டுக்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான். தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது. இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் 'இச் சிறு சிலந்தியே பலமுறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்' என்று எண்ணினான், மறுபடியம் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டுக்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆள்களைச் சந்தித்தான். தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.


## குச்சிப் பூச்சி

நடக்கும் குச்சி அல்லது குச்சிப் பூச்சிகள் நீண்ட உடலைப் பெற்றவை. அசையும்போதுதான் அது குச்சிப் பூச்சி என்றே அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்தப்;பூச்சிக்கு நீண்ட உணர் கொம்புகள் உண்டு. ஒரு அங்குலத்தில் இருந்து ஒரு அடி வரை பல அளவுகளில் குச்சிப் பூச்சிகள் உள்ளன.
பூச்சிகளிலேயே மிகவும் நீளமானது இதுதான்! பார்ப்பதற்குச் சட்டெனத் தெரியாது. துர்நாற்றத்தை வெளியிட்டு, எதிரியிடமிருந்து




தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும். ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கக் கண்டங்களில் இது காணப்படுகிறது. பச்சை, பழுப்பு போன்ற நிறங்களில் காணப்படுகின்றன.

## நான் யார்?



1. மனிதர்களுக்கு மிகவும் பிடிக்கும்; குதிரைக்கும், முயலுக்கும்கூட பிடிக்கும். நான் பார்வை அதிகரிக்க உதவுவேன். நான் யார்? கரட்
2. நான் தேவதைகளுக்கும், தவளைகளுக்கும் குடையாக இருப்பேன். நேற்று முளைத்தவன் என்று என்னை ஏளனமாகப் பேசுவார்கள். காளான்
3. என்னிடம் காடுகள் இருக்கின்றன. ஆனால், மரங்கள் இல்லை. என்னிடம் ஆறுகள் இருக்கின்றன. ஆனால், தண்ணீர் இல்லை. என்னிடம் சாலைகள் இருக்கின்றன. ஆனால், கார்கள் இல்லை. நான் யார்? வரைபடம்
4. நான் பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை நிறங்கள் கலந்து இருப்பேன். தாகத்தைத் தணிப்பேன். தர்பூசணி
5. தண்ணீரில் நான் அழுதாலும் தெரியாது. புழுக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். மீன்

## அச்சுறுத்தலை எதிர்நோக்கும் டுவிட்டரின்




உலகின் முன்னணி சமூக வலைத்தளங்களுள் ஒன்றான டுவிட்டரின் மீது வழக்கு தொடரப்போவதாக சோனி பிக்ஸர்ஸ் என்டர்டெயின்மென் நிறுவனம் தெரிவித்துள்ளது.
அண்மையில் சோனி பிக்ஸர்ஸ் நிறுவனத்தின் கணினிகள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியதன் பின்னரே இந்த அச்சுறுத்தல் டுவிட்டருக்கு விடுக்கப்பட்டுள்ளது.
அதாவது டுவிட்டரின் தளத்தில் சோனி நிறுவனத்தின் சில மின்னஞ்சல் முகவரிகளின் ஸ்கிரீன் ஷாட்டை Val Broeksmit என்பவர் BikiniRobotArmy எனும் டுவிட்டர் பயனர் பெயரிலிருந்து வெளியிட்டுள்ளார்.
இவ்வாறு மின்னஞ்சல் முகவரிகளை வெளியிட்டவர்களின் டுவிட்டர் கணக்குகளை தடை செய்யக்கோரிக்கை விடுத்துள்ள சோனி பிக்ஸர்ஸ், அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் வழக்கு தொடரப் போவதாக எச்சரித்துள்ளது.
இது தொடர்பாக சோனி பிக்ஸர்ஸின் சட்டத்தரணியான David Boies அனுப்பிய கடிதத்தில் சமூகவலைத்தளங்களில் தனிப்பட்ட தகவல்கள் பரிமாறப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தை அமெரிக்க இணையத்தளமான Motherboard தனது தளத்தில் பிரசுரித்துள்ளது.

## மூளையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஸ்மார்ட் கைப்பேசிகள்

தற்போது அதிகரித்து வரும் ஸ்மார்ட் கைப்பேசி தொழில்நுட்பமானது மூளையின் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
சாதாரண கைப்பேசிகளை பயன்படுத்தும் 11 பேரையும், ஸ்மார்ட் தொழில்நுட்பத்தைக் கொண்ட கைப்பேசிகளை பயன்படுத்தும் 26 பேரையும் வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆய்வுக்காக மூளையை பரிசோதிப்பதற்கான இலத்திரனியல் தொழில்நுட்பம் (electroencep halography dEEG) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மூளைக்கும் கைகளுக்கும் நரம்புகளினூடாக தகவல் அனுப்பப்படும் விதம் குறித்து ஆராயப்பட்டது.
இந்த ஆய்வின் போது ஸ்மார்ட் கைப்பேசி பயன்படுத்தியவர்கள் பெருவிரல், நடுவிரல் என்பவற்றை பொறியியல் ரீதியில் பயன்படுத்திய விதம் பிரம்மிக்கத்தக்கதாக இருந்ததாகவும், இது தொடர்பாக தாம் மிகவும் ஆச்சரியப்படுவதாகவும் சுவிட்ஸர்லாந்தின் சூரிச் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் தகவலியலாளரான புஷவலி Ghosh என்பவர் குறிப்பிட்டுள்ளார்.



ஆக்கம்

# மறைந்தும் மக்கள் நெஞ்சங்களில் வாழும் நடிகர்



தமிழினியன்

“மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் பிறந்த தினம் இன்று”

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 98 ஆவது பிறந்த தினமாகிய இன்று அவரைப் பற்றிய சில தகவல்களை இங்கு பகிர்ந்து கொள்வது பொருத்தமாகும். இத்தனை காலங்கள் கடந்துவிட்ட போதிலும், காலத்தால் அழிக்க முடியாது, மறைக்க முடியாது, மக்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பதால் மக்கள் திலகம் என பெயர் கொண்டவர். இவர், ஒரேநேரத்தில் கலைத்துறையிலும் அரசியலிலும்நடுவான்நட்சத்திரமாக எவராலும் எட்டிவிட முடியாத உயரத்தில் மின்னிய கலைஞர். இவர் மறைந்த தருணத்தில் அகிலத்தையே அழவைத்த மனிதர். இன்றைய தலைமுறையில் சிறுவர்கள் கூட தெரிந்து வைத்திருக்கும், அறியமுற்படும் மாமனிதர் என்றால் அது மிகையில்லை. பாரதரத்னா எம்.ஜி இராமச்சந்திரன் பற்றி எழுத நினைத்தால் சுவைக்கச் சுவைக்க முடிவில்லாமல் எழுதிக் கொண்டே போகலாம்.

மக்கள் திலகத்தின் பூர்வீகம் கோவை மாவட்டத்தின் (கொங்கு நாடு) கங்கையேம் ஊருக்கு அடுத்துள்ள புத்தூர் என்னும் கிராமமாகும். இங்கு மக்கள் திலகத்தின் தந்தை கோபால மேனனின் தலைமுறையினர்மிராசுதாரராகசிறப்பாக வாழ்ந்துள்ளனர். கோபாலமேனன் பட்டப்படிப்பு முடித்த சட்டத்தரணி என்பதற்கப்பால் மாவட்ட முனிசிப்பல் நீதிமன்றத்தில் துணை நீதிபதியாகவும் (பாலக்காடு) பணியற்றியுள்ளார். பின்னர் அவர்கள் கோவையிலிருந்து கேரளா பாலக்காடு வடவானக்கில் குடியேறி மருதூரில் வசித்து வந்த காலத்தில் அடுத்துள்ள குழல்அந்தம் ஊர்ப் பெண்ணான சத்தியபாமாவைத் திருமணம் செய்து 4 குழந்தைகள் பிறந்த பிற்பாடு கோபாலமேனன் தனது உறவினர்களுடன் சொத்து விடயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக இலங்கையில் உள்ள கண்டி மாவட்டத்தில் குடியேறி (1913ஆம் ஆண்டு) வாழ்ந்தகாலகட்டத்தில் 1917ஆம் ஆண்டு தைமாதம் 17ஆம் திகதி மக்கள் திலகம் இத்தரணியில் வந்து பிறந்தார். இவரது மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் என்னும் பெயர் எம்.ஜி.ஆர் என்று சுருக்கம் பெற்றது. 1920 ஆம் ஆண்டு தந்தை கோபாலமேனன் இறந்ததையடுத்து இரண்டு பெண் சகோதரிகளும் ஓர் ஆண் சகோதரனும் விஷக் காய்ச்சல் காரணமாக இறந்த பிற்பாடு எஞ்சிய இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தாய் சத்தியபாமா கும்பகோணத்திற்கு (இந்தியா) ச்சென்றார். பின்னர் தாய் இரண்டு பிள்ளைகளையும் கும்பகோணம் ஆனையடி அரசினர் பாடசாலையில் சேர்த்திருந்தார். தாயாரின் கஷ்டநிலையை கண்டு மனம் நெகிழ்ந்த மக்கள் திலகம் மூன்றாம் வகுப்புடனே பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு தனது அண்ணன் சக்கரபாணியுடன் சேர்ந்து 1924 ஆம் ஆண்டு நாடக கம்பனியில் இணைந்தார். பின்னர் இவரது அழகையும் இளமைத்துடிப்பையும் கண்ட கந்தசாமி முதலியார் மக்கள் திலகத்தை 1934 ஆம் ஆண்டு திரையுலகத்திற்கு அறிமுகம் செய்துவைத்தார். திரைப்படத்துறையில் தனது அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் முதன்மை நடிகரானார் நம் மக்கள் திலகம். 1934ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரை திரையுலகின் முடிசூடாமன்னனாகத் திகழ்ந்தார். இவர் 1936 ஆம் ஆண்டு சதிலீலாவதி படத்தில் முதன்முதலில் நடித்திருந்தும் 1947ஆம் ஆண்டு அவர் நடித்து வெளிவந்த ராஜகுமாரி என்ற படமே அவருக்கு புகழைத் தேடித்தந்தது. மக்கள் திலகம் 137 படங்களை நடித்திருந்தபோதிலும் 115 படங்களில் கதாநாயகனாகவும் அதில் 17 படங்களில் இரட்டை வேடங்களிலும் நடித்திருத்தார். இதில் 86 படங்கள் 100 நாள்களுக்குமேல் ஓடி பெருவெற்றி கண்டவையாகும். நாடோடிமன்னன், அடிமைப்பெண் மற்றும் உலகம் சுற்றும் வாலிபன் என 3 படங்களை தனது திரைப்படநிறுவனத்தின் மூலமும், இதில் இரண்டு படங்களான நாடோடிமன்னன், உலகம் சுற்றும் வாலிபன் என்பனவற்றுடன் மதுரையைமீட்டசுந்தரபண்டியன் உட்பட 3 படங்களைத் தானே இயக்கியும் நடித்துமுள்ளார். இவர் நடித்துக்கொண்டிருக்கும்போதே சக நடிகரொருவரால் சுடப்பட்டு சரியாகப் பேசும் திறனை இழந்த பிற்பாடும் தன்னம்பிக்கை குறையாத நிலையில் திரும்பவும் நடித்திருந்தார். இதன் பின்னர் வெளிவந்த படம் ‘காவல்காரன்’. அதுமாபெரும் வெற்றிப்படமாகவும் மக்கள் திலகத்தின் கலையுலக வலிமையை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்தது. இதையடுத்து 1971 ஆம் ஆண்டு அகில இந்திய சிறந்த நடிகருக்கான ‘பாரத்’ விருதை மத்திய அரசு இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. மக்கள் திலகம் நடித்து வெளிவந்த கடைசிப் படம் ‘மதுரையை மீட்டசுந்தரபாண்டியன்’ ஆகும்.

இதற்கிடையில் மக்கள் திலகம், தங்கமணி என்னும் பெண்ணை திருமணம் செய்திருந்தவர் சிறிது காலத்தின் பின்னர் தங்கமணி உடல் நலக்குறைவு காரணமாக உயிரிழக்க இரண்டாவதாக சந்தானவதி என்னும் பெண்ணை மணமுடித்திருத்தார். துரதிர்ஷ்டவசமாக நோய் வாய்ப்பட்டு அவரும் இறந்து போக, மக்கள் திலகம், ஜானகி அம்மையாரை திரையுலகில் சந்திக்கிறார். இருவரும் காதல் வயப்பட்டதன் விளைவாக மூன்றாவது மனைவியாக ஜானகி அம்மையாரைக் கரம் பற்றினார்.

அவர் திரையுலகிலிருக்கும்போதே அரசியலில் கால் பதித்து அதில் வெற்றியும் கண்டவர். ஆரம்பத்தில் சிறிது காலம் வேறுகட்சிகளில் இருந்தாலும் 1950ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து முக்கிய உறுப்பினராகக் கடமையாற்றிய அவர் காலப்போக்கில் அக்கட்சியின் பொருளாளராக நீண்ட காலமாகப் பணியாற்றியதுடன் மு. கருணாநிதிக்கு நெருங்கிய நண்பராகவும் விளங்கினார். திரு.சி.என். அண்ணாத்துரையின் மறைவுக்குப்பின்னர் மு.கருணாநிதி முதலமைச்சரானதையடுத்து தொடர்ச்சியாக அவருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக எம்.ஜி.ஆர் கட்சியை விட்டு வெளியேறி 1972 ஆம்ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்தார். அது காலப் போக்கில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமாக தோற்றம் பெற்றது. மக்கள் திலகம் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் முதல்முதலாக திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டியதையடுத்து 1977ஆம் ஆண்டு தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆனார். திரையுலகில் அவர் அடைந்த புகழும், அவருடைய வசீகரத் தோற்றமும், திரைப்படங்களில் சமூகத் தொண்டனாகவும் ஏழைகளின் தோழனாகவும் கொடையாளியாகவும் மகா வீரனாகவும் நடித்ததன் காரணமாகக் கிடைத்த நற்பெயரின் பொருட்டும் திரைப் படத்தில் மட்டுமல்லாது நிஜத்திலும் வாழ்ந்து காட்டியதன் பொருட்டும் அவருக்கு கிடைத்த மக்கள் ஆதரவே அவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அன்று அமர்த்தியது. 1984 ஆம் ஆண்டில் தேர்தல் பரப்புரையில் ஈடுபடமுடியாமல் கடுமையாக நோய் வாய்ப்பட்ட நிலையிலும்கூட பரப்புரை எதுவும் இன்றியே தேர்தலில் வெற்றி பெற்று முதல்வரானவர் என்ற பெருமைக்குரிய ஒரே முதல்வர். 10 வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சியை தன் வசம் வைத்திருந்த காலப் பகுதிக்குள் மக்களுக்கு, மக்கள் போற்றும் வண்ணம் பல நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தியும் வந்தார். அதில் பள்ளிக்குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை விரிவு படுத்தி அவர்களுக்கான உணவு, உடை, காலணி போன்றவற்றை இலவசமாக வழங்கினார். தன்நிறைவுத் திட்டம், உழவர்களின் கடன்தள்ளுபடி திட்டம், வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்கான நலத் திட்டம் எனப் பல திட்டங்களைச் செயற்படுத்தியதன் காரணமாக மக்கள் அவரைப் பொன்மனச்செம்மல், புரட்சித் தலைவரென செல்லமாக அழைத்தனர். இவர் 1987 ஆம் ஆண்டு பதவியிலிருக்கும் போதே காலமானார். மக்கள் திலகம் காலமானபிற்பாடு இவருக்கு இந்திய அரசினால் பாரதரத்னா விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செய்திகள்

## தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நோயாளர்கள் அதிகரிப்பு

காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்களுக்காக சென்ற வருடம் 2014 ஆம் ஆண்டு தெல்லிப்பழைஆதாரமருத்துவமனையில் அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஆயிரக்கணக்கில் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.
குறித்த மருத்துவமனை தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்து 3 வருடங்களானநிலையில்அதிகளவானநோயாளர்கள் கடந்தவருடம் சிகிச்சை பெற்றுள்ளதை அவதானிக்க முடிந்தது. 2014ஆம் ஆண்டு வெளி நோயாளர் பிரிவில் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 889 பேரும் 18 ஆயிரத்து 816 பேர் விடுதியில் தங்கியும் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இதைவிட கிளினிக்கில் 71 ஆயிரத்து 827 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள். மொத்தமாக 2 லட்சத்து 13 ஆயிரத்து 532 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவமனை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
அதே காலப்பகுதியில் நாய்க் கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றவர்கள் ஆயிரத்து 373 பேராகும். 2013ஆம் ஆண்டு இரண்டாயிரத்து 469 பேர் நாய்கடிக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். (வ–36)

## ஜனாதிபதியின் ஆலோசகர்கள் மூவர் நியமனம்

கொழும்பு, ஜன.17
ஒஸ்ரின் பெர்னாண்டோ, திலக் ரணவிராஜா மற்றும் டபிள்யூ.ஜே.எஸ். கருணாரத்ன ஆகியோர் கடந்த 15 ஆம் திகதி காலையில் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஒஸ்ரின் பெர்னாண்டோ முன்னர் மாவட்டச் செயலாளராகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்துள்ளார்.
திலக் ரணவிராஜா, அமைச்சுக்கள் பலவற்றில் செயலாளராகவும் பதவி வகித்துள்ளதோடு, பல சர்வதேச நிறுவனங்களிலும் உயர்பதவிகளில் இருந்துள்ளார்.
இலங்கைக் கான கனேடிய முன்னாள் ஸ்தானிகரொருவராகப்பதவிவகித்துள்ள டபிள்யூ.ஜே.எஸ். கருணாரத்ன நிர்வாகச் சேவையின் சிரேஷ்ட அதிகாரியாவார். இவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். (ஓ–22)

## பொங்கல்விழா இன்று நடைபெறா

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் மற்றும் சக்தி முன்பள்ளி ஆகியவை இணைந்து இன்று நடத்தவிருந்த பொங்கல் விழாவும் பரிசளிப்பும் தவிர்க்க முடியாத காரணங்களால் மறு அறிவித்தல் வரை பிற்போடப் பட்டுள்ளதாக நிலையத் தலைவர் சி.சதீஸ்வரன் அறிவித்துள்ளார். (வ–9)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

2½ மாதம் நிரம்பிய கிறேட்டேயன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 770 4771 (உடுவில்)
(55881)(4.3.7)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, அச்சகவீதி ஒழுங்கையில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். சிறிய குடும்பத்தினருக்கு ஏற்றது. வதிவிடமானது பெரிய கோயில், சென்ஜோன்ஸ் கல்லூரி, கடைத்தொகுதிகள், பஸ்தரிப்பு நிலையம் என்பவற்றிற்கு அண்மையாக அமைந்துள்ளது.
தொடர்பு: 077 774 1750
(55852)(4.7.3)

**வீடு வாடகைக்குண்டு**

நந்தாவில் அம்மன் கோயிலுக்கு முன்பாக கோண்டாவில் ரயில் நிலையத்துக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 075 044 3805
(55865)(4.3)

**தவறிவிட்டது**

இராஜகுலசிங்கம் நிசாந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (931283332V) காங்கேசன்துறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 075 540 9246
(55864)(4.3)

**பெயர்மாற்றம்**

வரணி இயற்றாலை வரணியைச் சேர்ந்த நாகதீபா ஆகிய நான் இன்றிலிருந்து (17.01.2015) நந்தநீபா என பெயர் மாற்றம் செய்து கையொப்பமிடு வேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
சு.நந்தநீபா
(51875) (4.3.7)

**பெயர்மாற்றம்**

8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவைச் சேர்ந்த ஜீசூகெனோசன் ஆகிய நான் இன்றிலிருந்து (17.01.2015) கெனோசன் என பெயர்மாற்றம் செய்துகொள்வதுடன், இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடு வேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
கெனோசன்
(51874)(4.7.3)

**Majestic Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
8.30am, 12.00noon, 3.30pm, 7.00pm, 10.30pm
**இப்பொழுது திரையில்**







விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் 1978, உத்தராடம் 3 ஆம் பாதம் முதல் சுற்று கிரகபாவம் 20 உம் மொத்தச்சுற்று 60 உம் உடைய அரச உத்தியோக பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.
(55886)(4.3.7) தொடர்பு: 076 638 4340

**வேலைவாய்ப்பு**

பண்டத்தரிப்பில் உள்ள ஜீவன் ஸ்ருடியோவிற்கு வீடியோ படப்பிடிப்பு, புகைப்பட படப்பிடிப்பு, அல்பம் டிசைனிங் போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(55836)(12.3.7) தொடர்பு: 077 978 5717

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் பொஸ்கோ பாடசாலைக்கும் கச்சேரிக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் அல்லது அரச உத்தியோக குடும்பங்கள் விரும்பத்தக்கது.
(55812)(12.3.7) தொடர்பு: 077 769 4547/077 741 7478

**தனி/குழு வகுப்புக்கள்**
Home Visited Classes
CHEMISTRY / BIOLOGY
(இரு மொழிகளிலும்)
நரேந்திரசிங்கம் 077 773 0840 (55596)(4.3.7)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(55762)(12.3.7) தொடர்பு: 077 614 6434

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
• இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
**ஐ**
காட்சி:
10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

**குழந்தை இயேசு ஆலயத் திருவிழா புதுக்குடியிருப்பு**



முல்/புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு
ஆலய நற்கருணைப் பெருவிழா
இன்று (17.01.2015) சனிக்கிழமை
மாலை 5.00 மணிக்கும்
திருநாள் திருப்பலி
நாளை (18.01.2015) ஞாயிறு
காலை 7.00 மணிக்கும்
இடம்பெறும் என்பதை
அறியத்தருகின்றோம்.
(55850)(4.7.3)
பங்குத் தந்தை,
புதுக்குடியிருப்பு

**A/L இன் பின்னர் உயிர்த்தொழில்நுட்பவியல் விஞ்ஞானி ஆக வேண்டுமா?**

BSC (Hons.)
Microbiology & Biotechnology
Biomedical Science



யாழ் நகரில்
கல்விக்கருத்தரங்கு
18.01.2015
முன்பதிவுகள் அவசியம்
ENTRY PATHWAYS: O/L or A/L
0777 499 494
0772 278 927
14 YEARS IN LIFE SCIENCE EDUCATION
SPECTRUM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
100, Bauddhaloka Mawatha, Colombo 00400 (Opposite to HSBC)
info@spectrumcampus.edu.lk www.spectrumcampus.edu.lk
SIST Edinburgh Napier UNIVERSITY

**சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்**




இன்று (17.01.2015) சனிக்கிழமை தனது 60ஆவது
பிறந்தநாளைக் கொண்டாடும்
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின்
மேற்பார்வை குடும்ப நல அலுவலர் தரம் 1
**திருமதி புவனேஸ்வரி இராஜரத்தினம்**
அவர்களை சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துவதுடன், தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து தாய் சேய் நல சுகாதார சேவையில் 33 வருடங்களைப் பூர்த்திசெய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளை அவரது சேவையை மனதாரப் பாராட்டுவதுடன், இவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சுகாதார மருத்துவ அதிகாரியும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.
சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் - சாவகச்சேரி.
(12.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**அற்றோணித் தத்துவத்தை ரத்துச்செய்தல்**

கதிரவேலு கோபாலப்பிள்ளையும் மற்றும் பெண் மாலினியும் ஆகிய நாங்கள் 2012 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி மட்டுவில் வடக்கு கதிரவேலு நடேசபிள்ளைக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் ரத்துச்செய்கின் றோம். விளம்பரத் திகதியிலிருந்து அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவரினால் செயற்படுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் செல்லுபடி ஆகாது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.
கதிரவேலு கோபாலப்பிள்ளை,
கோபாலப்பிள்ளை மாலினி.
(55863) (4.3.7)

# உலகச் செய்திகள்

## பரிஸ் பத்திரிகையின் விற்பனை 83 மடங்கு ஏற்றம்

பரிஸ், ஜன. 17

தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்ட பரிஸ் சார்லி ஹெப்டோ பத்திரிகையின் விற்பனை 83 மடங்கு அதிகரித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள பத்திரிகை அலுவலகத்துக்குள் கடந்த வாரம் தீவிரவாதிகளால் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில்சார்லிஹெப்டோ வாரப் பத்திரிகையின் முதல் பதிப்பு நேற்றுமுன்தினம் வெளியானது.

சாதாரணமாக ஒவ்வொரு பதிப்பிலும் 60 ஆயிரம் இதழ்களை மட்டுமே அச்சிட்டு வந்த சார்லி ஹெப்டோ குழுமம், இந்தப் பதிப்புக்கு மட்டும் 50 லட்சம் பிரதிகளை அச்சிட்டுள்ளது.

விற்பனைக்காக கடைகளுக்கு அனுப்பப்பட்ட இந்த 50 லட்சம் பிரதிகளும் சில மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்துள்ளன.

சில கடைகளில் பத்திரிகையை வாங்க வரிசையில் காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

(ஓ-ரி)



இந்தியாவில் உழவர் திருநாளான பொங்கல் பண்டிகை நேற்றுமுன்தினம் பல்வேறு இடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் விழாவொன்றில் பட்டம் விட்டு மகிழ்கிறார் பிரதமர் மோடி.

## ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் இராணுவத்தினர் கடும் மோதல்


சென்னை, ஜன. 17

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டத்தில் தீவிரவாதிகளுக்கும் இந்திய பாதுகாப்புப் படையினருக்கும் இடையே கடும்துப்பாக்கிப்பிரயோகம்நடைபெறுவதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சோபியானிலிருந்து 50 கி.மீ தொலைவிலுள்ள கெல்லர் வனப்பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.



அதைத் தொடர்ந்து இந்திய பாதுகாப்புப் படையினர் அங்கு தேடுதல்மேற்கொண்டனர்.

அதன்போது பதுங்கி இருந்த தீவிரவாதிகள் இந்தியப் பாதுகாப்புப்படையினரை நோக்கி திடீரெனத் துப்பாக்கியால் சுட்டனர். இந்தியப் படைகளும் திருப்பிசுட்டதால் அங்குசண்டை நீடித்தது. இதில் இந்திய தரப்பில் உயிர் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என இராணுவ வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்து, தீவிரவாதிகளை கைது செய்வதற்காக கூடுதல் படையினர்கெல்லரில் உள்ள சுட்டார்வனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.



## சர்வதேச விண்வெளி நிலையத்தில் திடீர் பிரச்சினை

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில்திடீரெனஏற்பட்டபிரச்சினைக்கான காரணத்தை அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா'வின் வல்லுநர்கள் அறிய முயற்சித்து வருகின்றனர்

விண்வெளி நிலையத்தில் உள்ள குளிரவைக்கும் அமைப்பிலிருந்து அமோனியா கசிந்ததால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று – ரஷ்ய விண்வெளி நிறுவனமான, ராஸ்காஸ்மோஸ் கூறியிருக்கிறது.

ஆனால், நாஸா, அது உணர்ந்தறியும் கருவிகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் அல்லது கணினித் தகவல்களை அனுப்பும் பெட்டியொன்றில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறுகிறது.

அந்தப் பிரச்சினை ஏற்பட்ட பின்னர், விண்வெளி நிலையத்தில் இருந்த அமெரிக்க விண்வெளிக் குழுவினர் மூச்சு விட உதவும் கருவியை அணிந்து கொண்டு அருகே இருந்த ரஷ்ய கலனுக்குச் சென்றனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் இத்தாலியப் பெண்–விண்வெளி வீரர் சாம் கிறிஸ்டொபொரெட்டி தன்னுடைய டுவிட்டரில் தாங்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், ரஷ்ய கலனில் நலத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(ஓ-ரி)

## 86 ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன நபரின் எலும்புகள் கண்டுபிடிப்பு



மெல்பேன், ஜன. 17

ஆஸ்திரேலியாவில் 86 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போன நபரொருவரின் எலும்புகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவின் சாள்ஸ்பர்க் நகரைச் சேர்ந்த கார்ல் என்பவர் 1929ஆம் ஆண்டு தனது 21 வயதில் பனிச்சறுக்கு விளையாடச் சென்றபோது காணாமற்போனார்.

அதன்பிறகு அவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவின் ஆல்ப்ஸ் மலை என்றழைக்கப்படும் உன்டெர்ஸ்பெர்க் பனிமலைப்பகுதியில் சில எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டன.

முதலில் அந்த எலும்புகள் ஏதாவது ஒரு மிருகத்தினுடையதாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. பின்னர் அந்த எலும்புகள் 86 ஆண்டுகளுக்குமுன்புகாணாமற் போன கார்லினுடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அண்மையில் மரபணு முறை பரிசோதனை நடத்தப்பட்டபோது, கார்லினின் எஞ்சிய பாகங்கள் தற்போது 100 வயதைக் கடந்து, உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரி மற்றும் 99 வயதான சகோதரர் ஆகிய இருவருடைய மரபணுக்களை ஒத்ததாக இருப்பது காணப்பட்டது

இதனையடுத்தே கண்டெடுக்கப்பட்ட எலும்புகளுக்குரியவர், 86 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போன கார்லினது எலும்புகளே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஓ-ரி)

## மோடி மீதான வழக்கை தள்ளுபடி செய்தது அமெ.

சென்னை, ஜன. 17

பிரதமர் மோடி மீது அமெரிக்காவில் தொடரப்பட்ட வழக்கை அந்தநாட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



குஜராத் மாநிலத்தில் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தில் பலர் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரத்தில், முன்னைய குஜராத் முதல்வரும், தற்போதைய பிரதமருமான நரேந்திர மோடிக்குத் தொடர்பு இருப்பதாக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

மேலும், நரேந்திர மோடிக்கு நுழைவுவிசை வழங்கவும் அமெரிக்கா மறுத்து வந்தது.

இந்தநிலையில், பிரதமர் மோடி மீதான வழக்கை அமெரிக்க பெடரல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அந்த வழக்கை விசாரித்த நீதிபதி அனாலிசா டோரஸ், நட்புறவைப் பேணும் ஒரு சிறந்த அயல் நாட்டுத் தலைவர் மோடி. இந்த வழக்கில் அவருக்கு எதிரான ஆதாரங்கள் ஏதுவும் இல்லாததால் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-ரி)

## பொங்கல் வாழ்த்துக்கள் கூறிய கனேடிய பிரதமர்

ஒட்டாவா, ஜன. 17

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் அனைத்துக் கனேடிய மக்களுக்கும் எனது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கின்றேன். உலகின் மிக அமைதியான, பன்மைத்துவ நாடுகளில் ஒன்றாக இருக்கும்கனடாவில் – அறுவடை விழாவானபொங்கல்விழாவைக் கொண்டாடும் அதிர்ஷ்டமுள்ளவர்கள் நீங்களென நினைவூட்ட விரும்புகின்றேன். இந்த ஆண்டு இந்தப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதன் மூலம் உங்களின் பெருமைகள் வெளிப்படுவதோடு, மறக்க முடியாத இந்த நாளில் கனேடிய அரசின்சார்பாக என்னுடையவாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும்தாழ்மையுடன் வேண்டுகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார். ஓ-ரி)

# ஒஸ்கார் விருதுக்கான திரைப் படங்கள்

லண்டன், ஜன. 17
இந்த ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுகளுக்காக பரிந்துரைக் கப்பட்டுள்ள திரைப்படங்கள் மற்றும் கலைஞர்களின் பட்டி யல் வெளியிடப்பட் டுள்ளது.



சிறந்த திரைப்படத் துக்கான விருதுக்கு பேர்ட்மேன், திகிராண்ட் புடாபெஸ்ட் ஹோட் டல் என்பவை உட்பட 8 படங்கள் போட்டியிடு கின்றன.
இந்த இரண்டு படங்களும் 9 வேறுபட்ட விருதுகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.
போலந்து, ரஷ்யா, எஸ்டோ னியா, மோரிடானியா மற்றும் ஆர்ஜென்டினாவில் தயாரிக்கப் பட்ட படங்கள் சிறந்த வேற்று மொழித் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதுக்காகப் பரிந் துரைக்கப்பட்டுள்ளன.
(ஒ–ரி)

# ஜனநாயகத்துடன் ஒருங்கிணைந்து போகக் கூடிய மதம் இஸ்லாம்

## பிரெஞ் ஜனாதிபதி கூறுகிறார்

பாரிஸ், ஜன. 17
இஸ்லாம் மதம் ஜனநாயகத் துடன் ஒருங்கிணைந்துபோகக் கூடியது என்றும் பிரான்ஸ் சகல மதங்களையும் பாதுகாக்கும் என்றும் அந்த நாட்டு அதிபர் பிரான்ஸுவா ஹோலண்டே தெரி வித்துள்ளார்.




மதச்சார்பற்ற கொள்கை என்பது சகல மதங்களுக்கும் மதிப்பளிப் பது என்றும் அதனை அச்சுறுத் தும் விதத்தில் நடந்துகொள்வோ ருக்கு எதிராக கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் பாரிஸில் உள்ள அரபு உலக நிறு வனத்தில் உரையாற்றிய பிரான்ஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.
உலகெங்கிலும் ஏற்பட்டுள்ள மோதல்களால் உருவாக்கப்பட் டுள்ள அடிப்படைவாதத்தாலும் கடும்போக்குவாதத்தாலும் சகிப்புத் தன்மையற்றமையா லும் பெரிதும் பாதிக்கப்பட்டவர் கள் முஸ்லிம்களே என்றும் ஹோலண்டே தெரிவித்துள்ளார்.
பாரிஸில் இஸ்லாமிய தீவிர வாதிகள் இருவரினால் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின்பின் னணியில் பிரான்ஸ் அதிபரிட மிருந்து இவ்வாறான கருத்து வெளியாகியுள்ளது. (ஒ–ரி)

# மதச் சுதந்திரத்தை ஆதரிப்பதாக பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவிப்பு



மணிலா, ஜன. 17
அனைத்து மக்களினதும் கருத் துரிமையை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள பாப்பரசர், அதேவேளை மற்றவர்களின் மத நம்பிக்கைகளை இழிவு படுத்தி அவர்களைக் கொதித் தெழச் செய்வது தவறு என்று தெரிவித்துள்ளார்.
ஐந்து நாள் பயணமாக பிலிப் பைன்ஸுக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்தபோதே பாப்பரசர் பிரான்சிஸ் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.
செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பாப்பரசர், 'இங் குள்ள உதவியாளரின் தாயை நீங்கள் எவராவது மோசமாகப் பேசினால் அவர் உங்களைத் திரும்பத் தாக்கலாம் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம்' என்று தெரிவித்தார்
பிரான்ஸின் நையாண்டிப் பத் திரிகையான ஷார்லி ஹெப்டோ மீது கடந்த வாரம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலை யிலேயே பாப்பரசரின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள் ளன.
இலங்கைச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பிலிப் பைன்ஸ் தலைநகர் மணிலா வுக்குச் சென்ற பாப்பரசரை அந்த நாட்டின் அதிபரும் பல்லா யிரக்கணக்கான மக்களும் உற் சாகமாக வரவேற்றுள்ளனர்.




பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்குச் சென்ற பாப்பரசரை பல்லாயிரக்கணக்கான மக்கள் உற்சாகத்துடன் வரவேற்கின்றனர்.
(ஒ–ரி)

# சீனாவில் படகு விபத்து 20பேர் சாவு

ஷாங்காய், ஜன.17
சீனாவின் கிழக்குப் பகுதியில் ஷியாங்ஷு மாகாணத்தில் உள்ள யாங்ட்ஷ் ஆற்றில் கப் பலை இழுத்துச் செல்லும் நீரா விப்படகொன்று பயணம் செய்து கொண்டிருந்த வேளையில் அந் தப் படகு விபத்துக்குள்ளானது. அதில் 20 பேர் சாவடைந்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர் களும் அந்தப் படகில் பயணம் செய்தனர். அந்தப் படகு ஆற்றில் சென்று கொண்டிருந்தபோது



திடீரென தண்ணீரில் மூழ்கியது. தகவல் அறிந்ததும் மீட்புக் குழு வினர் அங்கு விரைந்தனர். தண் ணீரில் தத்தளித்த 3 பேரை மட்டுமே அவர்களால் உயிரு டன் மீட்க முடிந்தது. மேலும் 20 பேரைக் காணவில்லை. அத னைத் தொடர்ந்து தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட் டுள்ளது. இருந்தும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, அவர்கள் அனைவரும் சாவடைந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# பெல்ஜியத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்; இருவர் சுட்டுக்கொலை

புருசல், ஜன. 17
பெல்ஜியத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் 2 தீவிரவாதிகள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இதுகுறித்து அந்தநாட்டுப் பொலிஸார் தெரிவிக்கையில் பெல்ஜியம் நாட்டின் பிரஸ்செல்ஸ் அருகே புறநகர்ப் பகுதி ஒன்றில் தீவிரவாதி கள் ஒளிந்திருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர். ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தீவிரவாதத் தாக்குதல்கள் காரணமாக இதுவரை பெல்ஜியத்தில் இருந்து 300க் கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து ஈராக் மற்றும் சிரியாவுக்கு சென்று விட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# பப்புவா நியுகினி தஞ்சக் கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

கன்பரா, ஜன. 17
ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியவர்கள் பலர் பப்புவா நியுகினி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்
பப்புவா நியுகினியில் உள்ள ஆஸ்திரேலியாவின் தடுப்பு முகாமில் 500 அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்கள் பெரும் உண்ணாவிரதப் போராட்ட மொன்றை ஆரம்பித்துள்ளதாக ஆஸ்திரேலிய மனித உரிமை கள் அமைப்பொன்று தெரிவித் துள்ளது.
தடுப்புமுகாமில் நிலவும் சீர்கே டான நிலைக்கு எதிர்ப்புத் தெரி வித்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மனுஸ் தீவு தடுப்பு முகாமில் உள்ள தஞ்சக் கோரிக்கையா ளர்கள் சிலர் தங்களின் உதடு களைச் சேர்த்துத் தைத்துக் கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.
அமைதியான முறையில் தஞ்சக் கோரிக்கையாளர்கள் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், யாரும் உணவைப் புறக்கணிக்க வில்லை என்றும் அரசு கூறியுள் ளது.
2013ஆம் ஆண்டில் கைச்சாத் தான உடன்படிக்கையின்படி, ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவோரை ஆஸ்திரேலியா வுக்கு வெளியில் தங்கவைப் பதற்காகப் பப்புவா நியுகினிக்கு பல மில்லியன் டொலர்கள் நிதி வழங்கப்பட்டுள்ளது.
எனினும் இந்த முகாம்களில் வசிக்கும் எவரும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்பட வில்லை.
(ஒ–ரி)

# பல்சுவை

## மார்பகப் புற்றுநோயை தடுக்கும் மாதுளம்பழம்

மார்பகப்புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் மாதுளம் பழத்துக்கு உண்டு என்று சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மார்பகப்புற்றுநோயும்; கர்ப்பப்பை புற்றுநோயும் பெண்கள் அதிகம் அச்சப்படும் விடயங்களாகும். பெண்களின் உடலில் ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஹார்மோன் சுரப்பு அதிகரிப்பதன் காரணமாகவே 4 இல் 3 பெண்களுக்கு புற்று நோய் ஏற்படலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பெண்களின் மார்பகப்புற்று நோயை தடுக்கும் ஆற்றல் மாதுளம் பழத்துக்கு உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மாதுளம்பழத்தில் இயற்கையாகவே உள்ள பைட்டோகெமிக்கலானது ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஹார்மோனை கட்டுப்படுத்துகிறது. இதனால் மார்பக புற்றுநோய்க்கு காரணமான செல்கள் மற்றும் கட்டி வளர்வது தடுக்கப்படுகிறது.



## நாளை 2015

**தை-04 ஞாயிற்றுக்கிழமை**
**18.01.2015**

திதி: திரயோதசி மு.இ.11.23 மணி வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ.04.59 மணி வரை
சுபநேரம்: 09.35-11.05 மணி வரை
இராகுகாலம்:05.05-06.35 மணி வரை
**பிரதோஷ விரதம்**



## ஆரோக்கிய அமிலங்கள்

பல வகையான சத்துகளும், விற்றமின்களும் சேர்ந்து தான் நம்மை ஆரோக்கியமாக செயல்பட வைக்கிறது. ஒவ்வொரு உணவுகளில் இருந்து பெறப்படும் சத்துக்களும் ஒவ்வொரு உறுப்பை பாதுகாக்கின்றன. சில விற்றமின்கள் அமிலங்களாக உடலுக்கு சத்துக்களை வழங்குகின்றன. இவை இயற்கையாகவே சுரக்கும் தன்மை கொண்டிருந்தாலும், இவற்றில் சில மாறுபாடுகள் ஏற்படும்.போது அதாவது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சுரக்கும் போது பாதிப்புகள் ஏற்பட ஆரம்பிக்கிறது. நிக்கோடினிக்கமிலம் இரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொலஸ்ட்ரால் அளவை நிலைப்படுத்த நியாசின் பெரிதும் உதவுகிறது. இந்த அமிலத்தின் அளவு குறையும் போது அதிகப்படியான பதற்றம், சத்துக்குறைபாடு, எரிச்சல், ஞாபக மறதி, போன்ற பாதிப்புகள் தாக்கக் கூடும். உடம்புக்குத் தேவையான சத்துக்களை உற்பத்தி செய்ய பெத்தோடெனிக் அமிலம் தேவை. இது மனிதனின் மூளை, நரம்பு மண்டலங்களின் செயற்பாடுகளுக்கு மிகவும் உதவிபுரிகிறது. கவனமின்மை,பல்வலி, வாந்திமற்றும் சத்துக்குறைபாடு,போன்றபாதிப்புகள் போத்தொடெனிக் அமிலம் குறைவதனால் ஏற்படுகின்றன.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | பருத்தித் துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 400 | 600 | 800 | 380 |
| நண்டு | 400 | 300 | 300 | 300 | 300 |
| கணவாய் | 450 | – | 400 | – | – |
| பாரை | 400 | – | 450 | 500 | 370 |
| சுறா | 500 | – | 500 | 800 | – |
| சீலா | 400 | – | 350 | 400 | – |
| விளை | 400 | 300 | 320 | 400 | – |
| முரல் | 300 | 300 | 300 | 300 | – |
| கும்பிளா | 250 | 250 | 400 | 300 | 200 |
| கிழாக்கன் | 500 | – | 300 | – | – |
| ஓரா | 200 | – | 300 | 350 | 200 |
| திரளி | 250 | – | 150 | 150 | – |
| நகரை | 250 | – | 200 | 150 | 220 |
| சூடை | 150 | – | 100 | 200 | 60 |
| ஒட்டி | 100 | 200 | 200 | 150 | 170 |
| திருக்கை | 300 | 200 | 180 | – | 110 |
| பாலை | 200 | 300 | 350 | 50 | – |
| வாளை | 150 | – | 300 | 150 | 150 |
| கொய் | 150 | – | 100 | – | – |
| மதனம் | 250 | 150 | 250 | – | 130 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 140 | 70 | 80 | 80 | 80 | 120 |
| கத்தரி | 300 | 240 | 240 | 380 | 240 | 300 | 240 |
| கரட் | 160 | 180 | 140 | 210 | 200 | 280 | 400 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 50 | 60 | 40 |
| பயிற்றை | 250 | 220 | 220 | 220 | 260 | 280 | 300 |
| பாகல் | 350 | 280 | 280 | 300 | 280 | 280 | 250 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 50 | 60 | 120 | 50 |
| பெ.வெங்காயம் | 120 | 90 | 100 | 110 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 100 | 80 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 | 35 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 100 | 180 | 180 | 180 | 200 | 150 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 | 90 | 120 | 90 |
| கீரை | 15 | 30 | 30 | 20 | 20 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 40 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 800 | 800 | 700 | 700 | 650 | 1000 | 800 |
| புடோல். | 160 | 120 | 120 | 120 | 140 | 200 | 150 |
| கோவா | 160 | 150 | 130 | 140 | 140 | 180 | 180 |
| வெண்டி | 200 | 140 | 150 | 130 | 200 | 400 | 160 |
| போஞ்சி | 300 | – | 300 | 380 | 240 | 400 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 280 | 340 | 360 | 360 | 400 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40 | 40 | 35 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 80 |
| தேசிக்காய் | 50 | 70 | 80 | 60 | 70 | 100 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 280 | 400 | 240 | 320 | 250 | 400 | 400 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 130 | 100 | 160 | 80 |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 4 | 9 | 6 | 5 | 3 | 7 |
| 9 | 7 | 5 | 1 | 3 | 2 | 6 | 4 | 8 |
| 6 | 3 | 4 | 7 | 5 | 8 | 1 | 2 | 9 |
| 7 | 2 | 9 | 3 | 1 | 5 | 4 | 8 | 6 |
| 3 | 5 | 6 | 8 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 8 | 4 | 1 | 6 | 7 | 9 | 3 | 5 | 2 |
| 4 | 9 | 7 | 2 | 6 | 3 | 8 | 1 | 5 |
| 1 | 8 | 2 | 5 | 4 | 7 | 9 | 6 | 3 |
| 5 | 6 | 3 | 9 | 8 | 1 | 2 | 7 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | | 7 | 9 |
| | 9 | | | | 4 | 2 | | |
| 7 | 4 | 8 | | | | | | |
| 8 | 5 | | 4 | 1 | 2 | 7 | | |
| | 6 | 2 | 7 | | 9 | 1 | 4 | |
| | | 7 | 8 | 3 | 6 | | 2 | |
| | | | | | | 6 | 3 | 2 |
| | | 4 | 2 | | | | 1 | |
| 1 | 2 | | | | | 8 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி 'ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### வெற்றிக்கு வழி

ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு அதன்படியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். அதனைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிக் கனவு காணுங்கள். உடலின் ஒவ்வொரு அணுவிலும் அந்தக் கருத்தே நிறைந்திருக்கட்டும். வெற்றிக்கு இது தான் வழி.

உலகுக்கு நன்மை செய்தால், நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடி கொண்டிருக்கிறார் என்ற உண்மையை அனைவரும் உணர வேண்டும். நான் அல்ல.. நீயே' என்ற மனப்பான்மையே, சகல நன்மைகளுக்கும் அடிப்படை. சுயநலத்தை உதறி விட்டு பொதுநலனுக்காக வாழ்வை அர்ப்பணியுங்கள்.




## கூட்டெண் பலன்கள் 6-4

சுக்கிரனுடன் ராகு சேர்ந்த ஆதிக்கப் பலன் இவர்களுக்கு அமையும்உயரமாக இருப்பார்கள். பருமனாகவும் வாட்ட சாட்டமான தோற்றத்துடன் இருப்பர். கண்கள் இலேசாக மாறு கண்ணுடன் அமைந்திருக்கும்.

நன்கு விரைவாகப் பேச வல்லவர்கள். பேச்சில் நகைச் சுவையும், உலக விவகாரமும் கலந்து பிரமிக்க வைக்கும். நன்கு குரல் வளம் அமைந்திருக்கும். இவர்கள் பேச்சு கவிதை போல் இருக்கும்.

தெய்வ நம்பிக்கை உடையவர்கள். குழந்தை போலப் பொறுப்பின்றி இருப்பார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என, எதையாவது செய்துவிட்டு அவதிப்படுவார்கள். பிறருக்கு அதிகமாகவே உதவுவார். இவர்களின் சிந்தனை அற்புதமாக இருக்கும். நடவடிக்கை மட்டமானதாகும்.

சமயத்துக்கேற்ப எதையும் செய்ய நினைப்பார்கள். எளிதில் பிறரிடம் ஏமாறுவர். வேதாந்தமும் யோகமும் ஒருபுறம் மனத்தை இழுத்தாலும் உலகசுகவாழ்க்கை இவர்களை விடாது. பிறந்த இடத்தை விட்டு பிற இடங்களுக்கு வந்து பிரபலமாவார்.

கலை, கலை சார்ந்த தொழிலே பொருத்தம். கதை, கவிதை, வசனம், இயக்கம், தயாரிப்பு, படத்துறை என்று அனைத்துத்துறையிலும் இருப்பர். இந்த எண்காரர்களுக்கு நீரிழிவு நோய் வரலாம். வெப்பத்தால் நோய்கள் உண்டாகும். மஞ்சள் காமாலை தாக்கலாம்.

## கூட்டெண் பலன்கள் 6-5

சுக்கிரனும் புதனும் சேர்ந்து தரும் ஆதிக்கப் பலன் இவர்களுக்கு சராசரி உயரமும் கவர்ச்சியான உடலும், தெளிவான முகமும் இருக்கும். காது கேட்பது மந்தமாக இருக்கும்.

மிகச்சிறந்த நட்பைத் தரக்கூடியவர்கள்.தெய்வசக்தி உள்ளவர்கள். விதியை நம்புவர். எதையும் ஆர்வத்துடனும்அக்கறையுடனும் செய்வர். செலவாளியாக இருப்பார்கள். வேளைக்கு உண்ணாது உறங்காது கூடச் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபடும் இவரை நெருங்கிய மனிதரும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.

ஆடம்பரமாக நடப்பார்கள். எளிமையான நல்ல பெண்களை விரும்புவார்கள், காதலிப்பார்கள்.

திருமணமும் நடக்கும். தம்மிடம் பிறர் யோசனை கேட்பதையே விரும்புவார். இவர்களைப் புரிந்து கொள்ளப் பொறுமை வேண்டும்.

அழகுணர்வுடன் அழகை ரசித்து மகிழும் இவர்கள் பெரியவர் பார்த்து வைக்கும் முன்பே காதலித்துவிடுவர். சாதி மதம் கடந்துகூடக் காதல்புரிவர். மனமொத்த இல்லறம் நடக்கும். சொந்த வீடு, சொத்து வரும். ஏதாவது காரணத்தால் குடும்பத்தை விட்டுப் பிரிந்தும் இருக்க நேரும்.

கலையார்வமும், கலைத் திறமையும் இருந்தாலும் சுயமரியாதையை விடாமல் தொழில் செய்ய நினைப்பர். இசை, நடனம், நடிப்பு, கதை, வசனம், இயக்கம், பாடல் இயற்றுதல் எல்லாம் இவர்களுக்கு நன்கு கைவரும். அதிர்ஷ்டமும் நன்றாக அமையும். புதிய முறை, நவீன நாகரிகம், இளமை நடைமுறை, கேளிக்கைகள், அரட்டை என்பவற்றை விரும்புபவராக இருப்பர்.

இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி இருக்கும். நீரிழிவு வியாதி தாக்கக்கூடும். உடற் பயிற்சி செய்வது நல்லது.

CM K




# துணையை

## தேர்ந்தெடுப்பதில் கவனம்

திருமணம் செய்து கொள்ளப் போகும் நபர் எப்படிப்பட்டவர் என்பது தெரியாமல், மனம், ஒருவித அழுத்தத்துட னும், படபடப்புடனும் இருக்கும். ஆனால் அந்தத் திருமணம் விருப்பப்பட்ட வருடன் நடந்தால், அப்போது வாழும் வாழ்க்கையே ஒரு தனிச் சுகம் தான். அந்த வகையில் திருமணம் செய்து கொள்ளக் போகும் நபர், மிகவும் நெருங்கிய நண்பனாக இருந்தால், எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கலாம். திருமணம் செய்து கொள்பவருடன் மனம் ஒத்துப் போகாமல் இருந்து, அடிக்கடி சண்டை போடுவதை விட, நன்கு புரிந்து கொண்டு, காதல் மலரை வைத்த தோழனை மணந்தால், நிறைய நன்மைகள் கிடைக்கும். நண்பர்களை மணந்து கொள்ளும் போது, அவர்களுக்கு நம்மைப் பற்றிய கடந்த கால வாழ்க்கை பற்றி நன்கு தெரியும். மேலும் விருப்பங்கள், உணர்ச்சிகள் போன்றவற்றை நன்கு புரிந்திருப்பதால், திருமணத்திற்குப் பின்னர் நல்ல புரிதலுடன் சந்தோசமான வாழ்க்கை வாழ முடியும். புதிய நபரை திருமணம் செய்து கொண்டு, அவர்களுடன் சகஜமாகப் பழகுவதற்கு பல மாதங்கள் ஆகலாம். மேலும் அத்தகையவர்களிடம் சாதாரணமாக பழகுவதற்கு ஒருசில பழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டிவரும். ஆனால் அதுவே தோழனாக இருந்தால், சாதாரணமாக சங்கடம் ஏதுமின்றி சகஜமாகப் பழகலாம். நண்பர்களை மணந்து கொள்வதில் உள்ள நன்மைகளில் முக்கியமானது, மனதில் இருக்கும் கோபம், பொறாமை போன்றவற்றை வெளிக்காட்ட முடியும். இதனால் இருவரும் சிறு சண்டைகளுக்காக பிரியும் நிலை இருக்காது. ஆனால் வெளி நபராக இருந்தால், மனதில் வைத்துக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். எதையும் வெளிப்படையாகப் பேச முடியாது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாது.

மேலும் உங்களுக்குப் பிடித்தது ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்திருப்பதால், உங்களுக்காக அதற்கு தடை போடாமல், உங்களை ஊக்குவித்து, உங்களுடன் சேர்ந்து அதனை மேற் கொள்வார்கள்.



# அதிக மன அழுத்தத்தில் பெண்கள்

இன்றைய காலத்தில் அலுவலகத்தில் உள்ள அதிகப்படியான வேலையால், தற்போது பெரும்பாலானோர் அதிக களைப்பால் மட்டுமின்றி, அதிக மன அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டு, அதனால் பல நோய்களுக்கு ஆளாகின்றனர். அதுமட்டுமின்றி, வாழ்க்கை முறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், எந்த ஒரு செயலையும் நிம்மதியாக செய்ய முடியாத நிலை. வேலைப்பளு அதிகமாக இருந்தால், ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை 5 நிமிட இடைவேளை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு திறம்பட வேலை செய்தாலும் கூட, கவனம் சிதறி மனம் அலை பாய்வது நடக்கத்தான் செய்யும். ஓய்வெடுக்க வேண்டுமானால் நீட்சி ஓர் எளிய வழியாகும். அதற்கு உடலைப் புரிந்து கொண்டு மூச்சு பயிற்சியில் கவனம் செலுத்துங்கள். உடலை அப்படி இப்படி அசைத்தால், தசை இறுக்கம் நீங்கும். மேலும் இது உங்கள் வேலையில் உங்களை கவனம் செலுத்த வைக்கும். நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவது, உடன் வேலை செய்பவர்களுடன் வேடிக்கையாகப் பேசுவது, நகைச்சுவைப் புத்தகம் படிப்பது, குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுவது போன்றவைகள் உங்களுக்கு மன நிம்மதியை அளித்து அமைதியை ஏற்படுத்தும். உண்மையிலேயே அமைதி பெற வேண்டுமானால், ஒரு ஐந்து நிமிடம் தியானம் செய்தால், நிச்சயம் தியானத்துக்கான பலனைக் காணலாம். முக்கியமாக அது மன அழுத்தத்தை நீக்கும். நேர்மறையான சிந்தனைகள் உங்கள் மனநிலையை நல்ல விதமாக ஊக்குவிக்கும். அதனால் எதிர்மறையான சிந்தனைக்குச் செல்லாமல், நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்பத் தொடங்குங்கள். நீங்கள் எதிர்கொள்ளும் அனைத்தையும் சமாளிக்கும் திறன் உங்களிடம் இருக்கிறது என்று நம்புங்கள். வீட்டில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து, அங்கே அமர்ந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்து அமைதி பெறுங்கள். கண்டிப்பாக ஓய்வு எடுக்கும் நேரம் கைபேசியை அணைத்துவிடுங்கள்.

# செய்திகள்


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் V. **ஞானச்சந்திரன்** அவர்களின் தாயும் மற்றும் தாதிய சகோதரி **திருமதி மலர்விழி ஞானச்சந்திரன்** அவர்களின் மாமியாருமாகிய

**திருமதி வைரமுத்து சிவபாக்கியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரி சங்கம்,
போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம். (55860) (5,7,15)





## சாதனாவின் 31 ஆம் நினைவு நாள்

### செல்வி சாதனா தங்கவேல்

அன்னை மடியில்
1989.02.07

இறைவன் அடியில்
2014.12.19

எங்கள் அருமைச் செல்வமே! எங்கு சென்றாய்?
எம்மை ஏக்கத்தில் தவிக்க விட்டு பூத்துக் குலுங்கிய புதுமலரே!
இன்று உதிர்ந்த பூவாய் பூமியில் போனாயே!
காணும் இடமெல்லாம் உன் காட்சி தெரியுதம்மா
உண்ணும் உணவும் விசமாய் போனதம்மா
உறங்கும் படுக்கை முள்ளாகிப் போனதம்மா!
கண்ணீர் வடிக்கின்றோம் கண்மணியே
நாம் மண்ணோடு மறையும் வரை உன்னோடு மறையும் வரை
உன்னோடு உறைந்திருக்கும் எம் உணர்வுகள்
ஓம் சாந்தி!

நாளை (18.01.2015) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(அ/18681)(4.3.7)


CM K


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் கிருஸ்ணபிள்ளை தங்கவடிவேல் JP

(வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)



அன்னை மடியில்
14.04.1934

விநாயகன் அடியில்
05.12.2014

ஊருக்கு உத்தமராய்
தர்மத்தின் தலைவனாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
எம்மை இவ்வுலகில் மிளிரச் செய்து
கண்ணிமைக்கும் நேரத்தில் பிரிந்த தேனோ
நிலவுலகில் எம் உயிர் மூச்சு உள்ளவரை
நீங்களெமதுயிர் மூச்சாய் நிற்பதுண்மை.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.01.2015) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய். (55859)(4.3.7) குடும்பத்தினர்.


## சைவப் புலவர் சங்க விரிவுரை

யாழ்ப்பாணம்.ஜன.17

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளம் சைவப்புலவர், சைவப் புலவர் வழிகாட்டல் விரிவுரை வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக விண்ணப்பித்தவர்களை விரிவுரைகளில் பங்கு பற்றுமாறு சங்கத்தின் செயலாளர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (வ–14)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.07.1949



மறைவு
07.02.2013

**திருமதி றோஸ்மாக்கிரட் சற்குணலிங்கம்**

(முன்னாள் தொலைபேசி இயக்குநர் Sri Lanka Telicom - யாழ்ப்பாணம்.

திதி: துவாதசி

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்க விட்டு விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா!

பழைய தபாற்கந்தோர் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (55949)(12.3.7)

கணவர், மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் வேலுப்பிள்ளை வீரபத்திரபிள்ளை**

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் - SLAS புலோலி)

திதி: துவாதசி (17.01.2015)

தோற்றம்
13.05.1947

மறைவு
28.01.2014



ஓராண்டு சென்றாலும்
ஈரவிழி காயவில்லை
மறுஜென்மம் எனும் சொல்லை
மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்மோடு உங்கள் ஆத்மா
எந்நாளும் கூட வரும்.

உங்கள் இழப்பை ஈடுகட்ட முடியாமல் தவிக்கும்

இந்திர பவனம்,
புற்றளை, புலோலி. (410670)(17.3.7)

குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுப்பையா
**அருமைநாயகம்**

தோற்றம்
20.05.1927

மறைவு
27.01.2014



பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளில்
நாம் என்றும் வாழ்கின்றோம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**41, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(45.3.7) (55091)


## வழிகாட்டல் கருத்தரங்கு

திறந்த பல்கலைக்கழக சட்ட மாணி 2015 – 2016 ஆம் ஆண்டுக் குரிய அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை வவுனியா ரயில் நிலைய வீதியில், உணவுக் களஞ்சிய சாலை முன்பாக அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில் குறித்த வழி காட்டல் கருத்தரங்கு நடைபெறும் இந்த கருத்தரங்கில் சட்டத்தரணி எம்.ஐ. உவைஸ்சுர் ரஹ்மான், தமனஉதவி பிரதேச செயலாளர் சாபிர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (வ–10)

## விபத்தில் பெண்ணின் இடுப்புப்பகுதி பாதிப்பு

சமிக்ஞை வெளிப்படுத்தாது திடீரெனத் தனது மோட்டார் சைக்கிளை மறுபக்கம் திருப்பிய வேளையில் அதே திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண்ணொருவருக்கு இடுப்புப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்தியில் இடம் பெற்றது. சரசாலையைச் சேர்ந்த கணேசன் கஜனி (வயது–28) என்பவரே இவ்வாறு காயமடைந்தவர் ஆவார்.

குறித்த பெண் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு மோட்டார் சைக்கிளை சாவகச்சேரி சந்தியில் உள்ள சுற்று வட்டத்தில் செலுத்திச் சென்ற வேளையில் ஏ–9 வீதியூடாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் தூக்கி வீசப்பட்டதில் நாரிப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் குறித்த பெண் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ–9)

## துப்புரவு செய்யுமாறு கோரிக்கை

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பற்றைக் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு வலி. கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தவராஜா அறிவித்துள்ளார். துப்புரவு செய்யத் தவறும் பட்சத்தில் குறித்த ஆதனங்கள் பிரதேச சபையால் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ–4)

PLC

People's Leasing & Finance PLC



Come...
Join the Leader

People's Leasing & Finance PLC, a public quoted company is a flagship subsidiary of People's Bank and the largest Non –Banking Financial institution with the highest rating AA-(lka) by Fitch Ratings (Lanka) Ltd. People's Leasing spreads its wings across the island with 89 strong branch network. Today People's Leasing & Finance PLC is also a formidable group of companies comprising of People's Insurance Ltd., People's Leasing Fleet Management Ltd, People's Leasing Property Development Ltd. People's Leasing Havelock Properties Ltd.Our product range comprises of leasing, Hier purchase, Fixed Deposits, Savings, Margin trading, Quick Cash Loans, Micro Finance, Property Development , Fleet Management etc.. **We are looking for result oriented recently passed out graduates with below 28 years of age for our Northern & Eastern Province branches (Jaffna, Chunnakam, Kilinochchi, Mannar, Vavuniya, Trincomalee, Kanthale, Batticaloa, Kalawanchikudy, Ampara, Kalmunai, Kattankudy, Mutur).**

**Qualifications Required**
Smart dynamic individuals who possess with following qualifications

- A Degree from a recognized university (preferable with a class) in the field of Management / Commerce/ Finance/ Accounting/ Law/ Marketing/ Business Administration/ Information Technology/ Insurance/ Economics or Science

OTHER REQUIREMENTS
- Excellent interpersonal skills
- Age below 28 years
- High level of written and oral communication/presentation skills in English
- Full or part qualifications in recognized professional institutions and experience will be added advantage

**Remuneration**

An attractive and negotiable remuneration package will be on offer to selected candidates, depending on experience and qualifications.

**Application**

Applicants are invited to submit a comprehensive curriculum vitae with names of two non related referees, copies of relevant certificates along with the passport size photograph and indicating the position as "Staff Officer" on the top left hand corner to the address given below on or before 30-01-2015.

Head of HR (PLC Group)
**People's Leasing & Finance PLC**
No.1161, Maradana Road, Borella, Colombo 08.
e-mail: careers@plc.lk

*Canvassing in any form will be a disqualification. We will correspond only with applicants short-listed for interviews.*

# தரம் ஒன்று மாணவரின் கால்கோள் விழா

வடமராட்சி கல்வி வலய 2015 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா இந்த முறை மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள அம்பன் அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி வலய ஆரம் பக் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங் கம் தலைமையில் பாடசாலை மண்டபத் தில் நடைபெறவுள்ளது.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மராட்சி வலயகல் விப் பணிப்பாளர் சிவ பாதம் நந்தகுமார் கலந்துகொண்டுஆரம் பக்கல்வி தொடர் பான கருத் துரை ஆற்றுவார்.
அத்துடன் மருதங் கேணி கோட்டக் கல்விப் பணிப்பா ளர் ச.திரவியராசா சிறப்புவிருந்தினரா கக் கலந்து சிறப் பிக்கஉள்ளார்மேலும் கல்லூரி அதிர்வி.பர மேஸ் வரன் கௌர விருந்தின ராகக் கலந்துகொள்வார்.(கு)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
தடுப்பு ஊசிகள் போடப்பட்ட, 45 நாள்கள் நிரம்பிய தூய இன ஜேர்மன் செப்பட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 947 5996

## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 2014 பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களை
**கௌரவித்தலும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2015**

காலம்: 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி
இடம்: கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை: செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)
அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.செல்வச்சந்திரன்
செயலாளர்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(சி.18662) (45.3)

## நல்லூர் பிரதேச சபை, இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகளுக்கான 01.02.2015-31.12.2015 வரையுள்ள காலப்பகுதிக்கான ஏலக்கேள்வி அறிவித்தல்

ஏலக்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 01 | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல 1 | 351,100.00 | 5000.00 |
| 02 | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல 2 | 250,300.00 | 5000.00 |
| 03 | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை 1 | 338,095.00 | 5000.00 |
| 04 | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை 2 | 338,095.00 | 5000.00 |
| 05 | கொக்குவில் சந்தை கருவாட்டுக் கடை 1 | 77,400.00 | 5000.00 |
| 06 | கொக்குவில் சந்தை கருவாட்டுக் கடை 2 | 77,400.00 | 5000.00 |

**ஏலம் கோரும் திகதி :- 22.01.2015, பி.ப 2.00 மணி.**
**வைப்புப்பணம் செலுத்தும் இறுதித் திகதி :- 22.01.2015, நண்பகல் 12.00 மணி வரை.**
**ஏலம் நடைபெறும் இடம் :- நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகம்.**

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் கேள்வி வைப்புப் பணத்தை 22.01.2015 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று ஏலக்கேள்வியில் கலந்து கொள்வதுடன், சித்திகரக் குத்தகைக்காரர் குத்தகைத் தொகையின் 1/3 பங்கிற்குரிய தொகையை (NBT, VAT அடங்கலாக) உடனடியாக செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். தவறின் அடுத்த கேள்விதாரரின் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டு கடை குத்தகைக்கு வழங்கப்படும்.

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.
17.01.2015

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(சி/18684)(4.3.7)

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களின் விவேகமான பாடநெறித்தெரிவுகள்**

DiTEC Plus
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
தவணை முறை கட்டண வசதி
Duration 4 Months
Spoken English அல்லது Tally Accounting

Graphics & Animation
- Digital Pre-Press
- Graphics Design
- Digital Video Production
- Web Design & Development

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
ISO 9001 : 2008 Certified Institution


Advanced Diploma in Hardware & Networking
Certificate in Computerized Accounting

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | வவுனியா | பதிவுகள் |
|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677 | A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925 | 192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050 | தற்பொழுது ஆரம்பம். |

# செய்திகள்

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு ★ 22 ★ 04 ★ 1949



இறப்பு ★ 16 ★ 01 ★ 2015

### சுப்பிரமணியம் கற்பநாதன்

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு உருத்திரா மாவத்தையை வசிப்பிடமாகவும், (அப்புத்தளை சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ் (முன்னாள் பங்காளர்) வேல்முருகன் ஸ்டோர்ஸ் பிரபல வர்த்தகருமான) சுப்பிரமணியம் கற்பநாதன் நேற்று (16.01.2015) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா (மணற்பிட்டி காரைநகர்) தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கமலச்சந்திரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கௌரி (முகாமையாளர் - லண்டன்), கருணாநிதி (வர்த்தகர், வேல்முருகன் ஸ்ரோர்ஸ் - அப்புத்தளை), கவிதா கண்ணதாசன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), சியாமளா (Access Engineering) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராஜா (முகாமையாளர் - லண்டன்), சசிரேகாவின் அன்பு மாமனாரும், வேலுப்பிள்ளை (சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ் - அப்புத்தளை), புனிதவதி, தவரட்ணராசா, குலேந்திரராசா, உருத்திரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.9 A, உருத்திராமாவத்தை,
கொழும்பு - 06.
தொ.பே: 0112361378, 077 740 5952

(55826) (12.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஆட்சி மாற்றத்தின் அவசியத்தை உணர்ந்த மக்கள் கோரிக்கையை நிறைவேற்றினர்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஜன.17

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்றைய காலகட்டத்தில் ஆட்சி மாற்றம் அவசியம் என்று தெரிவித்ததை அடுத்து மக்கள் எமது கோரிக்கைக்கு அமைய அதனை நிறைவேற்றியுள்ளனர் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சில் தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் அமைச்சின் செயலாளர் எஸ். வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரத்தினம் ஆகியோர் தையல் இயந்திரம், மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை பயனாளிகளுக்கு வழங்கினர்.

விந்தன் கனகரத்தினம் தொடர்ந்து பேசும்போது; வடக்கு மாகாண சபைக்கு மத்திய அரசால் போதிய நிதி வழங்கப்பட்டுள்ள போதும் அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை என்று வடக்கு மாகாண சபை எதிரணியினர் குற்றம் சாட்டியது கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே.

உண்மையில் எமது மாகாண சபைக்கு மிகவும் குறைந்த அளவிலான நிதியையே அரசு வழங்கியிருந்தது. அந்த நிதியைக் கொண்டே எமது திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. எனக்கு வழங்கப்பட்ட நிதியில் ரூபா 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை உங்களுக்கான வாழ்வாதார உதவிக்கென ஒதுக்கி இந்த உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

எதிரணியினரின் தவறான பரப்புரைகளைப் பொருட்படுத்தாது ஆட்சி மாற்றத்தின் தேவை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்குத் தெரிவித்ததை மக்கள் ஏற்றுக் கொண்டு இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட உதவியுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்தவும், எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், உங்களுக்கு ஒரு நிரந்தர விடிவைக் காணவும் எமது கட்சியினர் அரசுடன் பேசித் தீர்வு தருவார்கள் என்று எதிர் பார்க்கலாம் என்றும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

(வ-7)

## வைத்திலிங்கம் பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்)

தோற்றம் ★ 22 ★ 07 ★ 1918



மறைவு ★ 09 ★ 01 ★ 2015

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வதிவிடமாகவும், தற்பொழுது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்) அவர்கள் 09.01.2015 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சீதாத்தப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாமணி, சிந்தாமணி, சிரோன்மணி, இராஜசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், வாசுகி, சனாத்தனா, சங்கரன், சயந்தன், சாந்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செந்தில்மதி, மைதிலி, பாரதி, பிரேமகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சீவ், மயூரா, அனுஷ்கா - கேஷவா, டிலானி, டிலேஸ், தனுஜன், அஸ்வினி, அங்குஜன், நந்தீஷன், ஆரபி, ஆரபன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவானியா, அருண், அமரன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2015) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மகன் - சயந்தன் (லண்டன்)
00447540299916,
மகன் - சாந்தீபன் (லண்டன்)
00447846499486

(55866) (12.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 11 . 1957



இறப்பு 15 . 01 . 2015

### கந்தசாமி இதயகுமார்

யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இதயகுமார் 15.01.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (ஆசிரியர்) மற்றும் குணவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், ஜீவகா, கிருஜா, வனஜா, சரோஜா காலஞ்சென்ற கிருஷ்ணகுமார் மற்றும் ஜதீஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜ்மோகன், நிமலகுமார், ஆனந்தராஜா, பாமினி ஆகி யோரின் அன்பு மைத்துனரும், சுராஜ், றுகுனசாந், றுஷானி, சுஜிகலா, ஆரபி, அஷ்வினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கேஷினி அவர்களின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
"இதயபவனம்,"
கந்தையா உபாத்தியாயர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

(55856)(4.7.3)

தகவல்:
திருமதி கந்தசாமி,
செல்வி கிரிஜா கந்தசாமி.
077 951 9973

## உதவிப் பொருள்கள் வழங்கல் இன்று

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் பிறந்த தினத்தை முன்னிட்டு கல்வியங்காட்டில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.எம்.ஜி.ஆர் என்று அழைக்கப்படும் இசுந்தரலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். கல்வியங்காடு சந்தை வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் நினைவுச் சிலைக்கு விசேட மலர் அஞ்சலியைத் தொடர்ந்து இந்த உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

யாழ்.எம்.ஜி.ஆர் இ.சுந்தரலிங்கம் ஏற்பாட்டில் இந்த எம்.ஜி.ஆர். உருவச்சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(வ-17)

# ஜனாதிபதி தேர்தலும் பாப்பரசரின் வருகையும் அமைதி, நல்லிணக்கத்தை வலியுறுத்துகின்றன

## தேசிய சமாதானப் பேரவை தெரிவிப்பு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு வருகை தந்தமை என்பன நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதாக தேசிய சமாதனப் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாப்பரசர் தமது ஆரம்ப உரையில் இலங்கையில் வசிக்கும் சகல இனங்களுக்குமிடையில் சமாதானம், நல்லிணக்கம் ஆகியன ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தை அழுத்திக் கூறியுள்ளனர்.

இலங்கையில் போர் ஓய்ந்த போதிலும் அதன் பாதிப்புக்கள் தொடர்கின்றன. இடம்பெயர்ந்த மக்கள் தமது மீள்குடியமர்வுக்காக இன்னமும் காத்திருக்கின்றனர். காணாமற் போனவர்கள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்.

சிவில் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மக்கள் தமது அரசியல் உரிமைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மாறுபட்ட காட்சிகளைக் காண முடிந்தது. அரச ஆதரவாளர்கள் தீவிரமான பரப்புரைகளில் ஈடுபட்டனர். இவர்கள் போர் இடம்பெற்ற காலம் தொடர்பாகத் தெரிவித்துடன் தாம் சார்ந்திருப்பவர் தோல்வியடைந்தால் அது மீளவும் ஏற்படுமென மக்களை எச்சரித்தனர். இதைப் போன்ற பரப்புரைகள் சமூகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

பாப்பரசரின் இலங்கை வருகையை வேறுபட்ட மதப் பிரிவினரும் வரவேற்றுள்ளனர். இந்தச் சந்தர்ப்பம் ஒருவர் இன்னொருவர் மீது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசில் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல், நீர் முகாமைத்துவ அமைச்சராக பதவி பெற்றுள்ள ரவூப் ஹக்கீம் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு வைபவத்தில் பலர் கலந்துகொண்டனர். (ற-10)

# மோட்டார் குண்டு மீட்பு



வடமராட்சி, ஜன.17

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் நேற்றுக்காலை வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

மந்திகையில் இருந்து புலோலிக்குச் செல்லும் வீதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் இருந்தே இந்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை தோட்டத்துக்குச் சென்ற காணிச் சொந்தக்காரர் அங்கு காணப்பட்ட கற்களை அகற்றி துப்புரவு செய்தபோதே குறித்த மோட்டார் குண்டைக் கண்டுள்ளார்.

அதுகுறித்து பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, வெடிபொருள் அகற்றும் பிரிவுடன் குறித்த இடத்துக்கு வந்து மோட்டார் குண்டை மீட்டுச் சென்றுள்ளனர். (த-108-173)


**கணக்கீடு**

பிரத்தியேக வகுப்பு
(கல்வியங்காடு)
A/L-2015 துரித மீட்டல்
ஆரம்பம்: 17.01.2015 (சனி)
காலை 9.30
By A.KALAICHELVAN
077 694 4543
(A/L 2016, 2017 வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்) (55872) (4.3.7)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

My No: Np/14/41(15)/01/Tender/2015 Date : 17.January.2015.

### விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை. [illegible]01.2015ஆம் திகதி தொடக்கம் 05.02.2015ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல் chairmanvsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்ப மொன்றைச் சமர்ப்பித்து 19.01.2015 முதல் 05.02.2015 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைக்கேள்விகள் 06.02.2015ஆம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் 06.02.2015ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக் கேள்விகள் திறக்கப்படும்.
06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 27.01.2015 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | கந்தரோடை கந்தசாமி ஆசிரியர் வீதி திருத்தம் | 5.4 | 03 மாதம் | M7/C8 | 54,000.00 |
| 2 | புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் வீதி திருத்தம் | 0.808 | 03 மாதம் | M7/C8 | 8000.00 |
| 3 | ஏழாலை வடக்கு 2ம் குறுக்கு வீதி திருத்தம் | 2.289 | 03 மாதம் | M7/C8 | 22,000.00 |
| 4 | சுன்னாகம் புனித அந்தோனியார் வீதி திருத்தம் | 1.052 | 03 மாதம் | M7/C8 | 10,000.00 |
| 5 | உடுவில் வடக்கு காளி கோவில் வீதி திருத்தம் | 0.890 | 03 மாதம் | M7/C8 | 8000.00 |
| 6 | ஏழாலை தெற்கு முத்துமாரி அம்மன் வீதி திருத்தம் | 1.969 | 03 மாதம் | M7/C8 | 19,000.00 |
| 7 | சுன்னாகம் இராமநாதன் குறுக்கு வீதி திருத்தம் | 0.558 | 03 மாதம் | M7/C8 | 5000.00 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்




**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம் வழங்கும் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்**

அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நலவாழ்விற்கு மனவளக்கலை யோகாப்பயிற்சிகள்

1. எளியமுறை உடற்பயிற்சிகள் 2. எளியமுறை தியானப் பயிற்சிகள்
3. எளியமுறை காயகல்ப பயிற்சி 4. அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்கள்

காலம் : 17.01.2015 தொடக்கம் 22.01.2015 வரை மாலை 4.30 மணி தொடக்கம்

இடம் : நாச்சிமார் கோயில் கல்யாண மண்டபம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**அறிமுகவுரையும் பயிற்சி வழங்கலும்**

**அறிமுகவுரை:**

★ மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் அவர்கள்

**பயிற்சி வழங்குபவர்கள்**

★ மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்.
★ மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி A.தங்கராசா அவர்கள்.

**அகத்தாய்வு I**

17.01.2015, 18.01.2015 வரை சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி தொடக்கம் ஒரு மணிவரை வண்ணார்ப்பண்ணை மனவளக்கலை மன்ற அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி தினங்களில் நடைபெறவுள்ள யோகாப்பயிற்சிகளில் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

அலுவலக முகவரி:
கோவில் பிள்ளையார் வீதி,
1 ஆம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 772 6732, 077 123 5646,
071 440 3268, 077 736 8745.


## மோட்சதீப அழைப்பு



**அமரர் சாந்தலிங்கம் குணரத்தினக் குருக்கள்**



கடந்த 08.01.2015 சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சாந்தலிங்கம் குணரத்தினக் குருக்கள் அவர்களின் 11 ஆம் நாள் மோட்ச தீப கிரியை 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மோட்ச தீபம் வட்டக்கச்சி நாகதம்பிரான் ஆலயத்தில் வைக்க உள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

47/1, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

செய்திகள்

# டெங்கு ஒழிப்பு நேற்று தீவிரம்

## யாழ். நகரப் பகுதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.மாநகரப் பகுதியில் அதிகரித்துவரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் நேற்றுத் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த டெங்குக் கட்டுப்பாட்டு, நடவடிக்கையில் நேற்று ஐநூறுக்கும் மேற்பட்ட சுகாதாரப் பகுதியினர் ஈடுபடுத்தப்பட்டனர் என்று சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர், வண்ணார்பண்ணை, நாவாந்துறை,குருநகர் போன்ற பகுதிகளில் இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழு வீச்சில் இடம்பெற்றன.

இந்தப் பகுதிகளில் டெங்குத் தாக்கம் மிக அதிகரித்துள்ளதை அடுத்து, இதனை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்குப் பிரதேச பொது மக்களும் முழுமையாக ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நேற்றைய டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் யாழ். மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள், யாழ். மாநகர சுகாதாரப் பாதுகாவலர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டனர். (த-17)

## ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் வெளியாரிடம்

கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.அந்த வாகனங்கள் மீளவும் ஜனாதிபதி செயலகத்துக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த போது, ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்கள் பல வெளியாரின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை முறையற்ற விதத்தில் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இதனை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் சில இடங்களில், இந்த வாகனங்களைப் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு விற்பனைக்கான முயற்சிகளும் இடம்பெற்று வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரை ஒப்படைக்கப்படாத வாகனங்கள் இருந்தால் அவற்றை உடனடியாக ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கவும். அவ்வாறு ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில், இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## யாழ். சந்தைகளில் கணவாய் தாராளம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்.குடாநாட்டில் இருந்து பெருமளவானகணவாய்தெற்கே கொண்டு செல்லப்படுகின்றது.

தெற்கில் இருந்து வரும் கூலர் வாகனங்கள் மூலம் இந்தக் கணவாய் உட்பட சில கடலுணவுகள் தெற்குக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.


தற்போதுசந்தைகளில்கணவாயின் வருகை அதிகரித்துள்ளது.

யாழ்.குடாநாட்டுக் கரையோரப் பகுதி மீனவர்களின் வலைகளில் அதிகளவு கணவாய் இப்போது சிக்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் கணவாய் கிலோ 300 ரூபாவாக விலை குறைந்துள்ளது.

இந்த விலைச் சரிவைப் பயன்படுத்தித் தென்பகுதி கூலர் வாகனங்கள் வடக்குக்கு வருகை தந்து கூடுதலான கடலுணவுகளைஏற்றிச்செல்கின்றன.(த-17)

## 28 லட்சம் ரூபா காசோலை மோசடி



யாழ்ப்பாணம், ஜன 17

வியாபார நோக்கில் காசோலைகள் வழங்கி 28 லட்சம் ரூபா மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

22 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பெற்றுக் கொண்டு பணத்துக்குப் பதிலாகக் காசோலையைத் தந்து பணத்தை வங்கியில் வைப்பிலிடாது உள்ளவருக்கு எதிராக நல்லூரடியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேபோன்று மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர், தன்னிடம் 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பெற்றுப் பணத்துக்குப் பதிலாக காசோலையைத் தந்துவிட்டு இதுவரை உரிய பணத்தைத் திருப்பித் தரவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(த-4)

## யாழ்.பல்கலையில் பொங்கல் பண்டிகை



யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் தமிழர் திருநாளாம் தைத் திருநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய முறைப்படி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கலைப்பீட அனைத்து வருட மாணவர்களும்ஆர்வமாகக்கலந்துசிறப்பித்தனர். பாரம்பரிய அலங்காரத்துடன் காலை 9 மணியளவில் தமிழர் பாரம்பரிய இசைக் கருவிகள் முழங்க பாரம்பரிய விளையாட்டுக்களான மாட்டு வண்டில் சவாரி, முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், பட்டம் ஏற்றல் போன்றனவும் நடை பெற்றன. தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகள் அருகி வரும் நிலையில் கலைப்பீட மாணவர் ஒன்றியம் மேற்படி நிகழ்வை முன்னெடுத்தமை குறிப்படத்தக்கது. (த-4)

## தமிழ் வைத்தியரை நியமிக்கவேண்டும்

### கால்நடைப் பண்ணையாளர் கோரிக்கை

முல்லைத்தீவு,ஜன 17

ஒட்டுசுட்டானில் இயங்கிவரும் கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் சிங்கள வைத்தியரை மாற்றித் தமிழ் வைத்தியரை நியமிக்கும்படி கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

சிங்கள மொழியில் பணி புரிகின்ற வைத்தியருக்குத் தமிழ் தெரியாததால் பண்ணையாளர்கள் தமது குறைபாடுகளைக் கூறிச் சிகிச்சை பெறுவதில் சிரமம் ஏற்படுகின்றது. நாங்கள் கூறுவது அவருக்கு விளங்குவதில்லை. அவர் கூறுவது எமக்கு விளங்குவதில்லை எனவே – எமக்குத் தமிழ் தெரிந்த ஒரு வைத்தியரை நியமிக்க வேண்டும் எனப் பண்ணையாளர்கள் கோரியுள்ளனர். (த-500)

## மைத்திரி அரசினால் நிவாரணம் கிட்டுமா?

### வன்னி தொண்டராசிரியர்கள் எதிர்பார்ப்பு

முல்லைத்தீவு,ஜன. 17

பாதிக்கப்பட்ட எமக்கு புதிய அரசினால் நிவாரணம் கிடைக்குமா என முல்லைத்தீவு மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இது குறித்து அவர்கள்கூறுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 வருடங்களுக்கு மேல் எந்தவித ஊதியமுமின்றி தொண்டர் ஆசிரியர்களாகவும், சுகதாரத் தொண்டர்களாகவும் பணியாற்றினோம். நேர்முகத் தேர்வுகளில் தோற்றி சகல தகுதிகளுடனும் தெரிவு செய்யப்பட்டோம். ஆனால் நியமனங்கள் வழங்கும்போது அரசியல் காரணங்களால் பழி வாங்கப்பட்டு எமது பெயர்கள் நீக்கப்பட்டன.

இதனையே நம்பி இருந்த எமக்கு இது ஒரு பேரிடியாக அமைந்துள்ளது. நாம் நியாயம் கோரி உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியும், எந்தவித பயனும் கிட்டவில்லை. இதனை நம்பி நாம் வேறு எதற்கும் விண்ணப்பிக்கவில்லை. ஆகவே புதிய அரசு எமது கோரிக்கையை ஏற்று நிவாரணம் அளிக்குமா என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (த-500)

# மஹிந்தவின் சரணாகதி ஏற்கமுடியாதது

## சாடுகின்றார் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஜன.17

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதிகாரத்தை விட்டுக் கொடுத்தமை மிகப் பெரும் தவறு. மஹிந்த தலைமைத்துவத்தை மைத்திரிபாலவிடம் ஒப்படைத்து சரணடைந்தமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல – இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாயணக்கார.



ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து அரசு அதிகாரத்தை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது. இது அரசியல் ரீதியில் பெரும் தவறு– என்று அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும்புதியஅரசுடன்இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய கூட்டணிக் கட்சிகளுடன் எந்தவித இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை – என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிப்பிரமாணம் செய்து கொண்டவுடன், மிக அவசர அவசரமாக பிரதமர் ஒருவரை நியமித்தமை வழமைக்கு மாறானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தங்களுக்காக வாக்களித்த பெரும் எண்ணிக்கையிலான கட்சி ஆதரவாளர்களை உதாசீனம் செய்துள்ளது என்று கூறியுள்ள அவர், கட்சியின் தலைமைப் பதவியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விட்டுக் கொடுத்த விதம் தவறானது என்றும் விமர்சித்துள்ளார்.

5.7 மில்லியன் மக்கள் மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர் என்றும், ஆனால் மஹிந்த தலைமைத்துவத்தை மைத்திரிபாலவிடம் ஒப்படைத்து சரணடைந்தமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பாலியல் குற்றங்களுக்கு இனி கடும் தண்டனைகள்

## எச்சரிக்கின்றார் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு, ஜன.17



பாலியல் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரித்துள்ளார் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் ரோசி சேனாநாயக்க.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் புதிய அரசின் கீழ் தண்டிக்கப்படுவார்கள். பாலியல் வன்கொடுமைகள் உட்பட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் ராஜபக்ஷ அரசில் தண்டிக்கப்படவில்லை. ஊழல் மோசடிகளே அதற்குக் காரணம்– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை உச்ச அளவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ள ரோசி சேனாநாயக்க, சிறுவர், பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், வன்முறைகள் தொடர்பில் எந்தவித நெகிழ்வுப் போக்கும் காண்பிக்கப்படாது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ற)

# இராஜதந்திரிகளின் பதவிகளுக்கு வேட்டு

## அரசியல் ரீதியாக நியமனம் பெற்றோரை பதவி விலகுமாறு அறிவுறுத்தப்பட்டது

கொழும்பு, ஜன.17

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் அரசியல் ரீதியில் நியமனங்களைப் பெற்ற அனைவரையும் ஒருவார காலத்துக்குள் தங்கள் பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் பதவியேற்றதும், உடனடியாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்படும். அரசியல் ரீதியில் நியமனம் பெற்ற தூதுவர்கள் அனைவரும் உடனடியாக மீள அழைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறு அரசியல் நியமனங்களை பெற்றுள்ளவர்களை மீள அழைக்கும் பணியை முன்னெடுக்கும் போது, தூதரகங்களின் பணிகள் பாதிக்கப்படாத விதத்திலேயே அதனை முன்னெடுப்போம். வெளிநாடுகளுக்கான தூதரகங்களுக்கு எதிர்காலத்தில் நியமனங்களை மேற்கொள்ளும்போது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பின்பற்றிய முறையை நாங்களும் பின்பற்றுவோம். 70 வீதமான தூதுவர்கள் வெளிவிவகார சேவைக்குள்ளிருந்து தெரிவுசெய்யப்படுவார்கள். – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

30 வீதமானவர்கள் அரசியல் ரீதியிலான நியமனத்தைப் பெறுவார்கள், அரசியல் ரீதியில் நியமனம் வழங்கப்படும்போது கூட தகுதி, திறமை என்பவற்றை வைத்தே அதனை வழங்குவோம், விசுவாசத்திற்கு இடமில்லை – என்றும் அவர் தெரிவித்தார். (ற)



# அரசியல் அபிலாசையை மறக்க வேண்டாம்

**- விமல் வீரவன்ச**

கொழும்பு, ஜன.17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்த 58 லட்சம் வாக்குகளின் அரசியல் அபிலாசைகளை மறக்க வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களிடம் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான காரியாலயத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகச் சந்திப்பில் ஊழல் தொடர்பாக விமல் வீரவன்ஸ உட்பட முன்னாள் அமைச்சர் குழுவின் மீது தொடரப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. குற்றச்சாட்டுகள் இருப்பின் அது குறித்து முறையான விசாரணையை நடத்துமாறு அவர் பதிலளித்துள்ளார். (ற)

# பொருளாதார அமைச்சின் வாகனம் மீட்பு

கொழும்பு, ஜன.17

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான செகுசு வாகனம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், மதுரங்குளி பிரதேச சபையின் உறுப்பினருமான ஒருவரின் வீட்டில் இருந்தே இந்த பிராடோ ரக வாகனம் மீட்கப்பட்டுள்ளது.

முந்தல் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், குறித்த பிரதேச சபை உறுப்பினரின் வீடு சோதனையிடப்பட்டதுஎன்றும், அதன்போது குறித்த வாகனம் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# சிறுபான்மையினருடைய உரிமைகளை வழங்குக

## உலமா கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.17

சிறுபான்மை சமூகத்தினரின் வாக்குகளால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதால் சிறுபான்மையினருக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என உலமா கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெற்றி என்பது இந்த நாட்டின் நிலையான ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றியாகும். அரசு நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தலை நடத்தியதன் காரணமாக மக்கள் தமது ஜனநாயக உரிமையை தடையின்றி நிறைவேற்றியுள்ளார்கள். அதற்காக மஹிந்த தலைமையிலான அரசைப் பாராட்டவேண்டும்.

கடந்த காலங்களை விட வடக்கு மாகாண தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களித்துள்ளார்கள். நாட்டின் பல தேர்தல் தொகுதிகளைப் பார்க்கும் போது சிங்கள மக்கள் பெருவாரியாக வாழும் பெரும்பாலான பகுதிகளில் மஹிந்த வெற்றி பெற்றிருப்பதையும் தமிழ் முஸ்லிம்களின் பகுதிகளில் மட்டுமே பெரும் வித்தியாசத்தில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது.

தமிழ் முஸ்லிம் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார். இந்த நம்பிக்கையை அவர் தக்க வைத்து தமிழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளை இழுத்தடிக்காது உடனடியாக தீர்ப்பார் என நம்புகிறோம். அதற்குரிய வழிகளை அவரோடிருக்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் முனைப்புடன் செயற்படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகளை அவர்களிடமே வழங்குவதுடன் முழுமையான மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடில்லாப் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும். அதே போல் முஸ்லிம்களின் ஹலால் உரிமையை மீண்டும் வழங்குமுகமாக ஹலால் அனுமதிப் பத்திரம் வழங்கும் உரிமையை மீண்டும் ஜம்இய்யத்துல் உலமாவுக்கு வழங்குவதுடன் தாக்கப்பட்ட அனைத்து பள்ளிவாசல்களுக்கும் ஜனாதிபதி நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் உலமாக் கட்சி எதிர்பார்க்கின்றது – என்றும் தெரிவித்துள்ளார். (ற–10)

# மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டம்

61. பாடசாலைகளில் சமயத்தை போதிக்கும் சுற்றறிக்கையை அனைத்து பாடசாலைகளிலும் செயற்படுத்தல். அவ்வேலைத்திட்டத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு அனைத்து மத பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதான குழுவை நியமித்தல்.

62. சர்வதேச பாடசாலைகளை அரசகண்காணிப்புக்குஉட்படுத்தல்.

63. மீன்பிடிப் படகு, வலை மற்றும் படகு எஞ்சினுக்குத் தற்போது விதிக்கப்படும் அதிக வரியை அகற்றுதல்.

64. வெளிநாட்டுமீன்பிடிபடகுகள் இலங்கைக் கடல் எல்லையை கடப்பதைக் கட்டுப்படுத்தல்.

65. இறைச்சி ஏற்றுமதிக்கு இடைக்காலத்தடையுள்ளஐரோப்பிய சந்தையை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்.

66. காற்று மற்றும் கடலில் ஏற்படும் அசாதாரண நிலை தொடர்பில் சரியான தகவலை உடனடியாக மீனவருக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய காலநிலை அவதான வேலைத்திட்டத்தை தயாரித்தல்.

67. மூடப்பட்டுள்ள கால்வாய் கட்டமைப்பை மீண்டும் புனர்நிர்மாணம் செய்தல்.

68. குளங்களில் உள்ள சேற்றை அகற்றுதலை ஆரம்பித்தல்.

69. தற்போது புல் வெட்ட, வீதிகளை சுத்தப்படுத்த, ஓடைகளை சுத்தப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அதிலிருந்து மீட்டு முப்படையை இராணுவ வேலைக்கு மாத்திரம் ஈடுபடுத்தல்.

70. அரசியல்மயமாகியுள்ள பொலிஸ் பதவி உயர்வு வழங்கும் முறையை நீக்கி வினைத்திறன், இயலுமை, திறமை, அர்ப்பணிப்பு மற்றும் செயற்பாட்டின் பிரகாரம் பதவிஉயர்வை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

71. உப பொலிஸ் சேவையின் அதிகாரிகள் சேவைக்கு உள்வாங்கப்படும் போது அது வரை சேவையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கு ஏற்படும் பாதிப்பை நிறைவுசெய்தல் மற்றும். சேவையிலுள்ள பொலிஸ் அதிகாரிகளின் சிரேஷ்டத்துவத்தைப் பாதுகாக்கத் தேவையான திட்டத்தை முன்னெடுத்தல்.

72. அமைச்சர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாப்புக்காக முப்படையினரை ஈடுபடுத்தலை உடனடியாக நிறுத்துதல் மற்றும் சட்ட முறைமையிலான பொலிஸ் பாதுகாப்பை அவர்களுக்கு வழங்குதல்.

73. தோட்டப்புற மக்கள் தற்போது வாழும் வறுமையான லயன் அறை வாழ்க்கையிலிருந்து மீட்டு அவர்களுக்கு காணி உரிமையுடன் வீட்டு உரிமையையும் பெற்றுக்கொடுத்தல்.

74. பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை போன்ற மாவட்டங்களில் தோட்டப்புற மக்களின் பிள்ளைகளுக்கு தமிழ்மொழி மூலம் உயர் கல்வியைத் தொடரக்கூடிய வகையில் வசதியுடன் பாடசாலைகளை ஆரம்பித்தல்.

75. சட்டவிரோதமான முறையில் தமது வீடுகளில் மற்றும் காணிகளில் பல்வேறு காரணிகளுக்காக வெளியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

76. கொழும்பு நகரில் வீடு மற்றும் காணி அபகரிக்கப்பட்ட மக்களின் அச் சொத்தை மீள் மதிப்பீடு செய்து அதன் பெறுமதிக்கு தற்போது வழங்கப்படும் வீட்டுக்கடனில் கழித்தல்.

77. வீட்டு வசதியின்றி வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வீட்டு வசதி வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

78. வடக்கிலும் தெற்கிலும் ஜனநாயக ரீதியான சிவில் நிர்வாகத்தைச் செயற்படுத்தல்.

79. மத ரீதியாக பாகுபாடுகள் மற்றும் மத ரீதியாக வன்முறைகளைக் கட்டுப்படுத்த சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல்.

80. மத வழிபாட்டு தலங்களுக்குத் தேவையான காப்புறுதியினை வழங்குதல்.

81. மத ஒருமைப்பாட்டுக்காக செயற்படும் மற்றும் பிரிவினைவாதத்திற்கு எதிராக நேரடியாக நடவடிக்கை எடுக்கும் மதத் தலைவர்களை உள்ளடக்கிய பிரதேச மற்றும் தேசிய சபையை ஸ்தாபித்தல்.

82. தொல்பொருள் நிலையங்களைபாதுகாத்தலுக்கானவேலைத் திட்டத்தை ஆரம்பித்தல்.

83. ஸ்ரீ தலதா மாளிகை உள்ளிட்ட புண்ணிய பிரதேசங்களை அண்டிய பிரதேசத்தில் நடத்தப்படும் மதுபானசாலைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதுடன் அப்புண்ணிய பூமியைச் சுற்றிக் கார் பந்தயப் போட்டி நடத்துவதை உடனடியாக நிறுத்துதல்.

84. திட்டமிடப்பட்டுள்ள பௌத்த விகாரை மற்றும் தேவாலய சட்டமூலத்தில் மாற்றத்தைக் கொண்டுவருதல்.

85. சம்பிரதாய பிரிவென கல்வியை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துதலுக்காக மற்றும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.

86. சர்வதேச பௌத்த பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடித்தளத்தை இடுதல்.

87. மிருகவதையை தடுப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை.

88. பொருளாதார, சமூக அபிவிருத்தி, மனித உரிமை மற்றும் நல்லாட்சி போன்ற துறைகளுக்கு பொருத்தமான மக்கள் அமைப்புகளுக்கு தமது நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தற்போது உள்ள கட்டுப்பாட்டை அகற்றுதல்.

## அம்மாடியோவ் இத்தனை பரிசுகளுமா மெய்க்கா?

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை. கவிதை. கட்டுரை. ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை. ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. புகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10.11.12.13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6. 7. 8. 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3. 4. 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# தொடர்ச்சிகள்

## வடக்குத்

நாட்டில் சமாதானத்தை விரும்பி சிங்கள மக்களும் ஒன்றிணைந்து வாக்களித்து அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். நாட்டை ஜனநாயக அரசியல் ரீதியில் திசை திருப்பியுள்ளனர். கடந்த கால அரசால் பல பின்னடைவை மக்கள் எதிர்கொண்டுள்ளனர் – என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

மக்களின் சார்பாக வணிகர் கழகத்தினர் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். குறிப்பாக கடந்த 5 வருடங்களாக வடபகுதியில் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடந்த காலத்தில் வடபகுதியைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களின் பங்கீடு அபிவிருத்திகளில் இருந்ததில்லை. அரசியல் ரீதியாகவும் அரசியல் செல்வாக்குடனும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் கொண்டுவரப்பட்டனர். ஆனால் தொழிலாளர்களைக் கொண்டு வருவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. எனவே அபிவிருத்திகளின் போது வடபகுதியில் உள்ள ஒப்பந்தகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் – என்று அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

வடபகுதியில் ஏற்கனவே இயங்கி வந்த தொழிற்சாலைகளை மீள இயக்குவதுடன் ஒப்பந்தகாரர்களை மாவட்ட ரீதியாக தரத்துக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து பொருளாதார ரீதியாக உயர்வடைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

புலம்பெயர்நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற வேண்டியிருப்பதால் உல்லாசப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளது. இதனால் வர்த்தகம் பாதிப்படைந்துள்ளது. இதனை சரிப்படுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள 100 நாள் வேலைத்திட்டத்தை வரவேற்பதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று சிறிய தொழிலாளர்களுக்கு இலகு கடன் எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் சிறு தொழிலாளர்கள் பெரும் நன்மை அடைவர். அத்துடன் பனை அபிவிருத்தி சபை போன்ற முக்கிய சிறு தொழில் நிலையங்களை வடமாகாண சபையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்– என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (ந–14)

## மஹிந்தவின்

கட்சியின் முன்னைய தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ, கட்சித் தலைவர் பதவியிலிருந்து தான் மனப்பூர்வமாக விலகுவதாக தெரிவித்து வெளியேறினார். அதையடுத்து நேற்று பி.ப. 3 மணிக்கு இடம்பெற்ற அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் புதிய கட்சித் தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான மைத்திரிபால சிறிசேன, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொது எதிரணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டார். அப்போது கட்சியின் தலைவராகவும், ஜனாதிபதியாகவும் இருந்த மஹிந்த, மைத்திரிபாலவை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதாக அறிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். அதனையடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் மைத்திரிபாலவுக்கு ஆதரவளித்தனர். இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, ஜனாதிபதி மைத்திரிபாலவின் இல்லத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதே தினத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மஹிந்தவே கட்சியின் தலைவராகத் தொடர்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்படியான குழப்ப நிலைக்கு மத்தியில், கடந்த புதன்கிழமை இரவு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வீட்டில் இடம்பெற்ற சந்திப்பில், ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்துரையாடினர். அப்போது மஹிந்த ராஜபக்ஷ, தனது மகன்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று புதிய ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதுடன் தான் கட்சித் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதையடுத்து மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில், தனது கட்சி பிளவுபடுவதைப் பார்க்கத் தாம் விரும்பவில்லை என்றும், அதனால் புதிய ஜனாதிபதியிடம் கட்சியை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை, சுதந்திரக் கட்சியின் செயலர் அனுர பிரியதர்சன யாப்பாவுக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று மாலை இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், மைத்திரிபால கட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இந்தக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை. ஆயினும் அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார். (ந–5)

## வாய்

மகேஸ்வரி நிதியத்தின் பிரதிநிதி என்று அறிமுகப்படுத்திக் கொண்ட ரஜீவ் என்பவருடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு கட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திக்குமுக்காடிய அவர், பொதுமக்கள் யாராவது சொல்லட்டும் பார்க்கலாம் –என்றார்.

பொதுமக்கள் இதன்போது தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். இங்கு மணல் அகழ்வு செய்ய வேண்டாம். இதனால் எமது கிராமம் கொஞ்சம் கொஞ்சமாக கடலினுள் மூழ்கிக் கொண்டிருக்கின்றது. அத்திப்பட்டிக் கிராமம் போல காணாமற் போனாலும் போய்விடலாம். சுனாமித் தாக்கம் ஏற்பட்டால் நாங்கள் எல்லோரும் அழிந்து போய்விட வேண்டியதுதான் என்று தெரிவித்தனர்.

சரி இப்போது இவ்வளவு பேசுகின்றீர்களே. இவ்வளவு நாளாக ஏன் ஒன்றும் கதைக்கவில்லை என்று மகேஸ்வரி நிதியப் பிரதிநிதி ரஜீவ் கேட்டார். அதற்குப் பதிலளித்த மக்கள், நாங்கள் இதற்கு முதல் வாய் திறந்திருந்தால் எங்களைச் சுட்டிருப்பியளே' என்று கடுமையான பதிலைக் கொடுத்ததும் வாயை மூடினார் அந்தப் பிரதிநிதி.

இதன்போது பொலிஸார், இந்தப் போராட்டம் தொடர்பில் யாராவது உங்களை அச்சுறுத்தினால் தங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டனர். (த–5–109)

## தேசிய

மேற்கொள்வது தொடர் பாக ஆராய்ந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, பிரதமர் ரணில் விக்கிர மசிங்க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாச் பதியுதீன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸநாயக்க, ஜனநாயகக் கட்சியின்தலைவர்சரத்பொன்சேகா, ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க ஆகியோர் இந்தச் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் சபையின் முதல் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சபை கூடும் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன், "தேர்த லின்போது முன்வைக்கப்பட்ட நூறுநாள் வேலைத் திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பில் ஆராய்ந்தோம். அதற்குரிய பொறிமுறை என்ன என்பது தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அத்துடன் புதிய ஆட்சியை ஊழல் இல்லாத ஆட்சியாகக் கொண்டு செல்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது" – என்றார். (உ–5)

## வடக்கு

ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற முதலாவது பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தக் கட் டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது அமைதியான சூழல் காணப்படுவதால் இத்தகைய கட்டுப்பாடு தேவையில்லை என்று கருதுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஆயுதங்கள், இராணுவ சீருடைகள், வெடி பொருள்களைத் தவிர்த்து வடக்கு, கிழக்குக்கு விதிக்கப்பட்டிருந்த பொருள்களுக்கான விநியோகத் தடையையும் பாதுகாப்பு அமைச்சு நீக்கியுள்ளது. (ந–5)

## மரண அறிவித்தல்கள்

அன்னை மடியில்
22
09
1938



இறைவன் அடியில்
16
01
2015

### திரு. ராசா கந்தசாமி

(பிரபல வர்த்தகர்) பழைய வெங்கடேஸ்வரா வர்த்தக நிலைய உரிமையாளர்
இல. 90, பெட்டா டிரேட் சென்ரர், 4 ம் குறுக்கு தெரு, கொழும்பு - 11

மாதகல் அந்தோனியார் வீதியை பிறப்பிடமாகவும் இல. 70/2 - 3/2 புதுசெட்டி தெருவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. ராசா கந்தசாமி அவர்கள் 16.01.2015 அன்று இறைபதமடைந்தார். அன்னார் காலம் சென்ற ராசா, பாக்கியம் தம்பதிகளின் மகனும் காலம் சென்ற அம்பலவாணர், செல்லம்மா அவர்களின் மருமகனும் திருமதி பரமேஸ்வரியின் அன்பு கணவருமாவார். திரு ராசசேகரம் குணசேகரம், ரவி சேகரம் சந்திரசேகரம், ராஜேஸ்வரி, சிவஞானசேகரம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு தந்தையும், தாமரைசெல்வி, காஞ்சனா, தெய்வானைபிள்ளை, சுரேகா, சிரியா, அருள்ராஜன், சூரியகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மற்றும் பேரப்பிள்ளைகளின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இல. 70/2 - 3/2 புது செட்டி தெரு, கொழும்பு - 13 இல்லத்தில் ஞாயிறு காலை 8.00 மணிக்கு வைக்கப்படும். இறுதி கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
Tel: 0773143239 | 0773 055 850 | 0776 979 406 | 0112 320 543 | 0112 336 793

### திருமதி பாக்கியம் சுப்பையா



நல்லூர் வடக்கு, சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சுப்பையா நேற்று (16.01.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, நாகராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், விஜயரட்ணம், சிவானந்தம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், வரோஷன், வாகீசன், ரவிசங்கர் லலித்சங்கர், சுதாசங்கர், தீபாசங்கரி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சங்கர், ஜீவிதா, ஈஸ்வர், லோகன் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
021 300 2381

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கனகாம்பிகை சிவசிவாப்பிள்ளை



வண் கிழக்கு கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை சிவசிவாப்பிள்ளை நேற்று (16.01.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

862/6A,K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P.021 222 1685

(55877) (45.3.7)

### மரண அறிவித்தல்



திருமதி செங்கமலாசனி துரைசிங்கம் (பவானி)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செங்கமலாசனி துரைசிங்கம் (பவானி) நேற்று (16.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லைமன் லேன்,
மானிப்பாய்தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0772487676



# மீண்டும் கிண்ணம் வெல்வோம்

ஒருநாள் ஆட்டத்தில் முழுக் கவனம் செலுத்தவுள்ளதாகத் தெரிவித்த இந்திய அணித்தலைவர் டோனி, 2011 உலகக் கிண்ணத்தை வென்றது போல் இந்த உலகக்கிண்ணத்தையும் வெல்வோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதிய சீருடையின் அறிமுக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

உலகக்கிண்ணம் தொடர்பாக டோனி கூறும்போது; '2011 உலகக் கிண்ணத் தொடரில் ஆடிய ஆட்டத்தை மீண்டும் ஆடுவோம். ஆனால் ஆஸ்திரேலிய சூழ்நிலை வேறு, அதற்கேற்ப ஆடுவது அவசியம். உலகக் கிரிக்கெட்டின் வரலாற்றில் மெல்போர்ன் மைதானம் அற்புதமானது. என்ன விதமான ஆட்டமாக இருந்தாலும் மெல்போர்ன் சிறந்த மைதானமே. ஒருநாள் ஆட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக விளையாடிய விதத்தில் இன்னும் கொஞ்சம் மெருகூட்டவிருக்கிறோம். மார்ச் 29 ஆம் திகதி உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடுவோம்–கிண்ணம் வெல்வோம் என்று நம்புகிறேன்'–என்றார். (த–ரி)

# கிண்ணத்தைச் சுவீகரித்தது வண்ணார்பண்ணை காமாட்சி

கரணவாய்,ஜன. 17

கடும் போராட்டத்தின் பின் பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பின் மூலம் 2 இலக்குகளால் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது வண்ணார்பண்ணை காமாட்சி விளையாட்டுக் கழகம்.

கொம்மந்தறை விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த புதன் கிழமை இரவு கம்பர்மலை அ.த.க.வித்தியாலய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன.

இதில் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும்,வண்ணார்பண்ணை காமாட்சி விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக நிலக்ஜன் 23 ஓட்டங்களையும், செல்ரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிலக்ஜன்,சிந்து ஆகியோர் தலா 3 இலக்குக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 70 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய காமாட்சி விளையாட்டுக்கழகம் 5 இலக்குகளை மட்டும் இழந்து 2 இலக்குகளால் வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணி சார்பாக ஜெயரூபன் 15 பந்துகளில் 27 ஓட்டங்களையும், சிந்து 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் உதயா,அயன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும்– தொடர் ஆட்ட நாயகனாகவும் காமாட்சி விளையாட்டுக்கழக வீரர் சிந்து தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் வழங்கிக் கௌரவித்தார். (த–108)

# நவஜீவன்ஸ் - டயமன்ஸ் இறுதியாட்டத்தில் மோதல்

கரணவாய்,ஜன. 17

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் இடம்பெறும் 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும், சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

மறுநாள் இடம்பெறும் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த–108)

# நொந்துபோனார் மனுவல் நூயர்

உலகின் சிறந்த உதைபந்து வீரர்களுக்கான விருது கோல் காப்பாளர்களுக்குக்கிடைப்பதில்லை என்று ஜேர்மனி அணியின் கோல் காப்பாளர் நூயர் கவலை தெரிவித்துள்ளார்.

சர்வதேச உதைபந்து கூட்டமைப்பு சார்பில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த உதைபந்து வீரருக்கான விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருது இறுதிப்பட்டியலில் போர்த்துக்கல் வீரர் ரொனால்டோ, ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி மற்றும் உலகக்கிண்ணம் வென்ற ஜேர்மனி அணி கோல் காப்பாளர் மனுவல்நூயர் இடம்பெற்றனர். இதில் ரொனால்டோ முதலிடம் (37.66சதவீதம்) பெற்று விருதை தட்டிச் சென்றார். மெஸ்ஸி (15.76), நூயர் (15.72) அடுத்த இரு இடங்கள் பெற்றனர்.

இது குறித்து மனுவல் நூயர் கூறுகையில்; சிறந்த விருதைப் பெற,உதைபந்து என்று வரும்போது, எத்தனை கோல் அடித்தீர்கள்' என்று தான் கேட்பர்.

ஆனால் கோல் காப்பாளர் எப்படிச் செயற்பட்டார் என்பதை யாரும் கண்டு கொள்வது கிடையாது. திறமையாக விளையாடும் பட்சத்தில் ஏதாவது ஒரு வகையில் விருது கிடைக்கும். இதன் அடிப்படையில் தான் நான் பிபா'– 2014 உலகலெவன் அணியின் கோல் காப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டேன் என்று கூறியுள்ளார். (த)

## தொடர்ச்சிகள்

### பள்ளிவாசலுள்

மொஹம்மட் ருஷ்கி என்பரே கொலை செய்யப்பட்டவராவார்.

பள்ளிவாசலுக்கு வெளியே வீதியில் நின்றிருந்த ருஷ்கியை கூரிய ஆயுதங்களைக் கொண்ட குழுவொன்று தாக்கியது என்றும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ள ருஷ்கி பள்ளிவாசலுக்குள் ஓடிய போது துரத்திச் சென்ற குழு பள்ளிவாசலின் உள்ளே வைத்து அவரை சரமாரியாக தாக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் படுகாயமடைந்த ருஷ்கியை பிரதேசவாசிகள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்ப்பித்தபோதும் அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம்' குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ள பொலிஸார், தாக்குதல் இடம்பெற்ற பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள சீ.சீ.ரீ.வீ கமராக்களின் பதிவுகள் ஆராயப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளனர். இந்த விசாரணைகளை விசேட பொலிஸ் குழுவொன்று மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந–10)

### பதுக்கிய

நேற்று தனது கடமைகளை அலரி மாளிகையில் ஆரம்பித்தார். அதன்பின்னர் மாலையில் தனது கட்சி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதற்கு ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கலந்துரையாடலின் முடிவில் அலரி மாளிகையைச் சுற்றிப் பார்க்க அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன் போதேபெரும் தொகையான நகைகள், 500 மில்லியன் ரூபா வரையிலான பணம் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன.

அங்கு புதிது புதிதாக கட்டடங்கள் முளைத்திருப்பதும், ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு இணையாக அவை அமைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

அதனை விட அங்கு ஆயிரக்கணக்கான கணினிகள், அதற்குரிய 'மல்ரி பிரின்டேஸ்' என்பன பெருந்தொகையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் பல்வேறு முக்கிய கோப்புகளும் அங்கு காணப்பட்டுள்ளன.

அவற்றை நேரில் பார்த்த ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

"மஹிந்த குடும்பம் அனைத்தையும் கைவிட்டு, உயிரை மட்டும் எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களை இவ்வாறு விரட்டியடித்தது. உயிரிழந்த தமிழ் மக்களின் ஆத்மாக்களே. ராஜபக்ஷவினர் காப்பெட் வீதிகள் அமைத்தது போக்குவரத்தை இலகுபடுத்த வல்ல. மண்ணில் புதைக்கப் பட்ட எலும்புக் கூடுகள் வெளித் தெரியாது இருப்பதற்கே'– என்று கூறினார். (ந–5)

### விமான

நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாண வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகம் அல்லது பலாலி விமானம் நிலையம் ஊடாக இந்தியாவுக்கு செல்வதற்கான தொடர்பு வர்த்தகர்களுக்கு கிடைக்கப்பெற்றால் போக்குவரத்து முதலீடுகள் குறைக்கப்படும். மக்கள் எதிர்பார்க்கும் தரமான பொருள்களை உடனுக்குடன் இறக்குமதி செய்து வழங்கக் கூடியதாக இருக்கும் இதனால் இருநாட்டு வர்த்தகர்களளும் நன்மை அடைவர் – என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகம் இதனைக் கருத்தில் எடுத்து இரு நாட்டு அரசுகளுடனும் கலந்துரையாடி வர்த்தகர்கள் எதிர்பார்க்கும் தீர்மானத்தை எடுக்க வேண்டும். இதற்கு ஏனைய நாடுகளும் உதவி வழங்க வாய்ப்புள்ளதால் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந–14)

### மகேஸ்வரி

துக்கு எதிராக நேற்று மக்கள் நடத்திய போராட்டத்தில் இணைந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த நிதியத்தின் ஊடான சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பில் அப்போது யாரும் வழக்குத் தொடரத் தயாராக இருக்கவில்லை. நான் ஒருவர் ஊடாக இந்த வழக்கைத் தொடுத்தேன். ஆனால் அந்த வழக்கு நீதி மன்றில் எடுக்கப்பட்டு அரை மணி நேரத்திலேயே அந்த வழக்காளி காணாமல்போனார். அவரை அச்சுறுத்திப் பின் வாங்க வைத்தனர். இது மோசமான சட்டவிரோதச் செயற்பாடு"– என்று குறிப்பிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர்.

"இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மண் அகழ்வை ஒரு வரையறைக்குள் கொண்டுவர வேண்டும். அதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். கடந்த காலங்களில் இந்த மகேஸ்வரி நிதியத்தைப் பயன்படுத்தி சட்டவிரோத மண் அகழ்வு மூலம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக் கொண்ட பணத்தை மீளவும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்"– என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (ந–5,109)

### மன்னார்

கிழமை நியமிக்கப்பட்ட சம்பிக்க ரணவக்க அமைச்சில் நேற்று தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தார். தனது பணிகளை ஆரம்பித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னார் கடற்பரப்பில் இருந்து எண்ணெயை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தாமதமடைந்த நிலையிலுள்ளன. அதனை விரைவுபடுத்த வேண்டும். அவ்வாறு விரைவு படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் முன்னெடுக்கப்படும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் – என்றும் அவர் குறிப்பிட்டார். (ந–5)

### அலரி

பிரதமரின் அதிகாரபூர்வ வசிப்பிடமாகவும், செயலகமாகவும் இருந்து வந்த அலரி மாளிகையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வசிப்பிடமாக மாற்றிக் கொண்டிருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் பிரதமர் செயலகம் பிளவர் வீதியில் இயங்கி வந்தது.

மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில், மீண்டும் அதனை பிரதமரின் செயலகமாக மாற்றியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க. கடந்த வெள்ளிக் கிழமை புதிய பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக, சமய வழிபாடுகளின் பின்னர் நேற்று ஆரம்பித்தார்.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவி ஆகியோர் அலரி மாளிகையில் வசிக்கமாட்டார்கள் என்று பிரதமர் செயலகம் தெரிவித்துள்ளது. (ந–5)




# இந்திய அணிக்கு புதிய சீருடை

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியின் அதிகாரபூர்வமான சீருடை வெளியிடப்பட்டுள்ளது.

இதனை சர்வதேச கிரிக்கெட் சபையின் ஆடை வடிவமைப்பாளர்கள் நைக் வெளி யிட்டு உள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் தொடங்கும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கான சீருடை வெளியிடப்பட்டது.

புதிய சீருடை இலகுரக உறுதிப்பாட்டுடன் கூடிய உயர் செயல் திறன் கொண்ட ஆடையாக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து இந்திய அணித்தலைவர் டோனி கூறுகையில், இந்திய அணியின் புதிய சீருடை லேசானது, மிகவும் வசதியாக உள்ளது மற்றும் இந்த சீருடை மைதானத்தில் வீரர்களின் கவன சிதறல்களை குறைக்க உதவும் என்று தெரிவித்துள்ளார்.


நாளை ஞாயிற்றுகிழமை நடக்கும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்த ஆடையை இந்திய அணியினர் அணிந்து விளையாடுவார்கள். (த)

# இந்தியாவை திணறடிப்பேன்

முத்தரப்புத் தொடரில் இந்திய அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுப்பேன் என ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் குரிந்தர் சாந்து தெரிவித்தார்.

இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் இந்தியா, ஆஸ்திரேலியா ஆட்டம் நாளை தொடங்குகிறது. இதற்கான ஆஸ்திரேலிய அணியில் பஞ்சாப்பின் பரித்கோட் பகுதியை பூர்விகமாகக் கொண்ட குரிந்தர் சாந்து இடம் பெற்றுள்ளார்.

கடந்த 32 ஆண்டுக்கு முன் ஆஸ்திரேலியா சென்ற இவரது தந்தை ஆஸ்திரேலியாவின் குடியுரிமையை பெற்றார். இந்நிலையில் ஆஸ்திரேலிய தேசிய அணியில் இடம்பெற்ற முதல் இந்திய வம்சாவளி வீரரான 'வேகப்புயல்' குரிந்தர் சாந்து, காயமடைந்த மிட்சல் ஜோன்சனுக்குப் பதில் சேர்க்கப்பட்டார். தொடர் குறித்து அவர் கூறியது: 'இந்திய வீரர்கள் கோஹ்லி, ரோகித் சர்மா, டோனி, ரஹானே போன்றவர்களின் சமீபத்திய ஆட்டங்களை பார்த்தபோது, இவர்கலை ஆட்ட மிழக்கச் செய்வதென்பது மிகவும் சவாலான விடயம்தான். ஆனாலும் இயன்றவரை முயற்சி செய்து இந்திய வீரர்களைத் திணறடிப்பேன்.' என்றார். (த-ரி)




# இந்தியாவை வீழ்த்தி வரலாறு படைப்போம்

உலகக்கிண்ணப் போட்டியில் இந்தியாவை வீழ்த்துவோம் என பாகிஸ்தான் அணியின் மூத்த கிரிக்கெட் வீரர் யூனிஸ்கான் கூளுநரைத்துள்ளார்.

1975ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி தொடங்கிய நாளிலிருந்து இது வரை ஒரு முறை கூட பாகிஸ்தான் இந்தியாவை வீழ்த்தியதாக வரலாறு கிடையாது.

இதுபற்றி யூனிஸ் கான் கூறுகையில், 'வரலாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த முறை நாங்கள் அடிலெய்டில் நடக்கும் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி உலகக்கிண்ணத்தை வெல்வோம். விதியை மாற்றுவோம்.



அண்மையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில் நான் ஆடியபோது ரசிகர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அதே ஆச்சரியம் இந்த உலகக்கிண்ணப் போட்டியிலும் ரசிகர்களிடம் எழும். நல்ல பார்மில் உள்ள வீரர்கள் நிறைய பேர் எங்கள் அணியில் இருக்கிறார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் திறமையாகவும், பொறுப்பாகவும் விளையாடினால் நிச்சயமாக இந்தியாவை வீழ்த்தி விடலாம். ஆனால், இந்த முறை யார் கிண்ணத்தை வெல்வார்கள் என குறிப்பிட்டு சொல்ல முடியாது.

ஏனெனில் சமீபகாலங்களாக ஒருநாள் போட்டிகள் மாறி விட்டன. எனவே இந்த முறை யார் வேண்டுமானாலும் சம்பியனாக முடியும்.

விதிமுறைகள் மாறியிருப்பது பலம் வாய்ந்த அணிகளுக்கு சாதகமாக இருக்கிறது. நீங்கள் ஆஸ்திரேலியா அல்லது நியூஸிலாந்தை கூட நினைக்கலாம். அவை இரண்டுமே இந்த போட்டியை நடத்தும் நாடுகள். இது தவிர, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து அணிகளை எதிர்பார்க்கலாம். ஆனால், அவற்றை கூட சாதகமாக சொல்ல முடியாது.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதைப் பற்றி இப்போது நான் சிந்திக்கவில்லை. நான் இன்னும் விளையாடுவதை ரசிக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் இன்னும் சிறந்த காலங்கள் இருக்கிறது.

சர்வதேச போட்டியில் சாதனை படைக்கும் வாய்ப்பை முடித்துக் கொள்ள விரும்பவில்லை. ஓய்வு பெறுவது எனது தனிப்பட்ட முடிவு என தெரிவித்துள்ளார். (த)



# நியூஸிலாந்து- இலங்கை 3ஆவது பலப் பரீட்சை இன்று

நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்றைய தினம் நியூஸிலாந்தின் ஒக்லான்ட் மைதானத்தில் இடம்பெறுகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்தும் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணியும் வெற்றிபெற்றுத் தொடர் சமநிலையில் உள்ளது. இதனால் தொடரில் தனியொரு அணியின் ஆதிக்கத்தைத் தீர்மானிக்கும் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்த காரணத்தினால் ஆட்டத்தில் விறுவிறுப்புத்தன்மை காணப்படும். ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 க்கு ஆரம்பமாகும். (த-ரி)

# வாய் திறக்காத டோனி

இந்திய அணித்தலைவர் டோனி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது சர்வதேச டெஸ்ட் அரங்கில் இருந்து திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அனைத்து வடிவிலான (டெஸ்ட், ஒருநாள், 20 ஓவர்) கிரிக்கெட்டிலும் விளையாடுவதில் சிரமம் ஏற்படுவதால் டெஸ்டில் இருந்து டோனி விலகுகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவலை கிரிக்கெட் சபை தான் வெளியிட்டது. இருப்பினும் ஓய்வு முடிவு குறித்து வெளிப்படையாக டோனி கருத்து தெரிவிக்கவில்லை. இதனால் அணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்தியா பங்கேற்கும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டிக்கான நிருபர்கள் கூட்டத்தில் டோனி பங்கேற்றார். அப்போது நிருபர்கள் அவரிடம் டெஸ்ட் ஓய்வு முடிவு குறித்து கேள்வி எழுப்பினர். ஆனால் அதற்கு அவர் நேரடியாக பதிலளிக்கவில்லை. 'நான் சிறிது காலம் ஓய்வு எடுத்துவிட்டு அணிக்கு திரும்பி உள்ளேன்' என்று மட்டும் கூறியுள்ளார். மேலும் அவர் இந்திய அணியின் செயல்பாடு குறித்து தெரிவிக்கையில், நடப்பு சம்பியனான நாங்கள் அதுபோன்ற செயல் பாட்டை இந்த உலகக் கிண்ணத்திலும் கண்டிப்பாக காட்டுவோம். இந்திய சூழ்நிலையில் இருந்து தற்போது மாறுப்பட்டு இருந்தாலும் அதற்கு ஏற்றவாறு விளையாடுவோம் என்று தெரிவித்துள்ளார். (த)



# மின் நிலையங்களை பார்வையிட்டார் நீதிவான்

சுன்னாகம் உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் கிணற்று நீரில் கழிவுஓயில் கலப்பது தொடர்பில் நீதிமன்றில் 11 பேர் சேர்ந்து தாக்கல் செய்த வழக்கில் மின் உற்பத்தி நிலையங்களான நொதேர்ன் பவர், உதுறு ஜனனி என்பனவற்றை மூடிவிடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் எதிர் வரும் 27 ஆம் திகதி நீதிமன்று கட்டளை பிறப்பிக்கவுள்ளது.

இரண்டு மின் உற்பத்தி நிலையங்களையும் மல்லாகம் நீதிவான் எஸ்.சதீஸ்தரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளை அவதானித்துக் கொண்டார். கழிவு ஓயில் தொடர்பில் 11 பேர் தாக்கல் செய்த வழக்கு, சுகாதார வைத்திய அதிகாரிகள் தாக்கல் செய்த வழக்கு, பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு, பாதிக்கப்பட்டவர் கள் பொலிஸில் தாக்கல் செய்த வழக்குஎன நான்கு வழக்குகள் இடம்பெற்று வருகின்றன.

11 பேர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தாக்கல் செய்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. கடந்த தவணையின்போது மனு தாரர்கள் சமர்ப்பித்த வழக்கு உரிய முறையில் அமைய வில்லை என்று கூறிய எதிர்மனுதாரர்களின் சட்டத் தரணிகள் மனுவைத் தள்ளுபடி செய்யுமாறு நீதிமன்றிடம் கோரியிருந்தனர்.

அதற்கு உரிய ஆட்சேபனையைத்தெரிவிக்குமாறு நீதிமன்றம் மனுதாரர்களைக் கேட்டிருந்தது. அதன்படி அதற்குரிய ஆட்சேபனையை மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர். அதனைப் பரிசீலித்த நீதிமன்று எதிர்மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்து வழக்கைத் தொடர அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் மின் உற்பத்தி நிலையங்களை மூடுமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பானகட்டளை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-4)


BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

தைப் பொங்கலை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் கற்கை நெறிகள்

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரி பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

18/01/2015 @ 11am 20/01/2015 @ 9 am
19/01/2015 @ 3 pm 21/01/2015 @ 12 pm

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935



**Spoken English**

- 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இணைய முடியும்
- அடிப்படையிலிருந்து இலகு முறையில் கற்பிக்கப்படும்.
- பயிற்சி நெறி முடிவில் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட முடியாவிடின் உங்கள் பணம் திருப்பித்தரப்படும். (நிபந்தனை உண்டு.)

ஆரம்பம்:19.01.2015
பிரிவு I 4pm-5.30pm (திங்கள் & புதன்)
பிரிவு II 8 am-9.30am (சனி & ஞாயிறு

குமாரசாமி வீதி, யாழ்.பல்கலைக்கழகம் முன்னால்
by T.Kuna 075 839 1816/076 717 0586



**MOBILE PHONE REPAIRING COURSE**

(கையடக்க தொலைபேசி திருத்தம் பாடநெறி)

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

**4 days course**

புதுப் பொலிவுடன் யாழ். நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/= இற்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய நிரந்தர ஆசிரியருமான Ganesh.K

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும்.
நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi Lane, Jaffna.
T.P: 021 7904468
Mo: 0777444225



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**aat (Sri Lanka)**

Foundation, intermediate, final AA1, AA2, AA3

Qualification:- G.C.E O/L 6 PASSES
Medium - TAMIL & ENGLISH

Further Details:

JAFFNA COLLEGE
Underaduate Dept.
164, Hospital Road, Jaffna.
021 222 3382



**தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0766687672

**காணி விற்பனைக்கு**

நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகிலும் யாழ். கல்வி வலயத்துக்கு அருகிலும் நல்லூர் செல்லர் லேன், செம்மணி வீதியில் நிலப்பரப்பு 1½ ஒரு குளி வருமானம் நிறைந்த வெறும் காணி விற்பனைக்கு தொடர்பு- 0777 432645

**தவறிவிட்டது**

மாதகல் கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் கிருஸ்ணராஜா ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் யாழ்.நகருக்கும் மாதகலிற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு: 0770105556


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ★ 15 . 03 . 1936



மறைவு ★ 20 . 01 . 2012

மீசாலை

### திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்-தென்மராட்சி வலயம்)

திதி: அபரபக்க துவாதசி (17.01.2015)

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் மூன்றாகித் தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**குடும்பத்தினர்.**

"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.


**HigherStudy.lk** குறைந்த செலவில்

**Study in Europe (Latvia)**

**Spot Admissions**

Top University Degrees
Bachelors| Masters | MBA |PhD

- Schengen Visa உத்தரவாதம் (France, Germany, Norway, Denmark, Austria)
- A/L 3 passes கட்டயமானது

கற்கைநெறிகள் - Medicine, IT, Engineering, Business, Humanities, Natural Sciences, Arts, Social Sciences (English Medium)

Latvia அரச பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளை நேரடியாக சந்தித்து அனுமதிகளை பெறும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு:

+94 774 083 570

IELTS தேவையில்லை

No. 55 College Road, Neeraviyady, Jaffna.

www.higherstudy.lk enquiry@higherstudy.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.